# இந்து மகள்



1989

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

# இந்து மகள்

(கல்லூரி ஆண்டுச் சஞ்சிகை)

மலராசிரியர்:

நா. யோகராசா

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

பருத்தித்துறை.

1989

# கல்லூரிக் கீதம்

பல்லவி

வட இந்து மங்கையர் கல்லூரி
வாழிய வாழி நீடூழி (வட)

அநுபல்லவி

ஆழி யிறைவன் அருள்நிதம் பாடி
பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும் (வட)

சரணம்

ஈழநன் னாடாம் எங்கள் பொன்னாட்டில்
திருவளர்ந் தோங்கிடும் பருத்தித் துறையாம்
தாழ்விலாத் தலத்தில் தவநெறிச் சங்கம்
தமிழ்மகள் மாண்புறத் தரணியி லருளிய (வட)

செந்தமிழ் முதலாஞ் சிறந்தநற் கலையும்
சிந்தையை யேற்றும் நந்திரு மறையும்
எந்தத் துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி
தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும் (வட)

மங்கையர் பண்பும் இங்குநாம் பயின்று
நங்குலம் தழைக்க நாடும் செழிக்கப்
பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்
எங்கணும் சேவைகள் செய்திட வளரும் (வட)

பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே
பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே
அன்பெனும் நிலவைப் பொழிபவள் பெண்ணே
இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே
நன்மணி விளக்கே மாற்றுயர் பொன்னே
மன்னுயிர் சேவையே தன்னுயி ரென்னும் (வட)

Mrs. L. Kumaraswamy
4/6/90
Presented to the Library.

MARADCHY ... GIRL'S CO...
LIBRARY



## சமர்ப்பணம்

காலத்தை
ஆளும்
எங்கள்
கல்வித்தாய்க்கு
இந்தக்
கனகமணிச்
சரம்.

வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர்

## திரு. பொ. வீரபத்திரன் அவர்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி

வடமராட்சியின் கல்விப்புலத்தில் சிறப்புற்று விளங்கும் பாடசாலைகளில் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியும் ஒன்று. கல்வியுடன், பல்வேறு புறநிகழ்வுகளிலும் பங்கேற்று சிறந்து விளங்குகிறது. அதன் பணிகளில் ஒன்ருக, தற்போது "இந்து மகள்" எனும் கல்விச் சஞ்சிகையை வெளியிடுகின்றது.

மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்று சேரும் இருவழித் தொடர்பு அரங்கமாக பாடசாலை எப்போதும் திகழவேண்டும். அப்போதுதான் இலக்குகள் அடையப்படும். அதற்கான அக, புற நிகழ்வுகளில் சேர்ந்தியங்கவேண்டும்.

மாணவர்களின் கல்வி விருத்தியில் நூல்களின் பங்கு இன்றியமையாதன. அவர்களின் ஆக்கத் திறன்களை, சுயவெளிப் பாடுகளை வெளிப்படுத்தும் களம் ஒன்று அவசியம். அறிவுசார் எண்ணங்களை பல்வேறு முனைவுகளில் வெளிப்படுத்தும் சாதனமாக சஞ்சிகை அமைகின்றது.

"இந்து மகள்" என்னும் அழகான, கருத்துள்ள இச்சஞ்சிகையில் பல்வேறு அம்சங்கள் அமைந்துள்ளன. பாராட்டுக்குரிய இச்சஞ்சிகை வெளிவர முன்னின்றுழைத்த ஆசிரியர், மாணவர் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. இறைவன் அருளால் தொடர்ந்தும் இவ்வாருன சஞ்சிகை வெளிவர வாழ்த்துகின்றேன்.

பொ. வீரபத்திரன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

உ. க. பணிப்பாளர் அலுவலகம்,
வடமராட்சி, பருத்தித்துறை.
18-12-1989

## கொத்தணி அதிபர் வழங்கிய
## ஆசிச்செய்தி

"இந்து மகள்" என்னும் சஞ்சிகை வட இந்து மகளிர் கல்லூரியினால் வெளியிடப்படுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். பல ஆண்டுகளுக்குப் பின் எடுக்கப்படும் இக் கைங்கரியம் பாராட்டக்கூடியது. இப்பணியை நிர்வாகத்தினர் தொடர்ந்து ஆற்றிச் சஞ்சிகை பல்வகை அம்சங்களும் அடங்கியதாக பாடசாலையின் முன்னேற்றத்தையும், மாணவர் பெறும் பெறுபேறுகளையும் பிரதிபலிக்கக் கூடியதாக அமையுமாயின் பெற்றோரும், ஏனையோரும் கல்லூரியின் சிறப்பினை அறிய முடியும்.

"இந்து மகள்" கல்விமான்கள், பழைய மாணவர், தற்பொழுது கல்வி பயிலும் மாணவர் ஆகியோரின் ஆக்கங்களைத் தாங்கி வருவது பல்வகை அணிகள் அணிந்து உலாவரும் ஒரு மடந்தைக்கு ஒப்பாகும். எல்லாவகைச் சுவைகளையும் தரக்கூடிய வெவ்வேறு துறைகளும் அதில் இனிவரும் ஆண்டுகளிலும் இடம் பெறவேண்டும். அத்தகைய சஞ்சிகை பாடசாலை வரலாற்றை எடுத்துக் காட்டும் ஒரு கண்ணாடியாயின், அதை ஒரு பொக்கிஷமாகப் பாதுகாத்துத் தம் எச்சங்களுக்குக் கொடுப்பர்.

இச்சஞ்சிகையை வெளியிடும் ஆசிரியர் குழுவைப் போற்றுவதுடன் "இந்து மகள்" ஆண்டு தோறும் வளர்ந்து வரவேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

சே. ஏகாம்பரநாதன்
(கொத்தணி அதிபர்)

வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.
89 - 12 - 03

# பொருளடக்கம்


அதிபர் அறிக்கை ... 09
சரம் தொடுத்தவர் குரல் ... 11
இந்து மகள் ... ... ... 13
இசையெனும் பொதுமொழி ... ... ... 14
மாணவர் வாழ்க்கையில் சாரணர்களின் பங்கு ... ... 16
ஐந்தொகை சொல்வர்க்கம் ... ... ... 17
தமிழ் மொழி ... ... ... 18
கற்பித்தல் உத்திகள் ... ... ... 19
வாழ்க்கையில் மனைப்பொருளியலின் பங்கு ... ... 26
மழைக்காட்சி ... ... ... 28
தமிழகத்தில் ஒரு தமிழ்க் கடல் ... ... ... 29
நல்வாழ்விற்கு வழி ... ... ... 33
தாகூரும் சாந்தி நிகேதனும் ... ... ... 36
A Holiday Trip ... ... ... 41
Birds are wonderful ... ... ... 42
My Favourite Person ... ... ... 43
My Pleasant Experience with our Family Friends from India... ... 44
The Wonders of Science ... ... ... 45
My Ampition in Life ... ... ... 46
The Hand that Rocks the Cradle Rules the world ... ... 47
Babuji ... ... ... 48
Reminiscenses ... ... ... 49
The Importance of Conserving the Natural Vegetation ... 51
The Tourist attactions in Sri Lanka ... ... 52
பாடசாலையில் சமயக் கல்வி ... ... ... 53
தமிழ்மொழி ... ... ... 55
திக்கற்றவனுக்கு தெய்வமே துணை (சிறுகதை) ... ... 56
யாழ்ப்பாண மாவட்ட சனத்தொகை அமைப்பும், தொழில் வாய்ப்புக்களும் ... 58
மாணவரின் விருத்திக்கு வழிகாட்டும் ஆசிரியர் ... ... 64
சிறு நடுத்தர அளவிலான கைத்தொழில் கடன் வசதிகள் ... ... 66
இடிப்பஸ் கோட்டம் ... ... ... 71
இலண்டனிலிருந்து ஒரு இதயம் ... ... ... 74
மறக்க முடியாத சம்பவம் ... ... ... 76
சைவ மன்ற அறிக்கை ... ... ... 80
விளையாட்டுக் கழக அறிக்கை ... ... ... 81
சாரணியர் அறிக்கை, சிறுதோழர் குழு அறிக்கை ... ... 82
உயர்தர மாணவர் ஒன்றியம் ... ... ... 83
மனைப் பொருளியல் மன்ற அறிக்கை ... ... ... 84
விஞ்ஞானக் கழக அறிக்கை ... ... ... 85
பாரதி கண்ட தமிழ் ... ... ... 86
யார் பெரிது (உருவகக் கதை) ... ... ... 88
புத்தர் அருளிய புனித நெறி ... ... ... 89
Our Examinations Results ... ... ... 95
உங்கள் நோய்களுக்குச் சில அறிவுரைகள் ... ... 96
கலை; விஞ்ஞானம் - சில கருத்துக்கள் ... ... ... 100
மன நெருக்குவாரங்கள் ... ... ... 101
எம்மை நெருங்கும் கல்வி......... .. ... ... 102

அன்னையெனும் அதிபர்



திருமதி. சி. சுப்பிரமணியம்

B. A. (Lond.) Dip-in- Ed. (Cey.)

# அதிபர் அறிக்கை — 1988 - 1989

எமது கல்லூரிச் சஞ்சிகையான 'இந்து மகள்' பல ஆண்டுகளாக வெளிவராமற் போனமைக்கு நிதிப் பற்றுக்குறை காரணமாக இருந்தது. 1982ஆம் ஆண்டு பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அவர்களினதும் அவர் பாரியாரினதும் பெரு முயற்சியால் எமது கல்லூரிக் கல்வி வளர்ச்சிக்கென ஒரு கல்வி நிதி உருவாக்கப்பட்டது. அதன் மூலதனமான 56,000 ரூபா இன்று 119045/06 ஆக இருப்பில் இருக்கிறது. அந்த நிதி, பிள்ளைகளுக்குப் பல்வேறு துறைகளிலும் பரிசளிக்கவும், கல்லூரிச் சஞ்சிகை வெளியிடவும் பயன்படுத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பு நிலை காரணமாக சஞ்சிகை வெளியிடமுடியாமற் போய்விட்டது. இன்று இறையருள் கைகூட மலர் வெளிவருகிறது. அத்தருணத்தில் இவ்வறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்வு அடைகிறேன்.

## மாணவர்கள்

சகல பாடங்களிலும் உயர்தர வகுப்பு வரை கற்கக்கூடிய இக் கல்லூரியில் 1678 மாணவர்கள் கல்விபயில்கின்றனர். 1988ஆம் ஆண்டின் க. பொ. த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அதிசிறந்த நிலையை இங்கே வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

| கணிதம் | உயிரியல் | கலை | வர்த்தகம் |
|---|---|---|---|
| A 2 CS | 2 A B C | B 3 C | A3C,2B2C |

1988ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இடம்பெற்ற ஆறு பாடங்களிலும் 6 D யை ஒரு மாணவியும், 4 D 2 C யை 4 மாணவிகளும் பெற்றனர்.

5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 1988இல் 5 மாணவர்கள் தகுதி பெற்றனர்.

## பிரச்சினை

தனியார் பாடபோதனை நிலையங்களால் மாணவர்கள் ஈர்க்கப்படுவதால் காலையில் மாணவர்கள் உரிய நேரத்திற்குக் கல்லூரிக்கு வரமுடியாமையும், புறவாக்க முயற்சிகளில் கவனம் செலுத்த முடியாமையும் இன்றைய பிரச்சினையாகும். ஆயினும் தனியார் பாடபோதனை நேரங்கள் கட்டுப்படுத்தப்படலாம் என்ற செய்தி எமது பிரச்சினைக்குத் தீர்வாக அமையலாம் என நம்புகிறேன்,

## முயற்சிகள்

1988ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டியில் ஐந்து மாணவிகள் இறுதிநிலைப் போட்டியில் பங்குபற்றி மூவர் வெற்றியீட்டினர்.

1989ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் பொன் விழாவையொட்டி நடாத்தப்பட்ட ஆங்கிலக் கட்டுரைப் போட்டியில் எமது கல்லூரி மாணவி முதலாம் பரிசிலைப் பெற்றுள்ளார்.

1988ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சபை நடத்திய ஆங்கிலக் கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பரிசை இருவர் பெற்றனர்.

1988ஆம் ஆண்டு அரசாங்கத்தால் எமக்கு குழு வாத்தியக்கருவி அளிக்கப்பட்டது. எமது மாணவர்கள் குறுகிய காலப் பயிற்சியில் சிறந்த முறையில் பாடசாலை நிகழ்ச்சிகளின் போது இசைவிருந்தளிக்கின்றனர். ஆயினும் இதனைப் போதிப்பதற்கு மேல்நாட்டு இசையில் வல்லுநர் ஒருவரை நியமிக்குமாறு கல்விப் பணிப்பாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஆசிரியர்கள்

தற்சமயம் எமது கல்லூரியில் பணியாற்றும் 54 ஆசிரியர்களில் 21 பேர் பட்டதாரிகள் 27 பேர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். உடற்பயிற்சி, வாசிகசாலைப் பொறுப்பு ஒன்றிணைந்த பாடநெறி என்பவற்றிற்கு . ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எல்லா

மாக 10 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் ஆண்டு தோறும் 12,000 ரூபா வசதிக் கட்டணத்தில் இருந்து வசதிக் கட்டண ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகின்றது. இந்த வீண் விரயத்தைத் தவிர்ப்பதற்கு எமது கல்லூரிக்கு நிரந்தர ஆசிரியர்களைத் தந்துதவுமாறு கல்விப் பணிப்பாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

### கட்டடம்

மாணவர்கள் பிரார்த்தனை வேளைகளில் ஒன்று கூடுவதற்கு விசாலமான மண்டபம் ஒன்று தேவைப்படுகிறது. அத்துடன் கல்லூரி விழாக்களுக்குப் பெற்றோரை அழைக்க முடியாதிருப்பது வருந்தத்தக்க விடயமாகும். பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 3 மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு 1986ஆம் ஆண்டு அத்திவாரம் இடப்பட்டு வேலை தொடங்கப்பட்டது. அதனை விரைவில் நிறைவு செய்து தரும்படி கல்விப் பணிப்பாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

### மைதானம்

எமக்கு ஒரு விசாலமான விளையாட்டு மைதானம் இல்லாதது நீண்டகாலமாக பெருங்குறையாக இருக்கிறது. இதனால் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளை தொடர்ந்து நடத்துவதற்குப் பெருஞ் சிரமப்படுகிறோம்.

### விடுதி

1953ஆம் ஆண்டு திருவாளர் அ.பொன்னையா அவர்களால் தமது மகன் திருநாவுக்கரசு அவர்களின் நினைவாகக் கட்டி, எமது கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட விடுதி 1984ஆம் ஆண்டுவரை நன்கு நடைபெற்று வந்தது. நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 1984ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மூடப்பட்டது. விடுதிக் கணக்கில் வங்கியில் ரூபா 2089—91சதம் இருப்பில் உண்டு.

### பாடசாலை அபிவிருத்திச் சபை

பாடசாலை அபிவிருத்திச் சபையின் கல்வி நிதி பற்றி முன்னர் கூறப்பட்டது. பொது வகையிலும் இச் சபை சிறந்த சேவையாற்றி வருகிறது. சபையின் கணக்கில் ரூபா6998/76 சதம் இருப்பில் உள்ளது.

### பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

இச் சங்கம் எமது கல்லூரி மாணவருக்கு நியாயமான விலையில் காகிதாதி, துணி வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பன வற்றை விநியோகிக்கிறது. வருடா வருடம் சராசரி ரூபா 3000–00 த்தை இலாபமாகப் பெறுகிறது. இலாபத்தின் 10 வீதத்தை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பேறு பெற்ற மாணவிக்கு அன்பளிப்புச் செய்கிறது. விற்பனையாளருக்கு ஒரு மாதச் சம்பளத்திற்குச் சமமான பணத்தை, ஊக்குவிப்புப் பணமாக இலாபத்திலிருந்து கொடுக்கிறது.

### சாரணர் இயக்கம்

இவ்வியக்கத்தில் 36 சாரணியர்களும் 20 சிறு தோழர்களும் உளர். இவ்வியக்கத்தைச் சார்ந்த மாணவர், ஆசிரியர்கள் ஆண்டு தோறும், பாசறைப் பயிற்சி விழா என்பனவற்றில் கலந்துகொள்வர்.

### நன்றி

வடமராட்சிப் பகுதிக்கு, இந்துப் பெண்கள் கல்லூரி அவசியமென உணர்ந்து 1944ஆம் ஆண்டு இதனை உருவாக்கிய இப் பகுதிக் கல்விமான்களுக்கும், இது சுடர் விட்டுப் பிரகாசிக்க உதவிய பெரியோர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களுக்கும், முன்னாள் அதிபர், ஆசிரியர்களுக்கும், இன்றைய எனது சகாக்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும், என்னுடன்ஒத்துழைத்த ஏனையோருக்கும் எனது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி சி. சுப்பிரமணியம்**
அதிபர்

***

# சரம் தொடுத்தவர் குரல்

காலங்கள் பிறந்தன. கலண்டர் கடதாசிகள் கிழிபட்டன. கிழிபட்டவை மலைக் குவியலாக. அக் குவியலால் மறைக்கப்பட்டவர்களாக நாங்கள். அந்த நீண்ட காலங்களின் மறைவுகளுக்கு அவ்வப்போது சமகாலச் சந்தர்ப்பங்கள் கைகொடுத்தன. அசாதாரண சம்பவங்களைச் சாட்டிச் சாட்டி சாதாரணங்களை வராமல் தடுத்தவர்கள் நாங்கள், தூக்கத்தைக் கலைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. இனிமேலும் சாதிக்காமல் இருந்துவிட முடியாது. காலம் எதிர்பார்த்து இருக்கின்றது. கனக்கச் செய்ய வேண்டியுள்ளது.

கல்வித் தடத்தில் நடைபயில ஏராளம் பிள்ளைகள் காத்திருக்கின்றனர் ஆவலுடன். பழைய தடங்கள் மூலமும், புதிய தடங்களை உருவாக்கியும், தடங்கல்களைத் தகர்த்தெறிந்து விதி வரையப்போகும் பிள்ளைகளுக்காக ஏதாவது செய்யவேண்டுமே! கல்விக் கருத்தேற்றும் சாதனங்கள் நிலைத்த அறிவுத் தேடலுக்கு அவசியம். அவற்றின் முதன்மைப் பங்கு நூல்களுக்கே. நூலகங்களில் நிறைந்திருக்கும் நூல்களைக்கொண்டு அறிவுகளைத் தேடலாம். இது அறிதல் ஆகின்றது, ஆக்கத் திறன் என்பது மாணவர்களில் ஏற்படவேண்டாமா? அவர்களின் மன எழுச்சிகளை, அழகியல் உணர்வுகளை, சமூக அசைவுகளின் தரிசனங்களை பிள்ளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்காத கல்வி, அதன் கருத்துக்கே களங்கத்தை ஏற்படுத்திவிடும்.

நாட்டை ஆள்பவராக, வீட்டை ஆள்பவராக, எழுத்தாளனாக, கலைஞனாக திசை முகங்கொண்டு திகழப்போகின்றவர்களை அப்பணிகளுக்குத் தக்கவர்களாக தயார்படுத்தி உதவிடவேண்டியது கல்விக்கூடங்களின் தலையாய பணி. யுகத்தின் புருஷர்களை உருவாக்குதலில் கல்விக் கோயில்கள் கருணைப் புலங்கள் ஆகின்றன. அங்குள்ள அர்ச்சகர்கள் அதற்காக உழைக்க வேண்டும்.

நாங்கள் ஆக்கத் தெரியாதவர்கள் அல்லர். ஆக்க அனுமதிக்கப்படாதவர்கள். கொய்யப்பட்ட அரும்புகள் எப்படிப் பூப்பூக்கும் இந்த நந்தவனத்தில்? வனத்தின் மத்தியில் உன்னதப் பூ மலர்ந்த காட்சி கண்டவர்கள். தொலைந்துபோன எங்கள் காலத்தை மீட்கவேண்டாமா?

எங்கள் மண் மீண்டும் வாசனை கொள்ள வேண்டாமா? அதற்கான ஆயத்தங்களை பல முனைப்புக்களில் ஏற்படுத்த வேண்டும் பாடசாலையின் முன்றலிற்தான் இது சாத்தியமாகும்.

கைவிரல்களின் கணிப்புக்கு எப்போதோ விலகிப்போன காலங்களின் பின் மீண்டுமொரு கருத்தரிப்பு. ஆயிரக்கணக்கான பிள்ளைகள் உள்ள நிறுவனங்கள் வருடத்துக்கொருமுறை ஒரு நூல் வெளியிடக்கூடாதா? அல்லது முடியாதா? நிச்சயம் முயலவேண்டும். இனி வரும் காலம் இதற்கு வாய்ப்பாக வேண்டும்.

எமது பாடசாலைக்கு ஒரு சஞ்சிகை வெளியிடவேண்டும் என்பதில் அதிபர் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம். அதன் பின்புலத்தில் விளைந்த தோட்டத்து மலர்களால் தொடுக்கப்பட்ட சரமே இது. மிகவும் கஷ்டமான காலப்பகுதி தொடங்கும் போது அதிபராக வந்து கஷ்டத்தின் மத்தியிலும் பாடசாலையை வெற்றியுடன் நடத்தி பல்வேறு புற நிகழ்வுகளிலும் ஆர்வம் காட்டுபவர் எமது அதிபர் திருமதி சி. சுப்பிரமணியம் அவர்கள். அவரின் மூல முயற்சி நன்றிக்குரியது.

முயற்சியில் ஈடுபடும் எவரும் இசைகளுக்கும், வசைகளுக்கும் இலக்காதல் காலத்தின் கட்டளை. பணிகளை ஒப்படைத்தல்; ஒப்படைத்தபின் சுதந்திரம்; இவைதான் இனிப்புக்களுடன் கூடிய ஜனிப்புக்களைத் தரும். அப்போதுதான் விளைவு தனிச்சிறப்புறும். இச் சஞ்சிகையைப் பொறுத்தவரை

பெருமளவு தற்துணிவுடன் செயற்பட்டுள்ளேன். மரபு, மரபு...... இதைச் சொல் சொல்வதே மரபாகிப்போன சிறையைத் தகர்க்க நான் தயங்கவில்லை. இச் சரத்துக்கு பெருமளவு பெறுமானம் இருக்கவேண்டும். வெறும் புள்ளிவிபரத் திரட்டுத்தான் சஞ்சிகை. அதற்குத்தான் ஆசிரியர். இப்படியான ஒரு நிலையை நான் சந்திக்கத் தயாராக இல்லை. அதற்கு அதிபர் முழுச் சுதந்திரமும் தந்தார். இதில் அவர் உயர்ஸ்தான நிலையில் விளங்கினார்.

இச் சஞ்சிகைக்கான மூல நிதியை வழங்கியது பாடசாலைக் கல்வி நிதியம். அந்த நிதியத்துக்கு நிதியீந்த அன்பர்கள் இன்று மிகவும் மகிழ்வார்கள். அந்த நிதியத்தின் முக்கிய நோக்கம் நூல் வெளியீடாகும். இன்று அவர்களின் கைகளில் இக் குழந்தை தவழப்போகின்றது. பெற்றவர்களாக இருந்து பேறடையப் போகும் வாய்ப்பு அவர்களுக்கு.

நூல் வெளியீடென்பது மிகவும் அதிகரித்த கவனத்துக்குரிய தொழிற்பாடு. நிறைய உழைப்பு வெளிப்படுத்தவேண்டும். உளம்—உடல் இரண்டும் சேர்ந்தியங்க வேண்டும். அர்ப்பணித்த உழைப்பே மிக அவசியம். தனியொருவரின் பங்களிப்பு மட்டும் போதாது, பலர் ஒன்றுசேர வேண்டும். இம் முயற்சிக்கு எல்லோருடைய பங்களிப்பும் எப்போதும் இருக்கவேண்டும். கஷ்டமான விடயங்களுக்கு எப்படி முன்னிற்கின்றோமோ அதேபோன்று கஷ்டமான முயற்சிகளுக்கும் முன்வரவேண்டும். ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு குழுக்களால் இம் முயற்சி மேற்கொள்ளப்படின் வித்தியாசமான வெளிப்பாடுகள் தென்படும்.

இச் சஞ்சிகை அழகாக வெளிவரவேண்டும் என்பதில் பல மனங்கள் உதவின. பிள்ளைகளின் ஆக்கங்களை பரிசீலித்துத் தந்தனர் மலர்க் குழுவினர். நல்லாக்கங்களை வழங்கினர் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள். அழகு அட்டையின் சித்திரகர்த்தா ரமணி. விளம்பரங்கள் தந்த அன்பர்கள், நிழற்படங்களை சிறப்புற ஆக்கித் தந்த குகன் ஸ்ருடியோவினர், அழகுடன் அச்சேற்றிய தமிழ்ப் பூங்காவினர், பலவாறு உழைத்த என் நண்பர்கள். நன்றிப்புலத்தில் வைத்து இவர்களுக்கு கரங்கூப்புகின்றேன்.

அவனருளாலே அவன்தாள் வணங்கும் இந்துதர்மத்தின் குழந்தைதான் இந்த இந்து மகள்.

உங்கள் கைகளை நீட்டிக்கொள்ளுங்கள் இக் குழந்தையை ஒப்படைத்துவிட்டேன். தாலாட்டுங்கள்.

நன்று நன்று இங்கே
நல்ல இந்து மகளே!

— ஆசிரியர்

# இந்துமகள்

*சுசி - தமிழினி*

நன்று நன்று இங்கே
நல்ல இந்துமகளே!
என்று சொல்லிப் பாடுவோம்
எந்த நாளும் வாழ்க.

புலவர் ஒலி கேட்டு
பொழுது புலர்வாகும்
புலோலி என்னும் ஊரில்
பூத்த தெங்கள் கூடம்

வண்டிரண்டு கொண்ட
கண்ணிரண்டு மகளிர்
காதலுடன் விரைந்து
துலங்கி நிற்கும் கோயில்

ஒன்றுமுதற் தொடங்கி
ஆண்டு பதின்மூன்று
நன்று இங்கு ஒளிரும்
நல்ல கல்வித் தீபம்

கன்றழுது ஓட
கனிந்துவரும் பசுப்போல்
கல்விதேடி நாட
கற்றுத்தரும் சாலை

அன்னையெனும் அதிபர்
ஆற்றல் மிகு குருவோர்
கண்ணை இமை காக்க
கடமை மலர் பூக்கும்

ஆளுமையின் புலத்தில்
வாழுமையின் நெறிகள்
நாளுமிங்கே நிகழும்
சூழுமிருள் விலகும்

பால் முகத்தைப் பார்த்தால்
பௌர்ணமியின் வெளிச்சம்
வேல்விழியின் வீச்சால்
வீணர்படை ஒழிக்கும்

மூன்று தமிழ் முழக்கம்
எப்பொழுதும் கேட்கும்
தோன்று கலை ஞானம்
தொடர்ந்து நடை பயிலும்

பொருளின் நிலை யுணர்வார்
நாளையிவர் தாரம்
உலகமிங்கே சுருங்கும் - இவர்
காலடியின் ஓரம்

வேத முதல்வோனின்
ஞானவொளி பிறக்கும்
நாதவழி கீதம்
பேதமின்றி ஒலிக்கும்

ஆடுகின்ற முதல்வோன்
அர்த்தமென வேதங்கள்
நின்றிடாமல் ஆடும்
இந்துமகள் பாதங்கள்

சத்தியத்தின் பாதை
செப்பனிட்டு முடிப்போம்
நீட்சிபெறும் வான்போல்
நின்றுலகில் நிலைப்போம்

ஒலி பிறக்கும் திசையில்
இருள் இறக்கும் வரையில்
விதி வரைந்து செல்வோம்
வீழும் வகையறியோம்

நித்தியமும் இங்கே
நீதிமுறை காப்போம்
புத்தம்புதுச் செடியில்
புதுமைகளைப் பூப்போம்

ஈசனுடன் இணைந்த
சிவகாமி அருளால்
தேசமுள்ள வரையில்
. இந்துமகள் சிறப்பாள் .

# இசையென்னும் பொதுமொழி

செல்வி கு. ஸ்கந்தவாணி
ஆண்டு 11 B

"ஆய கலைகள் அறுபத்து நான்கு" என்று எம்முன்னோர் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் இசை, நடனம், சிற்பம், சித்திரம் போன்ற கலைகள் கவின் கலைகள், நுண் கலைகள் என்று சிறப்பிக்கப்படுகின்றன அதிலும் இசைக் கலையானது நான்கு உபவேதங்களில் ஒன்ருக மதிக்கப்பட்டு காந்தர்வ வேதம் எனப் பெயர் பெறுகின்றது.

இறைவன் இசை வடிவானவன். இதனைச் சம்பந்தர் தமது பதிகம் ஒன்றிலே, "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று குறிப்பிடுவதிலிருந்து அறிகிருேம். எமது முன்னோர் எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருளைத் தமது மன இசைவுக்கேற்ப பல் வேறு வடிவங்களில் வழிபட்டார்கள். இறைவன் இசைவடிவானவன் என்பதால் அவ் வடிவங்களுக்கேற்ப இசைக் கருவிகளையும் அமைத்தனர். ஈசன் கையில் உடுக்கு, கண்ணன் கையில் குழல், வாணி கையில் வீணை, நந்திக்கு மத்தளம் இப்படியாக உருவகித்துள்ளனர்,

"நந்தி மத்தளம் கொட்ட, நாரதர்
யாழ்மீட்க தொம் தொம் என்றயன்
தாள சுருதியொடு மீட்க"

என்ற பாடல் வரிகள் இசைக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. இசை வடிவான இறைவனை அடைய இசையே சிறந்த மார்க்கம். எனக் கண்ட நாயன்மார்களும், ஆழ்வார்களும் பண்ணோடு பதிகங்களையும், பாசுரங்களையும் இசைத்து தமது வேண்டுதல்களுக்கு இறைவனை இசைய வைத்தனர். "தமிழோடிசை பாட மறந்தறியேன்" என்ற நாவுக்கரசரின் இனிய இசைக்கு மகிழ்ந்து எம் பெருமான் சூலை நோயை நீக்கியருளினர். நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவல்லோன் இராவணேஸ்வரனின் சாமகானம் இறைவனை மகிழ வைத்தது. இராவணன் பிழைத்தான். கல்லையும் கனியவைக்கும் அகத்திய மாமுனியின் இசைப் பிரவாகத்தில் மூழ்கி இன்புற்ற இராவணன் முனிவரின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்தான். தமிழ் கூறும் நல்லுலகம் பிழைத்தது. பாணபத்திரனுக்காக விறகு வெட்டியாய் வந்து இறைவன் பாடிய இசையின் இனிமையில் உலகமே சிலபொழுது இயக்கமின்றி இருந்ததாக அறிகிருேம்,

இசையானது உலகம் முழுவதற்குமான ஒரு பொது மொழியாக விளங்குகிறது பாட்டின் பொருள் விளங்காவிடினும் அதன் இசையை மக்கள் ரசிக்கின்றனர். பல இன மக்கள் அங்கம் வகிக்கும் ஐ நா. சபையில் திருமதி எம் எஸ். சுப்புலட்சுமி அவர்கள் "தேமதுரத் தமிழோசை" உலகெல்லாம் பரவாவிடினும் கேட்டுப் பாராட்டும்படி செய்தார். ஆகவே மக்களைத் தன்வயத்தே ஈர்க்கும் சக்தி இசைக்கு உண்டு மனிதர் மட்டுமன்றி விலங்குகளும் இசையை ரசிக்கின்றன. கொடிய நச்சுடைய பாம்பானது மகுடிக்குக் கட்டுப்படுகின்றது. கோகுலத்தில் பசுக்கள் கண்ணனின் குழலிசையில் மயங்கியதாகச் சொல்லப்படுகிறது குழந்தை தாலாட்டின் இனிமையை இரசித்துத் தூங்குகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தமிழிசையானது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளது என்றே கூறவேண்டும். குழந்தையைத் தூங்க வைக்கத் தாலாட்டு இருக்கும் போது சாய்ந்தாடு, நடக்கும் போது கைவீசம்மா, விளையாடப் போகும் போது 'அம்மா நான் விளையாடப் போறேன்' படிக்கும் பருவத்தில் காலை எழுந்தவுடன் படிப்பு, திருமண வீட்டில் கும்மி, நலுங்கு, ஊஞ்சற் பாட்டுக்கள், வாழ்க்கையின் இறுதி யாத்திரையின் போது பறையொலியோடு ஒப்பாரி. இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இசை கலந்துள்ளது. அதுமட்டுமன்றி தொழிற்பாட்டுக்களும் ஏராளம். மருத நிலத்தில் பள்ளுப்பாடல், ஏர்க்களப் பாடல், நடுவைப் பாட்டு, குறிஞ்சி நிலத்தில் குறத்திப் பாட்டு, நீர் இறைக்கும் போது ஏற்றப்பாட்டு, மீன்பிடிக்கும் போது

எலேலோ இப்படியே பாடிப்பாடி வேலை செய்வதால் அவர்களுக்கு அலுப்புத் தெரிவதில்லை.

இனிய இசையைக் கேட்கும் போது மனதில் உள்ள கவலைகள் மறந்து புத்துணர்வு உண்டாகின்றது. பக்தியோடு பதிகங்கள் பாடும்போது மனம் இறைவனோடு இசைகின்றது. அறிந்த மொழியில் இசையைக் கேட்கும் போது மனம் அதில் நன்கு ஈடுபடுகின்றது

இத்தகைய பெருமை வாய்ந்த இக்கலையைப் பண்டைய மன்னர்கள் பேணிப் பாதுகாத்து வந்தனர் இசை விற்பன்னர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். பாணன் ஒருவனால் யாழ் வாசித்து பரிசாகப் பெறப்பட்டதே யாழ்ப்பாணம். கர்னாடக இசையை தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீஷிதர், சியாமா சாஸ்திரிகள் போன்றோர் வளர்த்தனர். முத்துத்தாண்டவர், கோபால கிருஷ்ண பாரதி, பாபநாசம்சிவன் போன்றோர்கள் தமிழ் மொழியிலே பாடல்களைப் பாடித் தமிழிசையை வளர்த்தனர் இறைவன் எமக்கு விரலையும், குரலையும் கொடுத்தது இசையினால் இறைவனை அடைவதற்கே என்பதைக் கருத்திற் கொண்டு இசையை இன்புடன் பயிலுதல் வேண்டும். இறைவனுக்கு உகந்த இசையாக உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் இசையாக, மனதிற்கு இன்பம் அளிக்கும் இசையாக விளங்கும் இக்கலையை அழியவிடாது மென்மேலும் வளர எல்லோரும் பாடுபடுவோமாக

## ஊர்வலம்

நத்தை ஊர்ந்து போகுது
நல்ல படம் கீறுது
வித்தை தன்னைக் கற்றதோ
வீட்டைச் சுமந்து போகுது.
(நத்தை)

போகும் வழி மீதிலே
வெள்ளிக் கோடு போடுது
அந்த ஒளி தேடியே
பள்ளிப் பிள்ளை ஓடுது
(நத்தை)

தம்பி வந்து தட்டவே
தன்னுடலை மூடுமே
நம்பி யாரும் இல்லையேல்
நன்று விரைந்து ஓடுமே
(நத்தை)

## வண்டுகள்

சின்னச் சின்ன வண்டுகள்
சிங்கார வண்டுகள்
பொன்னிறத்து வண்டுகள்
பொன் வண்டுகள்
(சின்ன)

பறந்து வரும் ஊர்ந்து வரும்
பல சாதி வண்டுகள்
மறந்து எம்மை மயங்க வைக்கும்
ரீங்கார வண்டுகள்
(சின்ன)

பூக்களெல்லாம் சுற்றிவரும்
தேனுண்ணும் வண்டுகள்
பிள்ளைகளின் கண்களிலே
சுழன்றுடும் வண்டுகள்
(சின்ன)

— செல்வி யோ. ஜனனி

# மாணவர் வாழ்க்கையில் சாரணர்களின் பங்கு

செல்வி மு. வானதி
ஆண்டு II A

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பதற்கிணங்க ஒரு மாணவர் கல்வியை ஐயந்திரிபறக் கற்க வேண்டும். கற்றபடி ஒழுக வேண்டும். மாணவர் நடுநிலையாக வாழ்வதற்கு கல்வி வழி காட்டுகிறது ஒரு வரை வாழ்க்கையில் உயர்த்தி சிந்தையிலும் செயலிலும் தூய்மை உள்ளவராக்குகிறது. ஒரு மாணவரின் இத்தகைய அடிப்படை நோக்கங்களையே பத்துக் கட்டளைகளாகச் சாரணிய இயக்கம் கொண்டுள்ளது.


சாரணிய இயக்கம் ஒரு பெரிய விருட்சம் போலப் பரந்து விரிந்து செழித்து விளங்குகின்றது. இஃது உலகிலுள்ள பல வகை இயக்கங்களுள் தலை சிறந்ததாய் விளங்குகிறது. இவ்வியக்கம் உலகெங்கும் பரவி வளர்ந்து வருகின்றது. காந்தீயக் கொள்கைகளையும் உள்ளடக்கிய நல்லெண்ணக் கொள்கைகளைப் பிரதிபலிப்பனவாகவே சாரணியக் கொள்கைகள் அமைகின்றன. இவ்வாறு நல்லவற்றை நாடும் அந்தச் சாரண நற்சிறுவர் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய கொடிய மனநிலைகளிலிருந்து விடுதலை பெற்ற தூய சுதந்திரப் பறவையாகின்றான். இந்த நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி நாடேயிருக்கிறது. அவர்களின் சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரமே இருக்கிறது என்பதை உலகுக்கு விளக்கும் கலங்கரை விளக்கமாகவே ஒவ்வோர் சாரணரும் திகழ்கின்றனர்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. எனவே பாடசாலையில் கற்கும் ஒரு மாணவன் வெறும் புத்தகப் பூச்சியாகவே வாழ்ந்து கொள்ளல் தவறானது, செயற்கரிய செய்யும் பெரியோராக விளங்கவேண்டுமாயின் வாழ்க்கையில் பிரயோசனமுள்ள கல்வியே அவனுக்குக் கைகொடுத்து உதவும் நண்பனாகின்றது, சொல்லாமலே செய்யும் பெரியோனாக ஒருவனை மாற்றுவதில் வல்லது சாரணர் பயிற்சியே.


சாரணர் இயக்கத்தை தாபித்த பெருமை திரு. பேடன் பவல் பிரபுவுக்காகும். அவரது துணைவியான திருமதி பேடன் பவல் அம்மையார் உலகிற்கு பெண்கள் சாரணியத்தை அறிமுகப்படுத்தினார். 1907ம்ஆண்டு ஆவணி மாதம் பேடன் பவல் ஆரம்பித்த இந்த இயக்கம் ஆரம்பத்தில் இருபது சிறுர்களைப் பயிற்றியது. ஆனால் தற்போது சுமார் தொன்னூற்றி ஏழு நாடுகளில் உள்ள 130 லட்சம் சிறுவர்களையும் 63 லட்சம் சிறுமிகளையும் தன்னகத்தே கவர்ந்து வீறுநடை போடுகின்றது. ஒன்று பட்டாலே உண்டு வாழ்வு என்ற தாரக மந்திரத்தை நடைமுறைப்படுத்துகிறது. பாசறை வாழ்கையின் போது எல்லோரும் ஒன்றே குலம்; அவர்களில் இட்டோர் பெரியோர் இடாதோர் இழி குலத்தோர் என்று ஊருடன் கூடிவாழப் பழகுகின்றனர்.

சாரணர்கள் துன்பங் கண்டும் அஞ்சாத உறுதி கொண்டவர். எதையும் நுட்பமாகச் செய்யும் பயிற்சி பெற்ற சாரணர் வாழ்க்கையில் சிறந்து விளங்குகின்றார். விலங்குகள் பறவைகளை அன்புடன் நேசிக்கின்றார். தமது சுற்றத்தாரையும் அயலவர்களையும் நேசிக்கின்றனர். இதனால் இவர் அன்புடையவராக மட்டுமன்றி மனத்துக்கண் மாசிலாராக வாழ்கின்றார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைக் கடைப்பிடிக்கின்றார். தெய்வத்தால் ஆகாதெனினும் மெய்வருந்தக் கூலிதரும் என்பதைத் தமது பயிற்சி மூலம் பெறுகின்ற இவர்கள் சிறந்த கர்மவீரராவர்.

வாழ்க சாரணர்! வளர்க அவர்கள் பணி!



வாழ்க்கைத் திறன் கற்கும் மாணவிகள்,
அதிபர், ஆசிரியைகளுடன்.



மனைப்பொருளியல் மாணவிகளின் செய்முறைக் காட்சி.
ஆசிரியைகளின் வழிநடத்தலை அதிபர் நோக்குகிறார்.

# ஐந்தொகை சொல்வர்க்கம்

தொகுப்பு: **செல்வி வி. அமுதாஞ்சலி**
ஆண்டு 11 A

| | | |
|---|---|---|
| ஐங்கணை | : | அசோகமலர், கருங்குவளை மலர், தாமரை மலர், முல்லைமலர், மாமலர். |
| ஐங்குரவர் | : | அரசன், உபாத்தியாயர், தாய், தந்தை, தமையன். |
| ஐந்திலக்கணம் | : | எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. |
| ஐந்திணை | : | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐந்தொழில் | : | படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். |
| ஐம்புலன் | : | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் |
| ஐம்பொறி | : | மெய், வாய், கண், மூக்கு, செவி. |
| ஐம்பூதம் | : | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். |
| ஐம்பெருங் குழு | : | அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதர், ஏவலர். |
| ஐம்பெரும் பாதகம் | : | கொலை, களவு, கள், காமம், குருநிந்தை. |
| ஐம்பொன் | : | பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் |
| ஐம்படை | : | சங்கு, சக்கரம், தண்டாயுதம், வில், வாள். |
| ஐம்பெருங் காப்பியம் | : | சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. |
| ஐவகை நிறம்: | : | வெண்மை, கருமை, செம்மை, மஞ்சள், பசுமை. |
| ஐவகை அமிர்தம் | : | பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம், தேன், சர்க்கரை. |
| ஐந்தங்கம் | : | திதி, வாரம், நாள், யோகம் கரணம். |
| ஐவர் | : | தருமர், வீமன், அருச்சுணன், நகுலன் சகாதேவன். |
| பஞ்ச கன்னியர் | : | மேனை, சாவித்திரி, அருந்ததி, அநுசூயை, சுந்தி |
| பஞ்ச கௌவியம் | : | கோசலம், கோமயம், பால், தயிர், நெய். |
| பஞ்ச வில்வம் | : | வில்வம், முட்கிளுவை, மாவிலங்கை, விளா, நொச்சி, |
| ஐவகைச் சக்திகள் | : | பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி. |
| ஐவகைச் சுத்தி | : | பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி. |
| ஐந்து லிங்கம் | : | காஞ்சிபுர லிங்கம், திருவானைக்கா லிங்கம், திருவண்ணாமலை லிங்கம், திருக்காளத்தி லிங்கம், சிதம்பர லிங்கம். |
| பஞ்ச தோத்திரம் | : | தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம். |
| ஐவகை இசைக் கருவி | : | தோற்கருவி, துளைக் கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்கருவி. |
| ஐஞ்சிறு காப்பியம் | : | உதயணன் கதை, நீலகேசி, சூளாமணி, நாககுமார காவியம், யசோதரா காவியம். |
| பஞ்ச மூர்த்திகள் | : | பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் சதாசிவன். |
| பஞ்ச வாவி | : | சுப்பீரியர் ஏரி, ஈரி ஏரி, ஒன்ராரியோ ஏரி, கியூறன் ஏரி, மிச்சிக்கன் ஏரி. |
| ஐம்பெருங் குளம் | : | கந்தளாய்க்குளம், வவுனிக்குளம் பதவியாக்குளம், பாவற்குளம், கனகராயன் குளம். |

—★—

# தமிழ்மொழி

செல்வி த. கிரிஜா
க. பொ. த. (உயர்தரம்) கலைப்பிரிவு

வையகத்தில் உலவிவரும்
வளமான மொழிகளாம்
விளங்கிடும் மொழிகளதில்
வியத்தகு சிறப்பும்
விஞ்சும் இனிமையும்
கொஞ்சும் நவரசமும்
குழைந்தெடுத்த - செங்
குங்குமமே தமிழெனும்
கோல மிகு மொழியாகும்.

எண்ணிட இனிக்கவும்
கண்ணிடை ஜொலிக்கவும்
மொழிந்திடப் புதுமையும் - செவி
மடுத்திடப் பழமையும்
மிகவே கொண்டதுவே
மாண்பு மிகு செந்தமிழாம்.

கேட்போர் செவிகட்கு
கொள்ளையின்பம் அளித்திடும்
கோலத் தமிழ்மொழி
கொற்றவன் முதலாம்
குடிமக்கள் வரையும்
களிப்புடன் பருகும் - ஓர்
கலைமகள் கொடையாம்.

காதல் மொழியென
கற்றோரும் மற்றோரும்
போற்றி ஏத்திடும்
புனித மொழியதாய்
புதுமணம் வீசுது
புவிதனில் தமிழிது.

இனிமைச் சுரங்கமதை
இன்னமும் தனதாகக்கொண்ட
ஏற்ற மிகு தமிழ் மகள்
எண்ணிலா ஆண்டுகளை
எடுத்தாலும் ஆயுளாய்
நடைகளைத் தளர்த்தாளில்லை
கொடிஇடை இகழ்ந்தாளல்ல.

நாகரிக மோகதலில்
நசுக்குண்ட மானிடர்கள்
தமிழ்தனைக் கொன்று - உடன்
தறிகெட்ட கலப்புமொழி
தனையே தம் மொழியென்று
தட்டி முரசு கொட்டுகின்றார்.

தமிழன்னை மடியினிலே
தவிழ்ந்திடும் மானிடரே
துடிக்கலையா உமதுள்ளம்
துதித்துப்போற்றத் தமிழ்மொழியை
நெடுங்காலம் தமிழ்வாழ
நிமிர்ந்தே நாம்வாழ
கலப்பின மொழியை
களைந்தே ஒழித்திடுவோம்

எட்டுத் திசை தனிலும்
எண்ணிலாப் புகழ் படைத்து
ஏற்றியுள்ள தமிழ்மொழியின்
ஏற்றமிகு இனியகொடி
ஏறட்டும் வானளாவ
இலங்கட்டும் அதன் பெருமை.

# கற்பித்தல் உத்திகள்

வ. ஆறுமுகம் B. A. (Hons) Dip-in-Ed. M. Phil.
தலைவர், கல்வியற்றுறை, யாழ். பல்கலைக் கழகம்

**வ**குப்பறையிற் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் தான் எடுத்துக்கொண்ட விடயத்தை மாணவருக்கு எளிதில் விளங்கச் செய்வதற்கும், மாணவருக்குக் கற்பதில் விருப்பம் ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தும் வழி கற்பித்தல் முறை எனப்படும். கற்பித்தலிற் பயன்படும் இத்தகைய முறைகள் பல உள. அவை, தனித்தும், சேர்த்தும் ஆசிரியரால் உபயோகிக்கப்படலாம். இம் முறைகளுக்குமப்பால், பயன்பாட்டுக்கும் அடிப்படையாக விளங்கும் பொதுப்படையான திறன்கள் சில உள. இத் திறன்கள் இல்லாமற் கற்பித்தற் செயற்பாட்டில் ஆசிரியரால் ஈடுபட முடியாது. இவற்றையே கற்பித்தல் உத்திகள் என்றுஅழைக்கின்றோம். இவை ஆசிரியரால் தமது அன்றாட வகுப்பறைச் செயற்பாடுகளில் இயல்பாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன. பொது நோக்கிற் பார்க்கும்போது இத்தகைய உத்திகள் எல்லா ஆசிரியர்களுக்கும் தெரிந்திருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால், நடைமுறையில் ஆசிரியர்களிடையே, ஆளுக்கு ஆள், இவ்வுத்திகளைக் கையாளும் வகையில் வேறுபாடுகளை அவதானிக்கலாம். அவ்வேறுபாடுகளிலேயே அந்தந்த ஆசிரியரின் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது.

வகுப்பறையிற் கையாளப்படும் கற்பித்தல் உத்திகளை (i) ஆசிரியரின் கற்பித்தற் செயன்முறைத் திறன்கள், (ii) கற்பித்தல்—விரிவுரையும் கலந்துரையாடலும், (iii) பின்—ஊட்டல், (iv) வினா உத்திகள் என நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். இவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு தொடர்பில் நாளாந்தக் கற்பித்தலில் இடம்பெறுகின்றன.

### (i) ஆசிரியரின் கற்பித்தற் செயன்முறைத் திறன்கள்

வகுப்பறையில் ஓர் ஆசிரியரின் செயன்முறையை அவதானித்தால் சில குறிப்பிட்ட திறன்கள் அங்கு இடம்பெறக் காணலாம். அவற்றைப் பாடவிளக்கம், வகுப்பறைக் கண்காணிப்பு, உபகரணப் பயன்பாடு என்ற பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

பாடவிளக்கத் திறன்களில் பின்வரும் திறன்களை உள்ளடக்கலாம்.

#### i) பேச்சின் தன்மை:

பாடத்தை ஆசிரியர் விளக்கும் போது முக்கிய பங்கை வகிப்பது அவரின் பேச்சுத் தன்மையாகும். அவருடைய பேச்சு உரத்ததாக (ஆனால் அடுத்த வகுப்பறையைக் குழப்பும் அளவிற்கில்லாமல் கட்டுப்படுத்தப்பட்டதாக) எல்லோர்க்கும் தடையின்றிக் கேட்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். வகுப்பின் முதல் வரிசையில் இருப்பவருக்கு மட்டுமல்லாமல் கடைசி வரிசையில் இருப்பவருக்கும் தெளிவாகக் கேட்பதாக ஆசிரியருடைய பேச்சு அமைதல் வேண்டும். இது தொடர்பாக நாம் கவனத்திலிருத்த வேண்டிய விடயம் ஒன்று உண்டு. பாடத்தை விளக்கும் நிலையில், ஆசிரியர்கள் கரும்பலகையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களிற் கரும்பலகையில் எழுதிக்கொண்டே பேசுவது உண்டு. அது கரும்பலகைக்குப் பேசுவதாகவே கணிக்கப்படும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அது தவிர்க்கப்படவேண்டும். ஆசிரியருடைய பேச்சு அவரது மாணவர்களுக்காகவே அமைதல் வேண்டும். எனவே பாடத்தை விளக்கும் ஆசிரியர் தமது மாணவர்களை நேராகப் பார்த்தபடி பேசும் வழக்கத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். சில ஆசிரியர்கள் மாணவர்களை நேராகப் பார்க்காது, வகுப்பறைக்கு வெளியே பார்த்தபடி பேசுவதைக் காணமுடியும். அத்தகைய பேச்சு காற்றோடு போய்விடக்கூடுமே தவிர மாணவர் கருத்திற் பதியாது.

#### 2) குரலின் தெளிவு:

இது ஆசிரியரின் பேச்சின் தன்மையோடு ஒன்றிய ஓர் அம்சமாகும். ஆசிரியருடைய குரல் எப்போதும் தெளிவானதாக இருக்

தல் வேண்டும். குரல் தெளிவானதாக இருந்தாற்றான் ஆசிரியருடைய பேச்சை மாணவர் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்கும். ஆசிரியர் பேசும்போது சொற்களை ஏற்றமுறையில் உச்சரிப்பதும் குரலின் தெளிவுக்கு உதவும்.

### 3) தொனி மாற்றங்கள்:

பேச்சின் தொனியில் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தும் வகையில், மாற்றங்கள் புகுத்தப்படவேண்டும். தொனியைக் கூட்டியும் குறைத்தும், உயர்த்தியும் தாழ்த்தியும், செய்யும் மாற்றங்கள் கேட்பவர் மத்தியிற் கூடிய கவனத்தை வளர்க்கும். ஒரே தொனியில் செல்லும் பேச்சு சுவையை அளிக்காது.

### 4) பேச்சின் வேகம்:

ஆசிரியர் பாட விளக்கத்தை மேற்கொள்ளும்போது அவருடைய பேச்சின் வேகம் மாணவருடைய விளக்கத்தைப் பாதிப்பதாக இருக்கும். மிகவும் விரைவாகப் போகும் பேச்சினைக் கேட்பவர், தொடர்ந்து பின்பற்ற முடியாமல், கூறப்படும் விடயம் விளங்காமற் போகலாம். அதேவேளை, மறுகோடியில், மெதுவாகச் செல்லும் பேச்சு கேட்பவர் உள்ளத்தில் சலிப்பை ஏற்படுத்தி விடக்கூடும். ஆசிரியருடைய பேச்சு நிதானமான வேகத்தில் இருத்தல் வேண்டும். அதனைத் தேவைக்கேற்பக் கூட்டியும் குறைத்தும் செயற்படுத்தல் அவரவர் தனித்துவத்தைப் பொறுத்தது.

### 5) சைகைகள்:

ஒருவர் பேசும்போது அவருடைய கருத்துக்களை வலியுறுத்துவதற்கும், அவற்றுக்குத் தேவையான அழுத்தத்தைக் கொடுப்பதற்கும், சைகைகள் உதவுகின்றன. மனித இனத்தின் வரலாற்றில் மொழியின் ஆரம்பமே சைகைகளின் அடிப்படையிலே இடம்பெற்றது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. ஆசிரியரும் தனது. கற்பித்தலிற் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சைகைகளைப் பயன்படுத்துவது அவருடைய பேச்சுத் திறனுக்குக் கூடிய பலத்தைக் கொடுக்கும்.

### 6) விளக்கத் திறன்கள்:

ஆசிரியர் கூறும் கருத்துக்கள் மாணவருடைய உள்ளத்தில் பதியும்போதே அவருக்கு விளக்கம் ஏற்படுகிறது. தான் எடுத்துக்கொண்ட விடயத்தை மாணவருடைய உள்ளத்தில் தெளிவாகப் பதியச் செய்வதிலேயே ஆசிரியருடைய விளக்கத் திறன் இடம்பெறுகின்றது. இத் திறன் வளர்க்கப்படும் விதத்திலேயே ஒவ்வோர் ஆசிரியருடைய வெற்றியும் தங்கியுள்ளது.

### வகுப்பறைக் கண்காணிப்பு:

வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியருக்குப் பெரிதும் அவசியமானது வகுப்பறைக் கண்காணிப்பு ஆகும். அதைச் சரிவரச் செய்யும் ஆசிரியரின் வேலையில் பாதி முடிந்து விட்டதாகக் கொள்ளலாம். வகுப்பறைக் கண்காணிப்பு என்று கூறும்போது கட்டுப்பாட்டு நிலையில் மட்டுந்தான் என்று கருத வேண்டியதில்லை. தான் கற்பிக்கும் மாணவர் பாட வேளையில் என்ன செய்கிறார்கள் என்பதை அவதானிக்கும் திறனே இதில் முக்கியத்துவம் பெறுகிறது. அதன் மூலம் கற்பிக்கப்படும் விடயம் சார்பாக அவர்களுடைய துலங்கலை அறிந்துகொள்ளலாம். பாடத்தில் நாட்டம், சலிப்பு, விளக்கம், மயக்கம் என்பவற்றை மாணவருடைய நடைமுறைகளிலிருந்து கண்டுகொள்ளலாம். மாணவருடைய நிலைமையை அறிந்துகொள்வது அதற்கேற்பக் கற்பிக்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த உதவும்.

வகுப்பறைக் கண்காணிப்புக்கு மாணவர் ஒவ்வொருவரையும் அறிந்திருத்தல் அவசியமாகும். இதில் ஒவ்வொரு மாணவனுடைய பெயரை மட்டுமன்றி, அவனைப் பற்றிய ஏனைய தகவல்களையும் அறிந்திருத்தல் வேண்டும். வகுப்பில் முன் வரிசை பின் வரிசை என்றில்லாமல் முழு வகுப்பையும் ஆசிரியர் தனது கண்ணோட்டத்துக்குள் அடக்கவேண்டும். தமது ஆசிரியர் தம்மைப் பற்றி அறிந்துள்ளார், தம்மைக் கண்காணித்தபடியே இருக்கிறார் என்ற எண்ணம் மாணவரை உசார் நிலையில் வைத்திருக்கும்.

வகுப்பறையின் அமைப்பு வகுப்பறைக் கண்காணிப்பில் ஆசிரியருக்கு வசதியளிப்பதாக இருப்பது விரும்பத்தக்கது. வகுப்பறையிலுள்ள கதிரை, மேசை முதலிய தளவாடங்கள் ஆசிரியர், மாணவர் ஆகியோர் தடையின்றி இயங்கக்கூடியஒழுங்கில் அமைந்

திருக்க வேண்டும் பாட நேரத்திற் தேவைப்படும் சந்தர்ப்பங்களில், ஆசிரியர் வகுப்பில் எந்தப் பகுதிக்கும் எதுவித குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் செல்லக்கூடிய வசதி இருத்தல் வேண்டும். மாணவர் சுயமாகச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களுக்குத் தேவைப்படக் கூடிய உதவிகளை வழங்குவதற்கு இது ஆசிரியருக்கு உதவும். அத்துடன் மாணவருக்குப் பயிற்சி வேலைகளைக் கொடுக்கும்போது அவர்களை மேற்பார்வை செய்வதற்கும் இத்தகைய தடையில்லா இயக்க வாய்ப்புப் பயன்படும்.

## உபகரணப் பயன்பாடு;

ஓர் ஆசிரியருடைய கற்பித்தல் வெற்றி பெறுவதற்குப் பெரிதும் உதவுபவை உபகரணங்களாகும். தான் விளக்கும் விடயத்தை மாணவருக்கு எளிதில் விளங்கச் செய்வதற்கு ஆசிரியரால் கையாளப்படும் இவ்வுபகரணங்களின் தாக்கம் அவற்றை செவ்வையாகப் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

வகுப்பறையில் ஆசிரியருடைய அன்றாடக் கற்பித்தலில் பயன்படும் உபகரணம் கரும்பலகையாகும். அதன் உபயோகத்தில் கவனிக்கப்பட வேண்டிய சில அடிப்படைக் கோட்பாடுகள் ஆசிரியருடைய பொதுத் திறனுக்கு இன்றியமையாதவையாகும். அவையாவன:

1) கரும்பலகையில் எழுத்து வேலையோ அல்லது பட வேலையோ மேற்கொள்ளப்படும் போது எழுத்து, படம் ஆகியன தெளிவாகத் தெரிதல் வேண்டும். எழுத்தினுடைய உருவ அளவு, சொற்களுக்கிடையே உள்ள இடைவெளி என்பன இதில் மேலும் கவனிக்கப்படவேண்டியவை.

2) கரும்பலகையில் எழுதும்போது ஒழுங்காக வரிசைக்கிரமமாக எழுதும் பழக்கம் கடைப்பிடிக்கப்படவேண்டும். கை போன போக்கில் கரும்பலகையின் மூலை முடுக்கெல்லாம் எழுதுவது தவிர்க்கப்படவேண்டும்.

3) தேவையில்லாமல் கரும்பலகையைப் பயன்படுத்தல் வரவேற்கக் கூடியதல்ல. சில ஆசிரியர்கள் கரும்பலகையைப் பயன்படுத்தும் முறையில் எதுவித பயனையும் காண முடிவதில்லை.

4) குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் விளக்கத்துக்காகக் கரும்பலகையைப் பயன்படுத்தும்போது ஆசிரியர்கள் கரும்பலகையைப் பார்த்தபடியே, எழுதிக்கொண்டே கற்பிப்பதுண்டு. இது தவிர்க்கப்படவேண்டும்.

5) ஆசிரியருடைய பாட விளக்கத்தின் முக்கிய அம்சங்கள் (பாடத்தைப் பொறுத்து) பாட முடிவில் கரும்பலகையில் காட்டப்படுதல் நல்லது. இதற்குப் பல வழிகள் உள. தான் பாடத்தை விளக்கும்போதே முக்கிய அம்சங்களை ஒவ்வொன்றாகக் குறிப்புருவில் கரும்பலகையில் எழுதலாம். அல்லது பாட முடிவில் மாணவரிடம் கேட்கப்படும் படிமுறை வினாக்களுக்கு அவர்கள் கொடுக்கும் பதில்களைக் கொண்டு பாடத் தொகுப்பு, கரும்பலகையில் எழுதப்படலாம். இவ்விதம் அமைக்கப்படும் பாடத் தொகுப்பினை மாணவர் தமது குறிப்புக் கொப்பிகளிற் குறித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

6) பாடம் முடிந்தபின், மாணவர் குறித்துக்கொள்ள வேண்டியவற்றைக் குறித்துக் கொண்டபின், கரும்பலகையைச் சுத்தம் செய்யும் பழக்கத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஆசிரியர் பாடம் முடிந்து வெளியேறும்போது கரும்பலகையை துப்புரவாக விட்டுச் செல்லுதல் மாணவர் மத்தியில் முன்மாதிரியாக அமையும். அத்துடன் அடுத்துக் கற்பிக்க வரும் ஆசிரியருக்கும் அது வசதியைச் செய்து கொடுக்கும்.

கரும்பலகை தவிர்ந்த வேறு உபகரணங்களைப் பயன்படுத்தும் போதும் சில அடிப்படை அம்சங்களைக் கருத்திற் கொள்ளுதல் விரும்பத்தக்கது. அவற்றுள் முக்கியமானது பயன்படுத்தப்படும் உபகரணம் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். அதனைப் பொருத்தமான சந்தர்ப்பத்திலேயே உபயோகிக்கவும் வேண்டும்.

பிற அமிசங்கள்:

(1) அது எளிமையுடையதாய், சிக்கலான அமிசங்களைத் தவிர்ப்பதாய் இருத்தல் வேண்டும். அதில் இடம் பெறும் நிறங்கள் கவர்ச்சியுடையனவாக முடிந்த வரை கலப்பில்லாதனவாக இருத்தல் வேண்டும்.

(2) அதன் முக்கியமான அமிசங்கள் யாவும் தெளிவாகப் புலப்படவேண்டும்.

(3) வகுப்பறையிலுள்ள மாணவர் எல்லோர்க்கும் தெரியக் கூடியதான பொருத்தமான இடத்தில் அதனைப் பொருத்தவேண்டும். (நடுப்பகுதியில் உயர்ந்த இடத்தில் பொருத்துவது நன்று)

(4) ஓர் உபகரணம் பாடவேளை முழுவதும் மாணவருக்கு முன்பாகத் தொங்க விடப்படலாகாது. அதனுடைய உபயோகம் முடிந்தபின் அதனை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்தல் நல்லது.

5) பயன்படுத்தப்படும் உபகரணம் சிறிய படமாக அல்லது பொருளாக இருந்தால் அதனை வரிசைப்படி ஒழுங்கு முறையில் பார்க்கும்படி மாணவரிடம் கொடுக்கலாம்.

## (ii) கற்பித்தல் - விரிவுரையும் கலந்துரையாடலும்

அன்றாடக் கற்பித்தல் நடைமுறைகளை ஊன்றி அவதானித்தால், அவற்றுள் விரிவுரை அணுகுமுறையே பெருகிக் காணப்படுவதைக் காணலாம். அதனை முற்றாகத் தவிர்க்க முடியாத நிலையை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அதே நேரத்தில், அதன் தாக்கத்தினைக் குறைத்துக் கொள்வது விரும்பத்தக்கது. விரிவுரையில் காணப்படும் இறுக்கமான நியமமான (Formal) போக்கினைக் குறைத்து, சரளமான போக்கினைக் கடைப்பிடித்தல் நல்லது. அதன் வழியில் கலந்துரையாடலுடன் இணைந்த முறை மாணவரிடையே கூடிய பலனை உண்டாக்கும். அதற்குதவக் கூடியதாகப் பின்வரும் நடைமுறைகளைப் பயன்படுத்தலாம்.

1) இயன்றளவு விரிவுரையைத் தவிர்த்து உரையாடல் முறையைக் கையாளலாம்.

2) சிறிய, எளிய தொடர்கள், வாக்கியங்கள் பயன்படுத்தல் நல்லது.

3) மாணவருடைய கருத்துக்கள், அனுபவங்கள் ஆகியவற்றை வெளியிடத் தூண்டுவதன் மூலம் அவர்களையும் பாட நடைமுறையிற் பங்கு பற்றச் செய்யலாம்.

4) மாணவர் செயற்பாடுகளின் மூலம் பாடத்தை வளர்த்துச் செல்லலாம். இதில் துணை நூல்கள், பத்திரிகைகள் முதலியனவும் உபயோகிக்கப்படலாம்.

5) புதிய கருத்துக்கள், சொற்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தும் போது அவற்றைக் கரும்பலகையில் எழுதி விளக்கலாம்.

6) பாடவளர்ச்சியின் போது மாணவரும் உடன் வருகின்றனரா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7) மாணவர் தொடர்ந்து வருவதை உறுதிப்படுத்துவதற்கு, அவர்களுடைய அனுபவங்களைப் பெறுவதற்கு, வினாக்களையும் பயன்படுத்துதல் நல்லது.

8) கற்பிக்கும் போது, ஆசிரியர், கட்டளையிடுபவர் என்ற நிலையிற் செயற்படாது ஒரு வழிகாட்டி என்ற நிலைக்கு மாறவேண்டும். ஆசிரியருடைய பணிப்புக்கு மட்டும் நடைபெறுவதாக இல்லாமல் கற்றல் முயற்சி மாணவருடையதாக அமைதல் வேண்டும்.

9) கற்பித்தல் பயனுடையதாக நிலைபெறுவதற்குப் பொருத்தமான எழுத்து வேலைகளை மேற்கொள்ள மாணவர் வழிப்படுத்தப்படல் வேண்டும்.

உ-ம்: குறிப்பு எழுதுதல், பிரச்சினைகளுக்கு விடை காணுதல்.

## (iii பின் - ஊட்டல்

பின்-ஊட்டல் என்பது மாணவர் கற்றுள்ளனரா என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ள உதவும் செயற்பாடாகும். தனது கற்பித்தல் முயற்சியின் வெற்றியினை அறிந்து கொள்வதற்கும், அதேநேரத்தில் மாணவருக்கு ஊக்கத்தினை அளிப்பதற்கும் இவ்வுத்தி உதவும்.

ஒருவர் ஒரு வேலையைச் செய்து முடித்தால், அதன் விளைவு என்ன என்பதை அறிய ஆவலாய் இருத்தல் இயல்பே. முடிவு அநுகூலமானதாயிருப்பின், அவர் மேலும் தொடர்ந்து செயற்படத் தூண்டப்படுகின்றார். முடிவு பாதகமாய் இருப்பின் ஊக்கம் குறைகின்றது. வெற்றிகரமான முடிவு

களைப் பெறுவதன் மூலம் ஊக்கம் முன்னேற்றம் அடைகின்றது. வகுப்பறைக் கற்பித்தலிலும் இதே உண்மையை நாம் காணலாம். மாணவரிடம் கேட்கப்படும் வினுக்களுக்கு அவர்கள் அளிக்கும் விடைகள் பின் – ஊட்டலாக அமைகின்றன. இப் பின்–ஊட்டல் குறிப்பிட்ட செயலை அடுத்துத் தொடர்ந்து நடைபெற்றுற்றுன் அது எதிர்பார்க்கும் வகையிற் பயனையளிக்கும். இதைப் பெறுவதற்குப் பின்வரும் வழிகளைப் பயன்படுத்தலாம்:

1) வினுக்களைக் கேட்டு வாய்மொழி விடைகளைப் பெறுதல். வாய்மொழி விடைகளாக அமைவதால் அவற்றின் மதிப்பீடு உடனடியாகவே கிடைக்கின்றது. பெறுபேற்றினை உடனுக்குடன் அறிவதால் மாணவருக்கு ஏற்படும் ஊக்கம் அதிகமாகின்றது.

2) கரும்பலகையில் வினுக்களை எழுதி, அவற்றுக்கு மாணவரை விடை எழுதச் செய்தல், இங்கு விடைகளை ஆசிரியர் சரி / பிழை பார்ப்பதில் நேர தாமதம் ஏற்படுவதால் பின்–ஊட்டல் தாமதம் ஏற்படுகின்றது.

3) வகுப்பிற் கலந்துரையாடலுக்கு அடிப்படையாக 'பிரச்சினைகளை' முன்வைத்து மாணவரிடையே உரையாடலை ஊக்குவித்து அவர்களுடைய கருத்துக்களுக்குச் செவி சாய்த்தல்.

4) மாணவர் செயன்முறையாக இடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல், பெறுபேறுகளைப் பதிவு செய்தல், வரைபடங்களை உருவாக்குதல், உபகரணங்களைக் கையாளுதல் முதலிய செயல்களை அவதானித்தல்.

5) மாணவரிடையே நடத்தப்படும் வாதங்களும் வேறு போட்டிகளும்.

6) வீட்டு வேலை கொடுத்தலும் அவற்றைப் பார்வையிடலும். பார்வையிடப்படாத வீட்டுவேலை எதுவிதத்திலும் பின் – ஊட்டலாக அமையாது. எனவே வீட்டு வேலை கொடுக்கப்பட்டால் அது பார்வையிடப்படுதல் மிகவும் முக்கியமாகும்.

7) வகுப்புச் சோதனைகளை விதித்தல்

8) வகுப்பறையிற் பாடம் நடைபெறும் போது மாணவருடைய நடத்தைகளை அவதானித்துப் புரிந்து கொள்ளுதல்.

உ–ம்: கொட்டாவி விடுதல், சிரத்தையின்மை, அயலவரைக் குழப்புதல்.

இத்தகைய செயல்கள் கற்றலில் அவர்களுக்கு ஊக்கமின்மையைப் புலப்படுத்தும். அதற்கு ஈடு செய்யும் வகையில் ஆசிரியருடைய மாற்று நடவடிக்கை இடம் பெற வேண்டும்.

## (iv) வினு உத்திகள்

வகுப்பறைக் கற்பித்தலில் வாய்மொழி வினு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வினுவைக் கேட்பது ஓர் ஆசிரியருக்குச் சிரமமானதன்று. ஆனல் கேட்கப்படும் வினுவை மாணவரிடத்து தர்க்க ரீதியான சிந்தனையைத் தூண்டுவதாக அமைப்பது அவ்வளவு எளிதானதல்ல. அப்படியான வினுக்கள் தான் கற்பித்தலில் ஆசிரியருடைய நோக்கத்தின் நிறைவுக்கு உதவும். அவற்றை உருவாக்குவதற்கு ஆசிரியருக்கு அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் அதற்கென முன்னுயத்தமும் வேண்டும்.

வகுப்பறையிற் கேட்கப்படும் வினுக்கள் குறித்த நோக்கத்துடன் அமைந்தனவாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட நோக்கமில்லாத, எழுந்தமானமான வினுக்கள் மாணவரிடத்தே குழப்பத்தையே ஏற்படுத்தும். அவை விரும்பத்தக்கன அல்ல. வகுப்பறையில் வினுக்கள் நிறைவேற்றக் கூடிய நோக்கங்களைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1) ஆசிரியர் மாணவருடைய முன்னறிவைத் தெரிந்து கொள்வது.

2) ஒரு குறிப்பிட்ட பாடவிடயத்தில் பயிற்சி அளிப்பதும், அதில் மாணவருக்கு இருக்கும் சந்தேகங்கள் குறைகள் ஆகியவற்றை அறிவதும்.

3) முக்கிய கருத்துக்களை மீள வலியுறுத்துவதுடன் மாணவர் கற்றவற்றை மதிப்பீடு செய்வது.

4) பிரச்சினைகளை ஆராய்ந்து விடுவிப்பதும், பகுத்து ஆராயும் திறனை மாணவரிடத்தே வளர்ப்பதும்.

5) தாம் கற்ற விடயங்களைப் பொருத்தமான முறையிற் கையாளுந் திறனை மாணவரிடத்தே வளர்த்தல்.

6) பாடத்திலே தாமும் பங்கு பற்றும் வகையில் மாணவரை நெறிப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமானுல் ஆசிரியர் முன்கூட்டியே வினுக்களைத் திட்டமிட்டுத் தயாரிக்க வேண்டும். அந்த நேரத்தில் உடனடியாக வினுக்களை உருவாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுதல் கூடாது. நல்ல முறையில் அமையும் வினுக்கள் ஆசிரியருடைய ஆயத்தத்திலேயே தங்கியுள்ளன. அத்தன்மைகளுட் சில:

1) வினுக்கள் சுருக்கமானவையாக, எளிய சொற்களால் ஆக்கப்பட்டவையாக, தெளிவானவையாக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் தம்மிடத்தில் எதிர்பார்க்கும் விடயத்தைப் பற்றி மாணவரிடத்துச் சந்தேகம் எழக்கூடிய வகையில் வினுக்கள் அமையக் கூடாது,

2) ஒரு வினுவுக்கு ஒரு விடைக்குமேல் இருத்தல் கூடாது.

3) மாணவர்களைச் சிந்திக்கச் செய்வனவாக வினுக்கள் அமைதல் வேண்டும். விடயங்களை ஒன்ருேடொன்று ஒப்பிட்டுப் பார்த்து முடிவுக்கு வரும் வகையில் மாணவர்களைத் தூண்டுவனவாக அவை இருத்தல் வேண்டும். ஆம் / இல்லை என்ற பதில்களுக்கு இடமளிப்பனவாக அவை இருத்தல் கூடாது.

4) மாணவருடைய முன்னேற்றத்துக்கு ஏற்ப வினுக்கள் கேட்கப்படவேண்டும். திறமையுள்ள மாணவர், மந்தநிலை மாணவர் இருவரையும் ஒரே நிலையில் வைத்துக் கேள்விகளைக் கேட்கக் கூடாது. அவரவர்க்குப் பொருத்தமாக சிக்கலானவை / இலகுவானவை என வினுக்கள் கொடுக்கப்பட வேண்டும்.

5) மாணவர்க்குத் தெரிந்த விடயங்களே கேள்விகளுக்குக் களமாக அமைதல் வேண்டும். அவர்களுக்குத் தெரியாதவற்றைக் கேட்பதிற் பயனில்லை.

வகுப்பறைக் கற்பித்தலில் பொதுவாகக் கையாளப்படும் வினுக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) நினைவூட்டல் வினுக்கள். இவை மாணவரிடமிருந்து தகவலை மட்டும் எதிர்பார்ப்பன. யாரென்ருலும் விடையைச் சொல்லிப் பார்க்கலாம்.

2) மாணவர் தர்க்க ரீதியாகச் சிந்திக்க உதவுபவை.

3) பாட நடைமுறையிற் பங்குபற்ற மாணவரைத் தூண்டுபவை.

4) மாணவரது அவதானிக்கும் ஆற்றலைத் தூண்டுவன, ஆய்வுகூட வேலை, உபகரணப் பயன்பாடு ஆகிய சந்தர்ப்பங்களில் இவை இடம்பெறுகின்றன.

வகுப்பறையில் மாணவரிடமிருந்து வினுக்களைக் கேட்பதில், ஆளுக்கு ஆள், ஆசிரியர்களிடையே, வேறுபட்ட வழிகள் காணப்படுவதுண்டு. அவையாவன:

1) ஒரு வினுவைக் கேட்டு, கைஉயர்த்தும் மாணவரில் ஒருவரைத் தெரிவு செய்தல்.

2) ஒரு வினுவைக் கேட்டு விட்டு ஒரு மாணவனைப் பெயர் சுட்டித் தெரிதல்.

3) வினுவைக் கேட்டபின் கை உயர்த்தாத மாணவரிடையே ஒருவரைத் தெரிவு செய்தல்.

4) ஒரு மாணவனைத் தெரிந்து வினுவைக் கேட்டல்.

5) இரண்டு / மூன்று மாணவரிடம் கேள்வியைக் கேட்டுவிட்டு (அ) ஒரு மாணவனைத் தெரிந்தெடுத்து அவனுடைய விடையைத் தொடர்ந்து இன்னெருவர் அல்லது பலரை, விடை சரியா எனக் கேட்டல். (ஆ) ஒரு மாணவன் விடையளித்த பின் அதனை ஏற்கும் வேருெருவரை அல்லது பலரை விடையளிக்கும்படி கேட்டல்.

இவற்றிற் கடைசி இரு வழிகளும் விரும்பத்தக்கன அல்ல. 4 ஆம் வழி குறிப்பிட்ட மாணவனைத் தவிர்ந்த ஏனையோரை அசிரத்தையாக இருக்கும்படி செய்துவிடும். 5ஆம் வழி விடை மிகவும் சுருக்கமானதாகவும், நேரடியானதாகவும் இல்லாத சந்தர்ப்பங்களிற் பயனளிக்காது. அத்துடன் அது வகுப்பில் தேவையற்ற குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

இவற்றின் பின்னணியில், வகுப்பறைக் கற்பித்தலில் வினு உத்தியைப் பயன்படுத்

தும்போது ஆசிரியர் கருத்திற்கொள்ள வேண்டிய சில பண்புகளை வலியுறுத்தலாம். ஆசிரியர் வினவைக் கேட்பதற்கு முன் அதற்குரிய விடையைத் தான் தெரிந்திருத்தல் வேண்டும். தனக்கு விடை தெரியாத வினவைக் கேட்டு மாணவரையும் குழப்பிவிடக்கூடாது. ஆனல், விடை தெரியாத சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால், அப்போது தமது அறியாமையை ஒப்புக்கொண்டு அடுத்த சந்தர்ப்பத்தில் விடையை அறிந்து கூறலாம். அதைவிட்டு மாணவரை ஏமாற்ற எத்தனிக்கக்கூடாது. வினவைக் கேட்கும் போது வகுப்பு முழுவதற்கும் பொதுவாகக் கேட்க வேண்டும். அதன் பின், மாணவர் கூட்டாக விடையளிக்கச் சந்தர்ப்பம் கொடுக்காது, ஒருவரைச் சுட்டிக் கேட்டல் வேண்டும். அதிலும் ஒரு குறித்த முறையை (உ-ம்: வரிசையாக ஒவ்வொருவரையும் கேட்டல்) தொடர்ந்து கையாளுதல் கூடாது. அப்படியான சந்தர்ப்பங்களில் வரிசையிலுள்ள குறித்த மாணவனைத் தவிர்ந்த ஏனையோர் வினவில் சிரத்தை கொள்ளமாட்டார். பதிலாக, அங்குமிங்குமாகக் கேட்டால் எல்லோரும் உசாராக இருப்பர். குறிப்பிட்ட மாணவரை மட்டும் (திறமைசாலி, மந்தநிலை இருவரையும்) அடிக்கடி கேட்கக்கூடாது. எல்லா மாணவர்க்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படல் வேண்டும். விடையளிக்கும் மாணவரை உற்சாகப்படுத்தும் வகையில் ஆசிரியர் நடந்துகொள்ள வேண்டும். பிழையாய் இருந்தாலும் தேவையான திருத்தங்களைச் செய்து சரியான விடையை அளிக்க மாணவரைத் தூண்டுதல் வேண்டும்.

வினக்களைப் பொறுத்தவரையில் இன்னுமொரு விடயத்தை நினைவு கொள்ளுதலும் நல்லது. மாணவருக்கு இருக்கக்கூடிய சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தல் வரவேற்கத்தக்கது. அதற்காக அவர்கள் கேட்கும் கேள்விகளை, வகுப்பில் உரையாடலில் மையப்பொருளாகக் கொண்டு மாணவரிடையே உற்சாகத்தைத் தூண்டிவிடலாம். ஆசிரியர் கூறும் விடை உரையாடலை நிறைவு செய்வதாக அமையவேண்டும்.

ஒட்டு மொத்தமாகப் பார்ப்பின், கற்பித்தல் உத்திகள் வகுப்பறையில் ஆசிரியருடைய செயற்பாட்டின் திறனை உணர்த்துவன எனலாம். கற்பித்தல் அனுபவத்தின் அடிப்படையில் ஒவ்வோர் ஆசிரியரும் இவற்றைக் கையாள்வதில் தேர்ச்சி பெறுகின்றனர். இத்தேர்ச்சியின் காத்திரத்தைக் கொண்டே அவருடைய பணி சிறப்படைகின்றது.

[நன்றி: ''வகுப்பறைக் கற்பித்தல்'']

★

பிள்ளைகள் தொடர்பாக பெற்றவர்கள் இரு சந்தர்ப்பங்களில் முக்கிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது. சிறு குழந்தைகள் பால் (milk) குடிக்க முனைகின்ற சந்தர்ப்பம் ஒன்று. மற்றென்று பெரிய பிள்ளைகளைப் பால் (Sex) குடிக்க முனைகின்ற சந்தர்ப்பம். இங்கே கவனங்கள் ஏற்படாதபோது அல்லது சிதைவடைகின்றபோது, சமுதாயத்துக்கான எதிர்கால சந்ததிகள் நலமிழந்த உருப்படிகளாக உருவெடுக்கும். நேற்றைய விளைவுகளை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

# வாழ்க்கையில் மனைப்பொருளியலின் பங்கு

செல்வி சு. பத்மராணி
ஆண்டு 13

**மனை** என்பது மனதிற்கு நிறைவு தருவது. அன்புத் தொடர்பினைச் சுற்றம் தழுவிச் சூழ்ந்து நிற்பது. ஒருவரோடொருவர் அன்புடனும், மரியாதையுடனும் பழக, திட்டமிட, விட்டுக் கொடுக்க, கருத்துக்களையும், உடமைகளையும் பகிர்ந்துகொள்ளப் பயிற்சி தருவது, இறை தத்துவத்தை 'நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைவார்கள்' என்ற நம்பிக்கையில் வாழ்ந்தோம்; வாழ்கிறோம்; வாழ்வோம். ஆன்மீக நெறிகளின் அடிப்படையில் அமைந்தது நமது மனை வாழ்க்கை. உயர்ந்த பண்பாடும், பக்தியும் தியாகமும் அமையும்படி இல்லறத்தை நடத்துவதே இந்தத் தத்துவத்தின் கருத்தாகும்.

குடும்பத் தலைவி எப்போதும் மகிழ்வுடனிருக்கவேண்டும். குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்யும் திறம்படைத்தவளாகவும், வீட்டுப் பொருட்களையும், அணிகளையும் தூய்மையுடன் வைத்திருப்பவளாகவும். வரவுக்குத் தகுந்த செலவு செய்பவளாகவும் இருத்தல் வேண்டும். மகிழ்ச்சி நிறைந்த இந்த இல்லத்துள் குடும்பத் தலைவன் நுழைந்தவுடன் தன் உழைப்பு, களைப்பு, துன்பம், வேலை நெருக்கடி முதலிய யாவற்றையும் மறந்துவிடுகிறான்.

''நாற்புற மோங்கிநிற் கும்பெருஞ் சுவர்கள்
பொற்புடன் பொலியும் நல்லோவியங்கள்
இற்பெருமை இவையோ எனில்அன் றன்று
அன்பின் நிறைவிடம் அருளின் பிறப்பிடம்
இன்பின் இருப்பிடம் நல்லெழில் மனையே''

என்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஈசன். புவி பேணி வளர்க்கும் கண்ணனைய கல்வியைப் பெறுவதன் முக்கியத்துவத்தையும் அவள் உணர்ந்திருந்தாள். மனைப் பொருளியல் பற்றிய தனித் திறமையை வளர்க்கும் கல்வி அக்காலத்தில் முறையாக அமையவில்லை. ஆனால் இக்காலத்திலோ பெண்களுக்கு மனைத்தக்க மாண்புடைய கல்வியினை வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பாடசாலைகளில் மனைப் பொருளியல்க்கல்வி போதிக்கிறார்கள்.

மனைப் பொருளியலானது வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், மனையலங்காரம், பொருளாதாரம், உடல்நலம். குழந்தை வளர்ப்பு, சமூகக் கடமைகள் முதலிய பல துறைகளை அடக்கியது. இது இசை, வரலாறு, சமயம், கலை நுணுக்கம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மனை வாழ்க்கையின் பல பிரிவுகளையும் உணர்ந்து கொள்வதற்குப் பௌதீகம், இரசாயனம், உயிரியல், கட்டிடவியல் போன்ற கலைகளின் அறிவு இன்றியமையாதது. இவற்றை அடித்தளமாகக் கொண்டு சத்துணவு, உடை, உடல்நலம், குழந்தை வளர்ச்சி, வீடு, சமூக உறவு ஆகியவற்றைச் சுவராக எழுப்பி அன்பு எனும் கூரை வேய்ந்து, மனையியலாம் மாளிகை உருவாக்கப்பட்டுள்ளது.

இளமைப் பருவத்தில் நல்ல சத்தான உணவு உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். உணவின் முழுச் சத்தையும் பெற, நோயற்று வாழ, தேவைக்கு மிஞ்சிய உணவுப் பொருள்களைப் பாதுகாத்துத் தேவைப்பட்டபோது பயன்படுத்த, உணவியலைப் பற்றிய அறிவு உதவுகிறது. உணவு தயாரிப்பதிலும், பரிமாறுவதிலும் இல்லத் தலைவிக்கு உண்டாகும் மகிழ்ச்சியுடன் ''உண்கிறோம் உயிர்வாழ; வாழ்கிறோம் பணி செய்வதற்கே'' என்ற கொள்கையை வலுப்படுத்துகிறது.

நாம் அணியும் உடைகள் அவரவர் வயது, தகுதி, தட்பவெட்ப நிலைக்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றன. விஞ்ஞானத்தின் வாயிலாகத் துணிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகளையும் பாதுகாக்கும் வழிகளையும் தெரிந்துகொள்வதால் செலவு குறை

யும்; பணம் மிஞ்சும். உடைகள் அவற்றை அணிபவர்களின் தன்மைமையை எடுத்துக் காட்டுகின்றன. 'அணியெல்லாம் ஆடையின் பின், என்றபடி உடலழகையும், உள்ளத்தின் அழகையும், கலையுணர்ச்சியையும் ஆடைகளே வெளிப்படுத்துகின்றன. தேசிய பண்பாட்டின் அடையாளமாகவும் அவை விளங்குகின்றன.

அழகை ரசிக்கத் தெரிந்திருப்பதுதான் மனிதனின் கலாச்சாரத்திற்கு அடிப்படை. விலங்கினத்திலிருந்து அவனைப் பாகுபடுத்திக் காட்டுவதும் இந்த நுண்ணுணர்வு தானே! அழகில் எத்தனையோ வகைகள்! அவை வெளிப்படும் இடமோ, பொருளோ, வெளிப்படுத்தும் முறையோ மாறினலும் ''அழகு'' என்ற அடிப்படை ஒன்றுதான். இந்த அழகு மிளிரும் வண்ணம் இல்லத்தினை மனையலங்காரக் கல்வியினுல் இல்லத் தலைவி அலங்கரித்து குடும்பத்தினரையும் விருந்தினரையும் மகிழ்ச்சியடையச் செய்கிருள்.

வரவுக்குட்பட்ட செலவு செய்து குடும்பத்தைச் செம்மையாக நடத்தினுல் குடும்பத்தில் மன அமைதியும், மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவும். குடும்பத்திலுள்ளவர்களின் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ப வீட்டு வேலைகளைப் பகிர்ந்து நேரத்தையும், சக்தியையும், பணத்தையும், சிக்கனப்படுத்துவது ஒவ்வொரு குடும்பத் தலைவியும் செய்ய வேண்டிய கடமையாகும்.

வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தியான பொருட்களை பயன்படுத்தும் திறனையும் படைத்தே நம் நாட்டின் பொருளாதாரம் அமைகிறது. இதிலும் பெண்களுக்குப் பெரும் பங்கு உண்டு. பெண்களை இல் வாழ்க்கைக்கு ஏற்றவர்களாகச் செய்வதுடன் விவசாயத்திலும் தங்கள் பங்கைத் திறம்பட வகிக்க மனைப் பொருளியல் உதவுகிறது.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற கருத்திற்கமைய இல்லத் தலைவி தனது குடும்பத்தினரின் உடல் நலத்தினைப் பேணுவதில் மிகவும் அக்கறை செலுத்துகிருள். தனது வீட்டிலேயே மருந்துக் குதவும் தாவரங்களை வளர்த்துச் சிக்கனமாக குடும்பத்தினரை நோய்களில் இருந்து காப்பாற்றுகிருள். இதற்கான ஆயுள்வேத மூலிகைகள் பற்றிய அறிவை மனைப் பொருளியற் கல்வியாற் பெறுகின்ருள். குடும்பத்தினருக்கு நோய்கள் விபத்துக்கள் ஏற்படும் போது நோயாளர் பராமரிப்பு முறையினை அறிந்துள்ளதால் சிறப்பாக அவர்களைக் கவனித்துச் சேவையாற்றமுடிகிறது.

குழந்தை வளர்ப்பு முறை வாழ்க்கையையே உருவாக்குகிறது. குழந்தை வளர வளர, அவர்களுக்கு வாழ்வாங்கு வாழ வழி காட்டும்படி வளர்ப்புமுறை அமையவேண்டும். குழந்தைகள் வளரும் செடியைப் போன்றவர்கள். செடிக்குத் தண்ணீர் பாய்ச்சிக் களை அகற்றி, உரமிட்டு, பசுமையாகச் செழித்து வளர்ந்து, பரவிப் பூத்துக் குலுங்க நல்ல சூழ்நிலை தேவை என்பது திண்ணம். மனை வாழ்வில் கிடைப்பதற்கரிய செல்வம் குழந்தைகள். இக் குழந்தைகளின் வளர்ப்பு முறை பலவகையாகக் கையாளப் படுகிறது.

மனையியல் பயின்ற பெண் தன் வீட்டில் பக்தி நெறியைப் பேணி வளர்க்கிருள். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றபடி தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் அனுபவிக்க உதவுகிருள். நேரம், பணம், சக்தி முதலியவற்றைச் சிறந்த வழியில் பயன்படுத்துகிருள். ஆண்டவன் அருளிய பொருட்கள் எதையுமே அவள் வீணுக்குவது இல்லை. அவள் பொறுமையாகவும் அன்பாகவும் இருப்பதுடன் தவறு நேர்ந்த போது கண்டிப்பாகவும் இருக்கிருள். தன்னலத்தை மட்டும் நோக்காது பிறர் தேவைகளையும், துன்பங்களையும் உணர்ந்து அவர்களுடைய நலனிலும், வெற்றியிலும் அக்கறை காட்டுகிருள்; உழைப்பின் உயர்வைப் போற்றுகிருள். அவளுடைய எண்ணங்கள் குறிக்கோள்கள் எல்லாமே சிறந்த வாழ்வு ஒன்றையே மையமாகக் கொண்டன. இதனுல் அவள் தனிச் சிறப்புடன் வாழ்ந்து மனைக்கு விளக்காகத் திகழ்கிருள்.

# மழைக்காட்சி

செல்வி ச. தர்சினி
ஆண்டு 7 B

செயற்கையில் உள்ள அழகை நயப்போரிலும் இயற்கையில் விளங்கும் எழிலைச் சுவைப்போர் மிகச் சிலராவர். இயற்கை நமது வாழ்க்கையோடு இணைந்திருப்பதனால் அதன் கவின் நமக்குப் புரிவதில்லை. புலவர்கள் பாடும் காவியங்களிலும், கலைஞர்கள் தீட்டும் ஓவியங்களிலும் சாதாரண மக்கள் இயற்கையின் படப்பிடிப்பை ஓரளவு காண்கிறார்கள். மழைக் காட்சியை செய்யுளில் கேட்பதிலும், சித்திரத்தில் காண்பதிலும் ஒருவன் தானே நேரிற் பார்த்து அனுபவித்தால் மிக்க இன்பம் தரும்.

மழைக்காலம் எல்லா உயிர்களுக்கும் மகிழ்ச்சியைத் தருவது. சிலருக்கு மாத்திரம் துன்பம் விளைவிப்பது. உழைப்போர்க்கு ஊக்கமளிப்பது.

ஒளி நிறைந்திருந்த வானம் இருளின் சாயலை அண்மியது; வெம்மை நிலவிய பூமியில் தண்மை மெல்லெனப் பரவியது; வானத்தில் இடையிடையே கருமுகில்கள் தென்பட்டன; கடலின் ஆர்ப்பரிப்பும் அதிகமாகவே இருந்தது; விண்ணில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னல் பளிச்சிட்டது; அதைத் தொடர்ந்து காதுகள் செவிடுபடும்படி இடி முழங்கியது; மெல்லிய குளிர் காற்று வீசியது; மழை தூறத் தொடங்கியது; அது பூமியின் மீது பன்னீர் தெளிப்பது போலத் தோன்றியது.

சிறிது தூரத்தில் சிறு தூறல் பெருமழையாக ''சோ'' என்ற இரைச்சலுடன் பொழிந்தது. மரம், செடி, கொடிகள் தங்கள் இலைக் கரங்களால் நீரை ஏந்தி விளையாடின. மேய்ச்சென்ற மந்தைகள் மழையிலே நனைந்துகொண்டு வீட்டை நோக்கி விரைந்தன. பறவைகள் ஒதுக்கிடந் தேடின. மக்கள் வீடுகளில் அடங்கிக் கிடந்தார்கள். மழையின் வேகம் கூடிக்கொண்டே சென்றது. பூமி ஆசை தீரக் குடித்தது. அது குடித்து எஞ்சிய நீர் வெள்ளமாய்ப் பாய்ந்தது. காற்று பலமாக அடித்ததால் கடல் அலைகள் மிக உயரத்துக்கு எழுந்து, சென்றுகொண்டிருந்த வள்ளத்தை அலைக்கழித்தன. மழைநீர் வள்ளத்தில் தேங்கி வள்ளத்தைக் கடலினுள் சிறிது சிறிதாக ஆழ்த்திக்கொண்டிருந்தது. வேறு கப்பலின் உதவியால் வள்ளத்தில் உள்ளவர்கள் உயிர்பிழைத்தார்கள்.

இவ்வாறு மூன்று மணித்தியாலங்களாக விடாமற் பெய்த மழை சிறிது சிறிதாய் குறைந்தது. வானம் களங்கமற்றுக் காணப்பட்டது.


சூரியன் தனது பொற்கரங்களை மெல்ல மெல்ல நீட்டினான். மழையில் விறைத்த பூமிக்கு சூரியன் வெம்மையளித்தான். பறவைகள் இறக்கைகளை அடித்து ஈரம் போக்கிப் பறந்தன. மரம், செடி, கொடிகளெல்லாம் நீராடிப் புதுப்பொலிவு பெற்றன. உழவர் வயல்களை நோக்கி விரைந்தனர். ஒழுக்கு வீடுகளில் குடியிருந்தவர்கள் மழையைத் திட்டினர். பாவம்! மழை யாருக்கென்று தான் பெய்யும். சில இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றது. வெள்ளம் வற்றிய சில தரைகளில் செம்பவளத்தம்பலப் பூச்சிகள் உலாவிக் கண்களுக்கு விருந்தளித்தன.

வீட்டிலே அடைக்கப்பட்டுக் கிடந்த சிறுவர் ஆரவாரத்துடன் வெளிப்பட்டனர். சிலர் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று கடதாசியாலான கப்பல்களை வெள்ளத்தில் நீந்த விட்டு ஆரவாரித்தனர். வேறு சிலர் ஒருவர் மேல் ஒருவர் நீரை எற்றி மகிழ்ந்தனர்.

மழைக்காலம் மனதுக்கு இன்பம் தருவதாகும். பயிர்கள் பொலிவு பெறுவதால் பயனும் அதிகமாகும். மக்களும் வறுமைப் பிணியின்றி வையகத்தில் இன்புறுவர்.

சில வேளைகளில் மிதமிஞ்சிய மழை பயிர்களை நாசமுறவும் செய்கிறது இவ்விடங்களை அலைக்குலைவு செய்கின்றன. எனினும் மழை மக்களுக்குப் பயன்கொடுத்து மகிழ்வுடன் வாழ வழிவகுக்கின்றது.

—✶—




மதிய உணவு வழங்கலை அதிபர் ஆரம்பித்து வைக்கின்றார்.



அருஞ்செயல் புரியும் சிறு தோழர்களுடன் அதிபரும் ஆசிரியர்களும்





# தமிழகத்தில் ஒரு தமிழ்க்கடல்

திருமதி பொ. இரத்தினசோதி

**யா**ழ்ப்பாணக் குடாநாட்டிலேயே, வடமராட்சிக்குக் கல்வி சார்ந்த பெருமை பழங்காலந்தொட்டே இருந்து வந்தது.

வடமராட்சியின் ஒரு பகுதி புலோலி. தென் புலோலியில் புற்றளைப் பகுதியில், 1902-ம் ஆண்டு தோன்றினர் கந்தமுருகேசேசன். இவரின் தந்தையார் கந்தப்பர். தாயார் தெய்வானை. தந்தையின் பெயரையும் தன் பெயரையும் இணைத்தே கந்தமுருகேசன் என தம் பெயரை ஆக்கிக் கொண்டார்.

சைவ ஆசார அனுட்டானங்களில் ஊறித் திளைத்த குடும்பத்தில் பிறந்தமையால் சிறுவயதிலேயே தீட்சை பெற்ருர்,

''அதிகாலை நான்கு மணிக்கே நித்திரை விட்டெழுந்து, நீராடி, அனுட்டானம் முடித்த பின்பே வேறு எந்தக் கருமமும். அதன் பின்னரே பனங்காணிக்குச் சென்று பனங்காய் பொறுக்குவதும் கூட'' எனத் தன்து இளமை வாழ்க்கை முறையை அவரே தம் மாணவருக்குக் கூறுவார்.

5-ம் வகுப்பு வரையிலான தமது ஆரம்பக் கல்வியைத் தட்டாதெரு வித்தியாலயத்தில் கற்ருர். 6-ம் வகுப்பை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் தொடங்கினுர். ஆனுல் மூன்று மாதங்களுக்கு மேல் தம் கல்வியைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. அவரது 12-வது வயதில் அவருக்கு ஏற்பட்ட காய்ச்சல் இளம்பிள்ளை வாதமாகி அவரின் காலை இழுத்துவிட்டது. சிரமப்பட்டே நடந்தார், அதனுல் பாடசாலைக் கல்வி பாதிப்புற்றது.

தென் புலோலி மு. கணபதிப்பிள்ளையவர்களின் தந்தையார் முருகேசபிள்ளையிடம் கந்தபுராணம் கற்ருர். நன்னூல் காண்டிகையுரை பதவியல் மாத்திரம் கற்ருர். மற்றைய இலக்கணம், இலக்கியம், புராணம், இதிகாசம் யாவற்றையும் தாமாகவே கற்றுக்கொண்டார். கந்தமுருகேசனுர் ஆளாத தமிழ்நூல் இல்லையென்றே கூறலாம். தொல்காப்பியம் முதல் பிற்கால மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வரை-இலக்கணத்தைத் தெளிவுறக் கற்ருர்.

''திராவிடப் பிரகாசிகை என்னும் இலக்கண நூலைத் தெளிவுறக் கற்று விளக்கமளிக்கக் கூடிய ஆற்றல் பெற்றிருந்தார்'' என்பதை, கந்தமுருகேசனுரின் அறிவையும் ஆற்றலையும் நன்குணர்ந்தவரும், அருமை நண்பருமான இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள்.

''திராவிடப் பிரகாசிகையைக் கையால் தொடவே அஞ்சுபவர்கள் வாழும் இக்காலத்தே அந்நூலை அக்குவேறு ஆணிவேருக அலசக்கூடிய ஆற்றல் உள்ளவர் கந்தமுருகேசனுர் ஒருவரே'' எனப் பண்டிதமணி கூறியதை நேரிலே கேட்டிருக்கிறோம்.

இத்தகு நுண்மாண் நுழைபுலம் மிக்க கந்தமுருகேசனுர் சங்க இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சுவைத்துச் சுவைத்து தம் மாணுக்கருக்குக் கற்பிப்பார்.

பன்னிரண்டாம் வயதில் இளம்பிள்ளை வாதத்தால் ஓரளவு பாதிக்கப்பட்டவர் இருபதாம் வயதில் மேலும் தாக்கமுற்ருர். கால்கள் செயலற்றன. உடல் பாதிக்கப்பட்டதற்கு மாருகத் ''தமிழ்க் கட''லானுர். சிந்தனை விரிவடைந்தது. தத்துவ விளக்கத்தால் கிரேக்க தத்துவ ஞானி போன்று, உள்ளழகு மாத்திரமல்ல, புறத்தோற்றத்தையும் பெற்ருர். கந்தமுருகேசனுரை நேரில் கண்டவர்கள் இவ்வுண்மையை அறிவர்.

தாம் பெற்ற தமிழறிவையும் இன்பத்தையும் தரணியெல்லாம் பெறவேண்டும் என எண்ணிய கந்தமுருகேசனுர், தம்மூர்ப் புற்றளை சாரதாபீட (புற்றளை மகா) வித்தியாலயத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் (1921-1933) ஆசிரியப்பணி புரிந்தார். நடந்து செல்ல முடியாத நிலையில் வண்டிலிலே பாடசாலை சென்று வந்தார். 1933-ம் ஆண்டின்

யின் பாடசாலை செல்லமுடியாத அளவுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. வீட்டுத் திண்ணை தஞ்சமாயிற்று. இக் காலகட்டத்தில் பல்துறை நூல்களையும் ஆழ்ந்து துருவித் துருவி ஆராய்ந்து கற்றார். கற்றார் என்று சொல்வதை விட நூல்களெல்லாம் அவரிடம் தஞ்சம் புகுந்தன என்று சொல்லலாம்.

1934-ம் ஆண்டு கந்தமுகேசனர் வீடு —''தமிழகம்''—பள்ளிக்கூடமாயிற்று. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் ஆய்வாளர்கள் வரை அங்கே அறிவு பெற்றனர். சந்தேகம் களைந்தனர்.

பிற்காலத்தில் அவரின் தோற்றம் எல்லோரையும் காந்தமெனக் கவர்ந்தது. தலை நிறைந்த வெண்கேசமும், வெண் தாடியும், செக்கச் சிவந்த உடலும், பவள இதழும் சற்றே சாய்ந்த ()எவரையும் பணிந்து வரவேற்கும் பாவனையில்) தலையும், நீலமணிகளென ஒளிகாலும் விழிகளும் அவரைக் கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீசாக காட்டியதில் வியப்பேதுமில்லை.

''தமிழகத்''தின் பனஞ்சட்டப் படலையைத் திறந்துகொண்டு உட்செல்லும் புதியவர்கள், தூரத்தே கந்தமுருகேசனரைக் கண்டவுடன், மெய்ம்மறந்து அதிசயித்துச் சித்திரப்பாவையாகிவிடுவர். ஆம், சோக்கிரட்டீஸ்தான் புதுப் பிறவி எடுத்து வந்து ''தமிழகத்துத்'' திண்ணையில் வீற்றிருக்கிறாரோ என்ற திகைப்பு, பரவசம் உடன் வரும். பழையவர் புதியவரைத் தட்டி இவ்வுலகுக்குக் கொண்டுவர, நாலடி முன்னேற, ''வாருங்கோ மேனை''என்ற இனிமைகனிந்த தமிழ்க் குரல் புதியவரை முழுமையாகப் புதுவுலகுக்குக் கொண்டு செல்லும்.

'மேனை' என்றழைக்கும் அந்த மென்மைக் குரல் வாத்தியாருக்கே (கந்தமுருகேசனரை பொதுவாக எல்லோரும் வாத்தியார் என்றழைப்பது வழக்கம்) உரிய சிறப்புக் குறியீடாகும். தமிழ்க் கடலின் அறிவின் ஆழத்திலே அன்பு, பரிவு, பாசம் என்பன மிதக்கும். தன் தாடியில் பேனும் வாசம் செய்வதாகக் கூறுவார். தாடியில் எப்படிப் பேன் புகுந்தது என்று கேட்டால், ''குழந்தைகள் மடியில் ஏறி இருப்பார்கள், அவர்கள் தலையில் உள்ள பேன் என் தாடிக்குள் தாவிவிடும்'' என்பார். இந்நிகழ்ச்சி, கந்தமுருகேசனர் வெறும் வாத்தியார் மட்டுமல்ல, தம் மாணுக்கருக்கு தந்தையாய்த் தாத்தாவாய் அன்பு செலுத்தியவர் என்பது விளங்குகிறது. புற்றளைப் பிள்ளைகளுக்கு அவர் 'அப்பா' (தாத்தா) தான்.

பாடம் நடத்தும் போது கண்டிப்பு அளவுக்குப் பரிவும், கடமை அளவுக்கு உரிமையும், மாணவரை ஆட்கொள்ளும் அளவுக்கு அமைந்திருக்கும். பீஷ்மாச்சாரியார் பாண்டவர்களை எவ்வாறு பேணிப் பாதுகாத்து, அன்பு சொரிந்து அரவணைத்து, அறிவூட்டிப் பயிற்றினரோ, அவ்வாறே வாத்தியார் கல்வி பயிற்றும் முறை அமைந்திருந்தது.

அகத்திய மாமுனிவர் கடல்நீர் முழுவதையும் ஆசமனம் செய்ததுபோல், தமிழை அப்படியே ஆட்கொண்டவர் கந்தமுருகேசன். அத்துடன் கணிதம், தருக்கம் என்பவற்றிலும் புலியாகத் திகழ்ந்தவர். சைவசமய அறிவிலும் ஆசாரத்திலும் ஒருகால் முற்றுகத் திளைத்திருந்தவர். கந்தபுராணத்துக்கு உரை சொல்லும் திறமை மிக்கவர். தனக்கு ஏற்பட்ட உடல் தாக்கம் தத்துவ விசாரணையில் இறங்க, தி. மு. க. கொள்கைகளில் ஏற்பட்ட நாட்டம், சமயத்தை விமரிசனம் செய்ய, தமது சமயத்தில் ஆழ்ந்த அறிவிருந்தும், நம்பிக்கை இழந்தமையால் சைவசமயத்தைக் கற்பிப்பதில்லை. விளக்கம் கேட்டால் தெளிவாகக் கூறுவார். அப்பரடிகளின் அறிவுத் திறனும், கூர்ந்த மதியும், கடவுட் பற்றும், தியாக மனப்பான்மையும், தொண்டு வாழ்வும், அடிமைப் பண்பும் வாத்தியாரைப் பெரிதும் கவர்ந்தவை. இறுதிவரை அப்பரைப் போற்றி வாழ்ந்தார்.

வாத்தியாரின் கற்கை நெறி, நன்னூலார் முதல் நவீன கல்வி உளவியலாளர் வரை உள்ள கல்விமான்களின் நெறிகளுள் சிறந்தனவெல்லாம் திரட்டிய ஒரு அமுத முறையாகும். பாடத்தை இலகுவாகத் தெளிவாக விளக்குவார். பல்காலும் விளக்குவார். எளிய உதாரணங்களை எடுத்தாள்

வார். வினைத்தொகைக்கு ஏறுபெட்டியும் தளர்நாரும் வரும். கவிதை ஆக்கத்திற்கு குறள் வெண்பா முதலில் இயற்றப்பழக்கு வார்.

''என்ன வாத்தியார் பாட்டு வரா தாம்'' என்றால் ''அதுக்கேன் மேனை எங் கேயோ யோசிக்கிறியள். நீங்கள் காண்ப வற்றையும், கேட்பவற்றையும், அனுபவிப்ப வற்றையும் கருப் பொருளாகக் கொள்ளுங் ளுங்கள். பாட்டு தன்னலே வரும். இதோ பாருங்கள்,

கள்ளுக் குடித்திடவே கந்த முருகேசன்
மெள்ளவே கற்றிட்டான் பார்.

இது குறள் வெண்பா இல்லையா? சீர் தளை சரியாகத்தானே வந்திருக்கு. இதற்கு உங்க ளுக்கு சம்மதமில்லை யென்றால்,

பருப்பும் கிழங்கும் பலநாள் உணவில்
விருப்ப மறுத்தது காண்

என உங்கள் விடுதிச் சாப்பாட்டை நினைத் துப் பாட்டு எழுதுங்கோவன்'' என்பார்.

என்ன விளையாட்டாகச் சுவையாகக் கவிதை பெருக்கெடுக்கிறது.

அன்றைய காலகட்டத்தில் புற்றளைப் பிள்ளைகள் அத்தனை பேரும் வாத்தியாரிடம் கற்றிருப்பர் என்பதற்குச் சான்று அவர்கள் கணிதத்திலும் தமிழிலும் பெற்றிருக்கும் விரிந்தாழ்ந்த அறிவே. கீழ்வகுப்பு மாண வர்களுக்கு முதிய மாணவர் கற்பிப்பர். கந்த முருகேசனரைப் பராமரித்த அவரின் பெரு மக்கள் ஆழ்வாப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை அவர்களும் கீழ் வகுப்பு மாணவர்களுக்குப் போதிப்பர். அங்கு கற்பிப்பது முது மாண வர்களுக்கு ஒரு தராதரமாகும். வடமராட் சிப் பகுதியில் வாத்தியாரிடம் பாடங்கேட் காதவர்கள் இல்லை எனலாம். கீழ் வகுப் பினரை விட பால பண்டித வகுப்புக்களிலே காலத்துக்குக் காலம் பெருந் தொகையினர் கற்றுள்ளனர்.

தொடர்ச்சியாக வகுப்புகளுக்குச் சென்று முழுப் பாடங்களையும் ஒழுங்காகக் கற்கும் வசதியற்றவர்கள் சிலபோது இடை யிடை பாடம் கேட்பதுமுண்டு. மாணவர் கள் மனநிலை சூழ்நிலை அறிந்து, அவர்க ளுக்குத் தக்கவிதத்தில் பாடம் நடத்துவார். அறிவுப் பசியோடு தம்மிடம் வருபவர்களை எக்காரணம் கொண்டும் விலக்கமாட்டார். வடமராட்சிப் பகுதியினருக்கு அது சொந்த வீடு; தந்தை வீடு; குருகுலம்.

கந்தமுருகேசனரிடம் கற்றவர்களைப் பட்டியல் போட்டால், வித்துவான் கந்த சாமி தொடக்கம், பண்டிதர் பரந்தாமன் வரை பன்னூறுகப் பெருகும். இவர்களுள் பண்டிதர்கள் க. கிருஷ்ணபிள்ளை, க. சுப் பிரமணியம் என்போர் குறிப்பிடத்தக்கவர் கள். பாலபண்டிதர்கள் சி. தர்மலிங்கம், ப. சச்சிதானந்தம் என்போர். பெண்களும் வாத்தியாரிடம் கற்றுப் புலமையெய்தினர்.

பண்டித வகையினரை விட பட்டப் படிப்பினர், சட்டத்தரணிகள் என ஏதோ ஒரு வகையில் வடமராட்சியினர் வாத்தி யாரை நாடினர். அறிவு பெருக்கினர்.

கந்தமுருகேசனர் தனதாசான் முருகேச பிள்ளையிடம் கற்றது சிறிதளவாயிருந்த போதும் தனது ஆசிரியப் பெருந்தகையென உச்சிமேற்கொண்டு போற்றிப் பணிவார். ஆசிரியரது புகைப் படத்தை எப்போதும் தான் பார்க்கக்கூடிய இடத்தில் வைத்து மானத பூசை செய்வார். தமது மாணக் கருக்கும் அவரை அறிமுகஞ் செய்வார்.

கந்தமுருகேசனர், நாவலர் பெருமான் மீது தாம் கொண்ட பெரு மதிப்புக் காரண மாக நாவலரைப் பாட்டுடைத் தலைவனகக் கொண்டு ஒரு கோவை பாடினர். ''நாவ லன் கோவை'' எனப் பெயரிய அந்நூல் கடின இலக்கண வரம்புடையது. கந்தமுரு கேசனரின் வாழ்நாளில் அது பதிப்பிக்கப் படவில்லை. உரை எழுதி முடிக்காமையே அதற்குக் காரணம். இன்னும் அது வெளி வராதிருப்பது தமிழ்த்தாய் செய்த தவக் குறையே.

அவர் எழுதிய மற்ருெரு நூல் ''திருப் பனை அந்தாதி''. அதன் நிலையும் தெரிய வில்லை.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கண பதிப்பிள்ளை அவர்கள் ''இன்று தமிழ் இலக்கணம் கற்பிக்கத் தகுந்தவரென்றால் அவர் கந்தமுருகேசனர் தான்'' என்பார்.

அதே வேளை, ''இன்று இலங்கையில் தமிழ் இலக்கியத்தைச் சுவைபடக் கற்பிக்க கூடியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஒருவரே'' எனக் கந்தமுருகேசனர் கூறுவார். இவ்வாறு இருவரும் ஒருவர் மீது ஒருவர் நெருங்கிய நட்பும், மதிப்பும், புரிந்துணர்வும் கொண்டு பழகினர். இத்தனைக்கும் பண்டிதரய்யா அவர்கள் ஓரிரு முறையே கந்தமுருகேசனரைச் சந்தித்தார்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்'' என்ற குறள் இங்கு விளக்கம்பெறக் காண்கிறோம். கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.

கந்தமுருகேசனரின் மணிவிழா 1962-ம் ஆண்டு அவரின் மாணவர்களாலும் கல்விமான்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரித் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற இவ்விழா தமிழ்ப் பெருவிழாவாகவே திகழ்ந்தது. தென் புலோலி—தமிழகம் தொடக்கம் கரவெட்டி—விக்னேஸ்வரா வரை அன்று திருவிழாக் கோலந்தான். திறந்த மோட்டார் வண்டியில் ''தமிழ்த் தாத்தா'' கந்தமுருகேசனர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வீதிகள்தோறும் மாவிலைத் தோரணம் வீட்டு வாயில்கள் தோறும் பூரண கும்பம். கந்தமுருகேசனரை மக்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். முகம் தலை மட்டுமே தோன்ற மக்கள் வாத்தியாரை மலர்மாலையினுல் போர்த்துவிட்டனர். மேடையில் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். பேரறிஞர்கள் சொற்பெருக்காற்றினர். இசையும் நாடகமும் விழாவை மேலும் சிறப்பித்தன. மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

கந்தமுருகேசனர் சிறந்த சிந்தனையாளர். ஆழ்ந்த ஆராய்ச்சியாளர். தமிழே அவர் உடல், உயிர், சிந்தனை, செயல் எல்லாம். அவர்தம் வாழ்நாளில் நிறைவேற்றவேண்டுமென எவ்வளவோ திட்டங்களைத் தீட்டினர். அவை நிறைவேருதது தமிழுக்கு—ஈழத்திற்கு — யாழ்ப்பாணத்துக்கு — வடமராட்சிக்கு—புலோலிக்குப் பேரிழப்பாகும். முக்கியமாக வயோதிபர்க்கான வகுப்பொன்றை—அதாவது முதியோர் கல்வி நெறியொன்றைச் செயற்படுத்தத் திட்டம் தீட்டினர்.

அரிய ஆராய்ச்சிகளையும் செய்ய எண்ணினர்.

1. இலங்கைத் தீவின் வடமுனையில் பருத்தித்துறை உண்டு. தென் முனையில், தேவேந்திரமுனை—தெமதுர— தென்மதுரை இருந்தது. ஆக இலங்கை முழுவதும் தமிழ்பரந்திருந்தது. தமிழர்கள் வாழ்ந்தார்கள். ஆராய்ந்து நிறுவவேண்டும்.
2. யாழ்ப்பாண வரலாற்றின் மகோன்னத காலமான ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் அவர்களின் தலைநகராய் விளங்கியது சிங்கை நகர். அது வல்லிபுரப் பகுதியே.
3. மணிமேகலையில் இடம்பெறும் மணிபல்லவம் நயினதீவோ யாழ்ப்பாணத்தின் வேறெந்தப் பகுதியோ அல்ல. அதுவும் வல்லிபுரப் பகுதியே.

இக் கருத்துக்களும் அகழ்வாராய்ச்சி மூலம் நிறுவப்படல் வேண்டும். இவ்வாறெல்லாம் கந்தமுருகேசனர் பல பல திட்டங்களைத் தீட்டியிருந்தார். எதுவுமே செயற்படவில்லை—நிறைவேறவில்லை. அவருக்கென ஒரு பாரிய மாணவர் பரம்பரை இருந்தும் ..................???

★

ஆத்திகம் சார்பில் வாதாடும் ஒரு சாரார்; நாத்திகம் சார்பில் வாதாடும் மற்றொரு சாரார். வாதத்தில் இவர்கள் பொழுது போய்க்கொண்டிருக்கிறது. தெய்வம் யாரென்பதனை உணராததாற்றுன் தமது தொழில் இழந்து பழுதுபடுகின்றூர்கள். யார் அந்தத் தெய்வம்? செய்யும் தொழிலே தெய்வம்.

# நல்வாழ்விற்கு வழி

செல்வி அக்னஸ் வரப்பிரகாசம், *B. A.*

**பா**ல்போல் வெளுத்திருக்கும் வெண்ணிலாவைப் பார்த்துக் களித்தான் மனிதன். பாடிச் சுவைத்தான் கவிஞன். அதுபோலொன்றைப் படைக்கத் துடித்தான் விஞ்ஞானி, அதேபோல் வாழ்க்கை என்னும் ஓடத்தைப் பிரகாசமான வழியில் அழைத்துச் செல்ல விரும்பினன் மனிதன். எறும்பு முதல் யானைவரை, ஆண்டிமுதல் அரசன் வரை உள்ளவர்கள் உலகம் என்னும் மேடையிலே உல்லாசமாய் வாழ்வதற்கு ஆணித்தரமான ஊன்றுகோலாய் விளங்குவது வாழக் கற்றுக்கொள்ளும் படிப்பினைகளாகும்.

ஓடுகின்ற குதிரைக்கு
கடிவாளம் எப்படியோ
ஓடுகின்ற நதிப்பிரவாகத்திற்கு
உயர்ந்த கரைக்கட்டுகள் எப்படியோ

அதேபோல் ஓடுகின்ற வாழ்விற்கு உறுதியான நற்படிப்பினைகள் அவசியம். எனவே நல்வாழ்விற்குத் தேவையான படிப்பினைகள் எவை என்பதை சற்று ஆராய்வோம்.

மலைகளில் உயர்ந்தது இமயமாக விருக்கலாம். ஆனல் மனிதப் பண்புகளில் உயர்ந்தது ஒழுக்கமே. மனிதவாழ்வின் மையக்கரு உயிர் எனினும் அவ் உயிரினும் சிறந்தது ஒழுக்கமே. இதனையே வள்ளுவப் பெருமான் மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''

ஒழுக்கமானது எல்லோரிற்கும் சிறப்பினையும் உயர்வினையும் தருவதால் உயிரினும் மேலாக மதிக்கப்படுகிறது. உயிரானது ஒழுக்கம் போல உயர்வினையும் சிறப்பினையும் தராமையால் ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகக் கருதப்படுகிறது. நல்லொழுக்கம் உடையோர் தீங்கு பயக்கும் சொற்களையோ செயல்களையோ, மறந்தும் பயன்படுத்தமாட்டார்கள். நல்லொழுக்க வாழ்வு அற்றவர்கள் பலகற்றும் அறிவிலிகளே. எனவே நாம் அனைவரும் ஒழுக்கமதை உயிரினும் மேலாக மதித்து வாழக் கற்றுக்கொள்வோம்.

மனித வாழ்வுக்கு இன்றியமையாதது அறிவு. மாக்களாக வாழும் மக்களுக்கு அறிவூட்டி மனித நிலையிலும் மேம்பட்ட நிலைக்கு அழைத்துச் செல்வது கல்வியே. கல்வியானது மானிடர்களுக்கு இரு கண்களைப் போன்று வழிகாட்டுகிறது. இதனையே வள்ளுவப் பெருமான்,

கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்து இரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

என அழகாகக் கூறியுள்ளார். கல்வியறிவு பெற்ற மக்களின் கண்களே கண்களாக மதிக்கப்படுகின்றன. ஏனையோரின் கண்கள் மனிதனல் வெறுக்கப்படுகின்ற புண்களாக மதிக்கப்படுகின்றன. கல்வியறிவு அற்றவர் வாழ்க்கை இருள் சூழ்ந்துவிடும் என்பதால் கல்வியே வாழ்வின் திறவு கோல் என்கிறார்கள். நம்நாட்டில் தேனடையிலுள்ள சிற்றறை போல அநேகர் எண்ணும் எழுத்தும் தெரியாத நிலையில் தாண்டவமாடுகிறார்கள்; தவிக்கிறார்கள். எனவே நாம் அனைவரும் பழமையின் பிரதிநிதிகளாகவும் அறியாமையின் நண்பர்களாகவும் வாழாது, அழியா வரம்பெற்று எக்காலத்திற்கும் எச் சமயத்திற்கும் எல்லா நாட்டினருக்கும் குன்றிடைமேலிட்ட விளக்காக ஒளிர்ந்து நல்வழி காட்டும் கல்வியை நிறைவாகப் பெற்று வாழக் கற்றுக் கொள்வோம்.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்னும் முதுமொழிக்கிணங்க மக்கள் அனைவரும் சமாதானமான முறையில் ஒற்றுமையாக வாழ்ந்து வளமான வாழ்க்கை பெற வேண்டும். பாதை தவறிய வாழ்வும், பல பழி சுமந்து அலையும் நிலையும் எதற்காக. பகைவரைப் பொறுக்கின்ற மனமில்லை. பாவத்தை வெறுத்திடும் உளமில்லை. சூழ்ந்துவிட்ட இருளதனில் அலைந்திடும் மக்களுக்கு ஒளி அளிக்க வல்லது சமாதானமே

வாழ்க்கை எனும் படகினிலே பயணமாகும் பொழுதினிலே ஏற்படும் இன்னல்களை அடியோடு களைந்தெறிய நெஞ்சமே விழித்தெழ வேண்டும். விழிகளிலே அன்பிருக்கவேண்டும். விரிந்த ஒரு மனமிருக்கவேண்டும். இரங்கும் ஓர் இதயம் வேண்டும். ஈயும் இரு கைகள் வேண்டும். மன்னிக்கும் மனம் வேண்டும்.

அப்போது மலைபோல் மகிழ்ச்சி பொங்கும். ஒவ்வொருவருடைய வாழ்க்கைப் போராட்டத்திற்கும் முக்கிய காரணம் ஒற்றுமையற்ற வாழ்வேயாகும்.

கருவாய் மலர்ந்து உருவாய் ஆன உயிர்கள் கனியாய் இனித்திட வேண்டாமா? சமாதானத்தைத் தந்திடும் பாதையிலே பூமியினை நடத்தும் பணிதனிலே நாம் ஒன்றுபட்டு உழைத்து வலிமை பொருந்திய வளமான வாழ்வு வாழ சமாதானத்தின் இருப்பிடங்களாக மாறி வாழக் கற்றுக்கொள்வோமாக.

மனிதன் நிலைதடுமாறி மிகப் பெரும் துன்பச் சூழலில் திணறிக்கொண்டிருந்த தருணங்களில் சமுதாயத்தைப் பிரகாசமான எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்ல நல்ல தலைவர்கள் பலர் தோன்றினர், அவர்கள் வாழ்வாய் வழியாய் விளங்கி சீர்வழி நடத்திய பாதையை நாமும் பின்பற்றி வாழ முயலுவோம். புத்தரின் முகத்திலே புன்முறுவலாய்த் திகழ்வது அன்பு, கர்த்தரின் திருச்சிலுவையிலே கருணையாய்ச் சிந்துவது அன்பு. நபிநாயகத்தின் நல்லுரைகளில் சுடர்விட்டு எரிவது அன்பு. பரமசிவன் வடிவம் அன்பு. காந்திமகான் வாழ்விலே சாந்தியைத் தந்தது அன்பு. இவ்வன்பர்களின் நல்லுரைகளைச் சிந்தையில் இருத்தி நாம் வாழக் கற்றுக்கொள்வதே பண்பு.

மனிதனை முருக மனிதனாக வாழவைக்க ஆதாரமாக அமையும் அன்பு, பண்பு, நேர்மை, நீதி, தியாகம், மன்னிக்கும் மனப்பான்மை போன்ற சமய அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி வாழவேண்டும். இரும்பு நெஞ்சையும் இளக்கி உருக்கும் அக்கினிக் கொழுந்தாகிய அன்பைப் பொழிதல், சிக்கன வாழ்வைக் கடைப்பிடித்தல், சகிப்பு மனப்பான்மையைக் கடைப்பிடித்தல், நாட்டுப்பற்று உடையோராய் வாழ்தல், உடல் உள்ளம் முற்றிலும் உன்னத தூய்மையைப் பாதுகாத்தல் முதலியவற்றின் மூலம் வாழக் கற்றுக்கொள்வோம்.

அறத்தின் வழியில் அசையாப் பேருறுதியுடன் வாழ வழி வகுப்பவர்கள் நம் அன்புப் பெற்றோர்கள். அணைத்துக் காக்கும் தாயின் அன்பும் அறவழியில் நடத்தும் தந்தையின் அன்பும் எம்மை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமேயில்லை.

''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்ற கருத்தாகவும் பொதிந்த பாடலிற் கேற்ப நம் அன்புப் பெற்றோரை கண் கண்ட தெய்வங்களாக மதித்து அவர்களின் நல் அறிவுரைகளைச் சிந்தையிலே இருத்தி அன்பிலே வளர்ந்து பண்பிலே உயர்ந்து பயனுடைய வாழ்வு வாழக் கற்றுக்கொள் வோம்.

நல்ல சூழல் நற்பண்புடையவர்களை உருவாக்கும் என்பது குன்றின் மேலிட்ட விளக்காகும். சூழல்கள், சூழ்நிலைகள் சூழ்ச்சி செய்யுமாயின் நாம் கறள் பிடித்த கறங்கு போல் நிலைதடுமாற நேரிடும். தைரியம் தலைகாக்கும் என்பார்கள். நிலை தடுமாறும் வேளையில் நாம் மன உறுதியுடன் செயற்படவேண்டும். முரணான சூழ்நிலைக்கு அடிபணிந்து போகாமல் அதனை முறியடித்துத் தூய சமய வாழ்விலும் அரும்பெரும் பணியிலும் சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டு விடாமுயற்சியில் வெற்றிப் பாதையைக் கண்டு வாழக் கற்றுக்கொள்வோம்.

சமய அறிவு, பொது அறிவு, உலக அறிவு என்பன விருத்தியாகும் இடம் நூல் நிலையம். மக்களின் உள வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைவது நூல்நிலையங்களே. நேரம் பொன்னானது. எனவே எமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை நல்ல முறையில் பயன்படுத்தி பரந்த பயனை அடைய முயலவேண்டும். நாமும் ஏமாந்து மற்றவர்களையும் ஏமாற்றாது நல்ல பல நூல்களின் அறிவுரைகளைப் பின்பற்றி நற்பிரசைகளாக வாழக் கற்றுக்கொள்வோம்.

ஆறுகள் யாருக்காகப் பாய்கின்றன. மரங்கள் யாருக்காகக் கனிகொடுக்கின்றன.

பசுக்கள் யாருக்காகப் பால் சுரக்கின்றன. இவை யாவும் தமக்காக வாழாது பிறருக்கு பயன் அளிக்கின்றன. நாம் யாருக்காக வாழ்கின்றோம் எனச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எமக்காக, எம் தேவைகளுக்காக அல்லும் பகலும் அலைகின்றோம். சுயநலமே உருவான மனிதன் ஆறு, பசு, மரம் போல பொதுநலம் புரிவதில்லையே.

எனவே மக்கள் ஒவ்வொருவரும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுக்கமைந்து தம்மை மறந்து சமூகத் தொண்டு புரிந்து பொதுநலம் பேணும் சமூக சேவையாளராக மாறி வாழக் கற்றுக் கொள்ளல் நன்று.

இன்றைய விஞ்ஞான யுகத்திலே மனிதன் மீன்களைப்போல நீந்தி விளையாடக் கற்றான். மான்களைப்போல பாய்ந்து விளையாடக் கற்றான். மனிதனைப்போல் கதைத்து உறவாட வைக்கிறான். பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் மூலம் நல்வாழ்விற்குத் தேவையான படிப்பினைகள் நம்மை அணுகுகின்றன, உதாரணமாக,

''சிரித்து வாழவேண்டும் — பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே

உழைத்து வாழவேண்டும் — பிறர்
உழைப்பில் வாழ்ந்திடாதே''

இவ்வாறு பல்வேறு வகையான படிப்பினைகள் நம்மை அணுகுகின்றபோது நாம் வெறுமனே உளச்சுவைக்காக அவற்றினைச் செவிமடுக்காது நம்வாழ்வின் குறிக்கோள்களாக அமைத்து செயலிலே செயற்படுத்த முன்வர வேண்டும். அதில் வெற்றியும் காணல் வேண்டும்.

நல்வாழ்விற்குத் தேவையான நற்படிப்பினைகளை நாம் உள்ளமதில் ஏற்றி அதன்படி செயற்பட எல்லாம் வல்ல பரம்பொருளை இரந்து வேண்டி நல்வாழ்வு வாழ முயற்சிப்போம், செயற்படுவோம். ★

## பேதைப் பெண்ணே கேள்

சிற்றிடை கொண்ட கன்னிப் பெண்ணே நில்
சிறியவள் உனக்கு செப்புகின்றேன் நான்
சொல்லுவதைக் கேட்காமல் எங்கே போகின்றாய்?
வெல்லுவது நீயென்றால் சொல்லுவதைக் கேட்டுவிடு
நல்லொளி கொண்ட நயனப் பெண்ணே கேள்
சிறுமி உனக்கு செப்புகின்றேன் நான்
பெண்மையை அறியாத பேதைப்பெண்ணே போகாதே
அண்மையில் அறிவாய் உன் அடங்காத்தனத்தின் விளைவை
செவ்விதழ் கொண்ட சின்னப் பெண்ணே சொல்
பருவம் வந்தும் நீ ஏன் அடங்கவில்லை?
துருவம் தெரிந்தும் நீ ஏன் அசையவில்லை?
வாழ்நாளில் அறிவாய் உன் நடத்தையின் நாடகத்தை
பெண்ணுக்குக் கூடாதம்மா இந்தப் பேதமை அகங்காரம்
நானும் அறிவுரை கூறுகின்றேன் உனக்குத்தான்
நீ ஏன் செவிடாய் வேஷம் போடுகின்றாய்
என்முன் நடக்காதே - உன் மனம் திருந்தாதோ
இனியவளே கேட்காமல் போகின்றாயா?
என்ன செய்வேன் இனியும் நான்.

செல்வி வெ. வாசுகி
ஆண்டு 10 C

# தாகூரும் சாந்திநிகேதனும்

**கலாநிதி சபா. ஜெயராசா,** விரிவுரையாளர்,
கல்வியியற்துறை: யாழ். பல்கலைக் கழகம்.

இந்தியாவின் கல்வி மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, பண்பாட்டு மறுமலர்ச்சி என்பவற்றின் பின்புலத்தில் எழுந்ததே இரவீந்திரநாத் தாகூர் (1861–1940) அவர்களின் கல்விக் கருத்துக்கள், கல்வித்துறையில் தாகூர் தந்த தத்துவங்களும், முன்வைத்த அனுபவங்களும் இன்றைய இயந்திரப் பாங்கான வாழ்க்கையின் மத்தியிலே, மீண்டும் உரைக்கப்படவேண்டிய எண்ணங்களாகவும் மீளாய்வு செய்யப்படவேண்டிய கோட்பாடாகவும் அமைகின்றன. இன்றைய எமது பாடசாலை ஒழுங்கமைப்பை வளப்படுத்துவதற்குரிய தரிசனங்களைப் பெறுவதற்கு சாந்திநிகேதனை ஒரு காட்டிநுவாகக் கொள்ள முடியுமா என்பது பற்றியும் நோக்கவேண்டியுள்ளது.

## வாழ்க்கை வரலாறு

தாகூரின் கல்விக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு முதலில் அவரது வாழ்க்கைப் பின்புலத்தை விளங்கிக்கொள்ளல் வேண்டும். 1861ஆம் ஆண்டு மே மாதம் ஆறும் திகதி கல்கத்தாவிற் பிறந்த தாகூர் தமது ஆரம்பக் கல்வியைப் பிரத்தியேகமான முறையில் ஓர் ஆசிரியரிடம் கற்றார். குழந்தைப் பருவத்தில் இசை, கவிதை ஆகியவற்றைக் கற்பதில் அவர் மிகுந்த ஈடுபாடு காட்டினார். ஆங்கில அறிவை வழங்கும் நோக்குடன், அவர் வங்காள அக்கடமியிற் சேர்க்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கல்கத்தாவில் உள்ள சென். சேவியேர்ஸ் பாடசாலையில் சேர்ந்து கற்றார்.

வெறும் பொறிமுறையாக அமைந்த கற்பித்தல் முறைகள் அவருக்குச் சலிப்பைத் தந்தன! ஆக்கத்திறனை மேம்படுத்தாத கற்பித்தலைக் கண்டு விரக்தியடைந்தார். அதிகாரவலுவுடன் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை போன்ற கற்பித்தலை அவர் விரும்பவில்லை. புத்தகத்தை மனனம் செய்யும் தொழிற்சாலையாகப் பாடசாலை அமைவதைக் கண்டு சினங்கொண்டார். சட்டக்கல்வி கற்பதற்காக பதினாறுவது வயதில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். சட்டக் கல்வியும் அவரது மனத்துக்கு மகிழ்ச்சி தரவில்லை. மீண்டும் இந்தியாவுக்கு வந்தார். இங்கிலாந்தில் இருந்த காலத்தில் ஆங்கில இலக்கியங்களைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஆங்கில இலக்கியங்கள் அவருக்கு மனநிறைவையும், மகிழ்ச்சியையும் தந்தன. தனது இருபதாவது வயதில் அவர் ''உதயகாலக் கீதம்'' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டார்.

அழகும், அமைதியும், கற்பனையும், தியானமும், இறை ஈடுபாடும் கொள்வதற்குரிய ஒரு சூழலில் அவர் ஒரு பாடசாலையை அமைத்தார். அவரது நாற்பதாண்டுக்கால வாழ்க்கை அனுபவங்களின் துலக்கமாக அந்தப் பாடசாலை அமைந்தது. ஆரம்ப காலத்திற் பத்து மாணவர்களே கற்பதற்குச் சேர்ந்தனர். அதுவே **சாந்திநிகேதன்** கல்விச் சாலையாக முகிழ்த்தது. கிழக்கு–மேற்குப் பண்பாடுகளை இணைக்கும் பல்கலைக் கழகமாக அவர் நிறுவிய **விஸ்வபாரதி** விளங்கியது. பிரித்தானிய அரசு அவர் நிறுவிய கல்விக்கூடங்களை சந்தேகத்துடன் அணுகியது. பொருளாதார வளமும், பலமும் இல்லாமை, இந்த நிறுவனங்களை அமைப்பதிற் தாகூருக்கு இடர்களைக் கொடுத்தன. ''சத்தியமே வெல்லும்'' என்பதில் தாகூருக்கு தளராத நம்பிக்கை இருந்தது.

1909 ஆம் ஆண்டு தாகூருக்குப் புகழைக் கொடுக்கும் உன்னத நூலாகிய **"கீதாஞ்சலி"** வெளிவந்தது. அந்நூல் ''உன்னத பண்பாட்டில் முகிழ்த்தெடுத்த ஆக்கம்'' என ஐரிஸ் பெருங்கவிஞர் யேற்ஸ் குறிப்பிட்டார். 1913ஆம் ஆண்டில் இலக்கியத்துக்கான நொபெல் பரிசு அவருக்குக் கிடைத்தது. கல்கத்தா, ஒக்ஸ்போர்ட் ஆகிய பல்கலைக் கழகங்கள் தாகூருக்கு கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தன. இவ்வாறான பல்வேறு வெற்றிகளையும் விருதுகளையும் புறவாழ்க்கை

யிலே பெற்றுக்கொண்டாலும், அவரது சொந்த வாழ்க்கை அவலங்களும் துயரங்களும் நிரம்பியதாக இருந்தது.

## தாகூரின் இயற்பண்புவாதம்:

தாகூரின் கல்வி நெறி இயற்பண்பு வாதம் எனப்படும். மேலைப் புலத்தில் இயற்பண்பு வாதத்தை ரூசோ கட்டியெழுப்பினார். இயற்கையை அனுசரித்துச் செல்லல், இயற்கையை வியந்து நயத்தல், இயற்கையில் மனிதன் தலையிடாதிருத்தல் முதலியவை இயற்பண்பு வாதத்தில் வற்புறுத்தப் படுகின்றன. கடலும், மலையும், நதியும், சூரியனும், சந்திரனும், விண்மீன்களும், மரமும், செடியும், கொடியும், மலரும், பழமும், விதையும், பறவையும், விலங்குகளும் என்ற பெரும் இயற்கைத் தொகுதியின் பின்புலத்தில் இயல்பாகப் பரிணமிக்க வேண்டிய மனிதனைத் தரிசிக்க ரூசோவும், தாகூரும் முயன்றார்கள்.

தாகூர் இயற்பண்பு வாதத்தை பாரம்பரிய இந்துப் பண்பாட்டினூடாகக் காண முயன்றார். இயற்கைக் கோலங்களும், பருவகாலச் சுழற்சி நெறிசைவுகளும், மேலான பிரமத்தின் வெளிப்பாடாக தாகூர் கருதினார். மனிதனிலும் பார்க்க மேம்பட்ட முறையில் இறைவனின் காட்சி இயற்கையில் வெளிப்படுவதாக அவர் எண்ணினார். கல்கத்தா நகரத்தின் சனசந்தடிமிக்க சூழலும் சீமந்து அரண்களும், நான்கு சுவர்களுக் குள்ளே நலுங்கிய அவரது நகர வாழ்க்கை அனுபவங்களும், மனிதன் கைபடாத இயற்கையின்மீது அவருக்கு அதீத ஈடுபாட்டை ஏற்படுத்தியிருக்க முடியும். அதிகாலையிலே தனது வீட்டு மாடத்தில் ஏறி நின்று உதயகாலத்து உற்சவமூர்த்தியாகிய சூரியனின் தரிசனத்தைப் பெறுவதில் அவர் மிகுந்த இன்பங் கொண்டதாகக் கூறுவர். இயற்கையில் இருந்து பிரிந்த கல்வி சுடுமணல் மேவிய பாலைவனமாக மட்டுமன்றி குழந்தையின் இனிய உணர்வுகளைச் சூறையாடிவிடும் என்றும் தாகூர் கருதினார். ஒவ்வொருவரும் இயற்கையோடு தமக்குரிய தொடர்புகளை உணர்ந்துகொண்டும், புரிந்துகொண்டும் வாழவேண்டும் என்பதே அவரது உயர்ந்த இலக்காக விளங்கியது.

10

இயற்பண்பு வாதத்தினூடாக தனி மனித மேம்பாடும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தனது வாழ்க்கையையும் கல்வியையும் தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் முழுநிறைவான சுதந்திரமும், பொறுப்பும் இருக்கவேண்டும் என்பதும் வற்புறுத்தப்பட்டது. ஒவ்வொருவரும் தம்மை முழுமையாக வளர்த்தெடுப்பதன் வாயிலாகவே மானுட ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும். ஒவ்வொருவரிலும் தனித்துவமான முறையில் இறைவன் தன்னை வெளிப்படுத்தி நிற்கின்றான். ஒவ்வொருவரும் தத்தமக்கு இயல்பான முறையில் இறைவனை உணர்ந்தும் வியந்தும் கொள்கின்றனர். தனிமனித ஆன்மீக நெறிப்பட்டதாகவே சமூகம் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும் என்று தாகூர் கருதினார். துண்டுபடாத அகிலத்தின் ஒன்றிணைப்பே அவரது இலட்சியமாயிற்று.

## கல்விக் கோட்பாடுகள்:

மகிழ்ச்சியுடன் இணைந்த தூண்டல் தரத்தக்க கவிநிலையிற் கல்வி நிகழ வேண்டும் என்பது தாகூரின் கருத்து. பாரம்பரிய இந்துக் கல்வி மரபில் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே காணப்பட்ட இணக்கமான இடைவினைகளின் வாயிலாக நிகழ்ந்த கற்பித்தலே உத்தமமானது என்றார். வெறும் பொறிமுறையான ஆசிரியத்துவம் பயனற்றது. ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து வாழ்கின்ற மகிழ்ச்சியான சூழல் கொண்ட ஓர் ஒழுங்கமைப்பாகப் பாடசாலை அமையவேண்டும் என்பது அவரது கருத்து.

வாழ்க்கை முழுவதும் வியாபித்துச் செல்லும் கல்வி, தீரச் செயல்களையும் கண்டுபிடித்தல் இன்பத்தை மாணவர்க்கு வழங்கல் வேண்டும். இயற்கையான வழியில் மனத்தை வெளிப்படுத்தும் மகிழ்ச்சி கல்வியாற் கிடைக்கப்பெறல் வேண்டும். உள விடுதலையை அமைக்கும் கல்வி பொறுப்புணர்ச்சி வாய்ந்தது. குழந்தைகளின் இயற்கையான வளரும் பண்புகளைப் பலர் மறந்துவிடுகின்றனர். அன்பினாலும், செயல்வன்மையாலும் அறிவைத் திரட்ட முடியும் என்று விளக்கிக் கல்விக் கோட்பாட்டின் முப்பெரும் பண்புகளை தாகூர் வலியுறுத்துகின்றார். அவை;

(அ) விடுதலை.
(ஆ) ஆக்கத்திறன்சார் சுயவெளிப்பாடு.
(இ) இயற்கைக்கும் மனிதருக்குமிடையே தோழமை.

நடைமுறையிலுள்ள கல்வி உயிர் அற்றதாகவும், சத்தற்றதாகவும், இயற்கையிலிருந்து பிரிபட்டதாகவும், வண்ணமிழந்ததாகவும், தொழிற்சாலையாகவும் மாறிவிட்டது.

அனுபவங்களை முழுநிறைவாக்குதலே கல்வியின் தொனிப் பொருளாயிருத்தல் வேண்டும். கல்வி மனிதனை முழுமனிதனுக்கல் வேண்டும் கற்பித்தலிற் புலனுணர்வுகளும் மனவெழுச்சிகளும் சிறப்பிடம் பெறல் வேண்டும். இவற்றின் காரணமாகவே தாகூர் இசை, நடனம், ஓவியம், கவிதை, கைவினை என்பவற்றுக்கு முக்கியத்துவம் தந்தார். அறிவு பெறுவதற்குரிய மூன்று மூலாதாரங்களும் தாகூரால் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன:

(அ) இயற்கை
(ஆ) வாழ்க்கை.
(இ) ஆசிரியர்

கற்றற் செயல்முறையில் ஆசிரியரது பங்கு மகத்தானது. மாணவன் உள்ளத்தைப் புண்படுத்தாது பண்படுத்தும் பணி ஆசிரியருக்குரியது. ஆசிரியரே மாணவர்க்குரிய சுயாதீனமான சிந்தனை, கற்பனை, தீர்ப்புக்கூறல் ஆகியவற்றை வளர்க்கத் துணைநிற்கின்றார். இயற்கையை நயந்து வியத்தல் என்பது மாணவரிடத்து இயல்பாகவே காணப்படும் பண்பாகும். அது நித்தியமானது.

கல்வியில் இயற்பண்பு வாதத்தை தாகூர் மேலும் விரித்துரைத்தார். சிறுரின் உடல் வளர்ச்சியை மேம்படுத்த நீர், நிலம், ஒளி, காற்று என்பவற்றோடு இணைந்த பயிற்சி அவசியம். இயற்கையுடன் இணைந்ததான உறவு ஒரு சிறுவனின் கல்வியை முழுமையடையச் செய்யும். இயற்கையுடன் மேற்கொள்ளப்படும் நேரடி அனுபவங்கள் வாயிலாகவே கல்வி வளர்ச்சியடைகின்றது. அத்தகையஅறிவே முதல்தரமானதும் பொருத்தமானதும், திட்ட நுட்பம் வாய்ந்ததாகவும் அமையும். புத்தகங்கள் வாயிலாகப் பெறுகின்ற அறிவு இரண்டாம் பட்சமானதென்றே தாகூர் கருதினார். உயர் கல்வி என்பது தகவல்கள் பெறுவது மட்டுமன்று—மனித வாழ்க்கையை இருப்போடு இசைவுபடவைத்தல் என்பதேயாகும். இயற்கைமீது செலுத்தப்படும் அன்பானது மானுட அன்பாக விருத்தியடையும்.

இந்திய விடுதலை இயக்கத்தை அவர் கல்வித்துறையில் முன்னெடுத்தார். விடுதலையின் வாயிலாகவே வளர்ச்சியை முழு அளவிலே பெறமுடியும். விடுதலை என்பது கருத்துடையதாகவும், பொருண்மையுடையதாகவும் இருத்தல் வேண்டும். உளம், சுயநோக்கு ஆகியவை விடுதலை பெறவேண்டும். உண்மையும் அழகும் விடுதலை வாயிலாகவே கண்டறியப்படமுடியும். மனித முன்னேற்றம் புறத்திலிருந்து பெறப்படுவதன்று. அகத்திலிருந்தே முகிழ்த்தல் வேண்டும். மனித விழுமியங்கள் உணரப்படும் பொழுது மானுடம் பெருமையடைகின்றது.

அன்பின் வழியாக மனித ஐக்கியம் உலக ஐக்கியம் கட்டியெழுப்பப்படல் வேண்டும். மனித நேயம் அகன்று விரிந்து கிழக்கும் மேற்கும் சங்கமித்தல் வேண்டும். அகன்றதும், ஆழ்ந்ததும் வலியதுமாகிய மனித ஒற்றுமை வளரவேண்டுமென்று தாகூர் விரும்பினார்.

அதன் வழியாக ஆன்மீகக் கல்வியை வற்புறுத்தினர். சமகாலத்திற் கற்பிக்கப்படுவது போன்ற பாட வடிவிற் சமயத்தைக் கற்பிக்க முடியாது என்று அவர் உறுதியாயாகக் கூறினர். இறைவன் மீது நாம் தொடர்ச்சியான உறவை வைத்திருத்தல் வேண்டும். சமயம் இன்றிக் கல்வி என்பது இல்லையாகும். சமயம் மனிதரின் உள்ளுணர்வைத் தூண்டிய வண்ணமிருக்கும் என்று கூறிய தாகூர் அனைத்துச் சமயங்களிலும் உட்பொதிந்திருந்த உண்மையை வியந்தார்.

## சாந்திநிகேதன்:

தாகூரின் கல்விச் சிந்தனைகளின் செயல் வடிவமாக அமைந்த நிறுவனமே சாந்தி நிகேதன். பத்து மாணவர்களுடன் 1901ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற சாந்தி நிகேதன், 1921ம் ஆம் ஆண்டில் விஸ்வபாரதி என்ற அனைத்துலகப் பல்கலைக்கழக நிலைக்கு உயர்ந்தது,

கல்கத்தா நகரில் இருந்து சுமார் நூறு மைல் தொலைவில் அமைதியும், அழகும் நிரம்பிய சூழலில் அது அமைந்துள்ளது. மாணவரும் ஆசிரியரும் ஒரு சமுதாயம் போன்று அங்கு வாழ்வர். மாணவர் ஒவ்வொருவரதும் நிறைவான ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியர் தனித்தனி மதிப்பும் கவனமும் வழங்கவேண்டும். மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையே நல்லுறவு வளரவேண்டும்.

சாந்திநிகேதனில் இன, மத, மொழி, பால் வேறுபாடுகள் எவ்வகையிலும் காண்பிக்கப்படமாட்டாது. தன்னைத்தானே ஆளும் குடியரசு நிர்வாகம் அங்கு காணப்படுகின்றது. அங்குள்ள மாணவர்கள் மாலை நேரத்தில் அயற் கிராமங்களுக்குச் சென்று நலிவடைந்த சிறுவர்களுக்கு இலவசமாகக் கற்பிப்பார்கள்.

சாந்திநிகேதனில் காலை ஐந்து மணிக்கு அனைத்து மாணவரும் துயில் எழ வேண்டும். பகல் பன்னிரண்டு மணிக்கு அனைத்துப் பாடங்களும் நிறைவடைய பிற்பகலில் மாணவர்கள் தமக்கு விருப்பமான இசை, நடனம், ஓவியம், உடற் கல்வி ஆகிய அழகியல், உடலியல் சார்ந்த தொழிற்பாடுகளில் ஈடுபடுவர்.

சாந்திநிகேதன் பல் இனப் பண்பாடுகளையும் ஒன்றிணைக்கும் நிறுவனம். மேலைத்தேய விஞ்ஞானமும், பண்பாடும் இங்கு புதிய தொரு நோக்கில் அணுகப்படும். கிழக்கு மேற்கு ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு வளர்க்கப்படும். அனைத்துச் சமயங்களும், இலக்கியமும், வரலாறும், அறிவியலும் ஓவியமும், பண்பாடும் கற்பிக்கப்படும். குறுகிய வாதங்களில் இருந்து விடுபட்டு சாந்தம், சிவம், அத்வைதம் என அழைக்கப்படும் மேலான உண்மையை அனைவரும் அடைய வேண்டும் என தாகூர் கருதினார்.

சாந்திநிகேதனில் ஆரம்ப நிலையில் இருந்து உயர் கல்வி வரை கற்பதற்கு வாய்ப்பு உண்டு. 'பத்பவன்' என்பது ஆறு வயது தொடக்கம் பதின்று வயது வரையிலான சிறுவர்கள் கற்பதற்குரிய முன்னேற்றகரமான ஆரம்ப அமைப்பு. மாணவரின் ஒத்திசைவானதும் பூரணத்துவம் மிக்கதுமான வளர்ச்சியில் அங்கு கவனம் செலுத்தப்படும். மாணவரின் சுயவெளிப்பாடு ஊக்குவிக்கப்படும். மகிழ்ச்சி தரும் சூழலில் மாணவர் செயற்படுவர்.

ஆய்வை மேற்கொள்ளும் நிறுவனம் **'வித்யா பவன்'** எனப்படும். அங்கு கீழைத்தேய மொழிகள், பண்பாடு, இலக்கியம் என்பவை ஆய்வு செய்யப்படும். இந்திய-சீன அறிஞர்களுக்கிடையே பண்பாட்டைப் பகிர்ந்து கொள்வதற்கும், சீன மொழியைக் கற்பதற்கும் **'சீன பவன்'** அமைக்கப்பட்டுள்ளது. நுண்கலைத் துறைகள் ஒவ்வொன்றையும் வளர்ப்பதற்குத் தனித்தனி அமைப்புக்கள் உள்ளன.

கிராம வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் குடிசைக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கும் **'கிராம மீளமைப்பு நிறுவகம்'** ஒன்று உண்டு. கிராமியப் பிரச்சினைகள் வகுப்பறையிலே கலந்தாலோசிக்கப்படும். பயிர்வள மேம்பாடு, பண்ணை நலம் முதலியவை கிராம மக்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படும். கூட்டுறவு சமூக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதில் தாகூர் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

**சாந்திநிகேதனும்**
**யாழ். பல்கலைக்கழகமும்**

சாந்திநிகேதனுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் பலதொடர்புகள் உண்டு, இயற்கை அழகு தவழும் சமயச் சூழலில் எமது மாணவர்கள் ஆனந்தமாகக் கல்வி கற்கவேண்டும் என பல்கலைக்கழக முன்னோடிகளாகிய சேர். பொன். அருணசலம், சேர். பொன். இராமநாதன் முதலியோர் விரும்பினர்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் கவியரசர் தாகூரையும், மகாகவி பாரதியையும் ஒப்பு நோக்கி **'இரு மகாகவிகள்'** என்ற நூலை எழுதினர். பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் தாகூரின் கல்விக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினர். சாந்திநிகேதனுக்கும் விஜயம் செய்தார். வரலாற்றுத் துறை விரிவுரையாளராகிய திரு. எஸ்.கிருஷ்ணராசா அவர்கள் தமது கலாநிதிப்பட்டத்துக்கான ஆய்வை சாந்தி

நிகேதனில் தற்போது மேற்கொண்டுள்ளார்.

இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த வேளை எமது பிரதேசத்தின் அறிஞர் பலர் அவரை நேரிலே சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்த பழைய நினைவுகளை இன்று நினைவுகூர்ந்து கூறுவதுண்டு.

**விமர்சனம்:**

ஆங்கிலக் கல்விமுறையை விமர்சிக்காது அதுவே மேலானது என்ற அடிமை மனோபாவம் நிலவிய காலகட்டத்திலே, தாகூரின் கருத்துக்கள் சிந்தனை விடுதலையை முன்னெடுத்துச் சென்றன.

தாகூர் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர். சிந்தனையாளர், தத்துவ ஞானி, கவிஞர், நடிகர், ஓவியர், எழுத்தாளர், இசையாளர் என்ற பல்வேறு பரிமாணங்களின் ஒருங்கிணைந்த ஆளுமையைக் கொண்டிருந்தார். தனது மொழியை நேசித்தார். இந்தியாவை நேசித்தார். உலகை நேசித்தார். இந்த ஐக்கியத்தினூடாகவே இந்தியாவின் விடியற் கீதமாகிய ''ஜன கண மன'' உருவெடுத்தது.

தாகூரை ஆட்கொண்ட தத்துவமாக இயற்பண்புவாதம் விளங்கியது. ரூசோ, வேட்ஸ்வோர்த் ஆகியோர் தாகூர்மீது செல்வாக்குச் செலுத்தினர். ''இயற்கைக்கு மீண்டும் திரும்புங்கள்'' என்ற குரலை தாகூர் பலமாக ஒலித்தார். இயற்பண்புவாதம் விமர்சனத்துக்குரிய தத்துவமாகும். வளர்ச்சி பெற்றுவரும் தொழில் நுட்பம், விரிவடைந்து வரும் நகரவாக்கம் என்பவற்றின் இயங்கியலைக் காண முற்படாது தப்பிச் செல்லும் உபாயமாக இயற்பண்புவாதம் அமைகின்றது. தாகூர் நகர வளர்ச்சியையும், தொழில்நுட்ப வளர்ச்சியையும் கண்டு மனம் நொந்தார். அவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றை நெறிப்படுத்த முயலாது அமைதியான தபோவனத்தை நாடினார்.

## உசாத்துணை நூல்கள்


1. V. R. Taneja, 1980, Educational Thought and Practice, Sterling Publishers, New Delhi. pp. 160 - 7
2. Vivek Bhattacharya, 1979, Relevance of Tagore, Metropolitan: New Delhi, pp, 138 - 52.
3. Hiranmay Benerjee, 1981, Rabindranath Tagore, Publications Division, New Delhi, pp. 73–81
4. S. B. Mukherji 1977, The Poetry of Tagore, Vikas Publishing House, New Delhi, pp. 1-18



**நடை எத்தனை வகை?**

நடை மூன்று வகைப்படும். கால் நடை, நா நடை, மன நடை என்று. மனிதனை வெறும் 'கல்நடை'யாக்காமல் பிரிப்பது நா நடையும், மன நடையுமாகும். மன நடை அதாவது நடத்தை நன்றாக அமைந்தால் தான், நா வொழுக்கமும் நன்றாக அமையும். மன ஒழுக்கம் பிறழ்ந்தால், நா ஒழுக்கமும் பிறழும். நடத்தையால் மனிதனை உயர்த்துவது மன நடையும், நா நடையுமேயாகும்.

— திருமுருக கிருபானந்த வாரியார்.



ஒன்று கூடலில், கோட்டக் கல்வி அதிகாரி மங்களவிளக்கேற்றுகிறார்.
அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.



உயர் வகுப்பு மாணவிகளின் வருடாந்த ஒன்றுகூடலில்,
கோட்டக் கல்வி அதிகாரி வரவேற்கப்படுகின்றார்.

LIBRARY

# A Holiday Trip

Vani Balendran - Year 10 'B'

Some of my friends and I discussed the possibility of going on a trip to the up-country and visit places of interest. It was not possible to arrange the trip by ourselves. So we sought the help of our teacher. She become very enthusiastic and made preparations for the journey. Altogether about twenty of us decided to go on the trip.

Our teacher made a list of the places that we should visit and she also made a sketch of the route to be taken by us. It was decided that the trip will take four days, She then contacted some of her friends and arranged accomadation for us to stay for the nights.

The first day we were to leave at 7 o' clock. We were all very happy and arrived at the starting point which was our school. We carried lunch parcels with us and started the journey.

Our first stop was at Annuradhapura. There were several places of ancient ruins. These were mostly Bhuddhist Shrines and Dagobas. The biggest Dagoba was the Ruwvn Weliseya. There were several people offering flowers and prayers at the Dagoba.

We had lunch at Anuradhapura and left for Kandy. on the way we visited Dambulla and Sigiriya, Sigiriya was very very beautiful to look at. we did not climb the rock as it was too steep From there we left for Kandy and reached Kandy in the evening We spent the frrst night at Kandy. Our friend had arranged for us to stay in a school, that was close by. Compared to Jaffna the climate was very cold.

The first morning we first visited the Peradeniya botanical gerdens; It was a very infersting place. We were all thrilled by the beauty of the gardens There were several varieties of flowers; Many kinds of roses were there. The Mahaweli Ganga flowing by fhe gardens added beauty to the gardens. We sat down under the trees and ate our lunch.

Then we went to visit the the famous tooth temple Dalada Maligawa and the Kandy lake. We also visited the Hindu temple at Kandy. From there we left for Nuwaraeliya; The journey to Nuwaraeliya was along routes winding up and down with several bends. All of us sang songs and spent the time joyfully. We stayed the night at Nuwaraeliya hotel.

The next morning we had arranged to visit Haggala garden; But in the morning it was full of mist. and we could not leave as planned. we left late in the morning and visited the Nuwaraeliya Park and the Haggala garden; At Haggala too there were different varietics of roses and orchids We could see the Pidurutalagala mountain from Hag gala. As there was no time we did not climb the mountain Being very cold we all had to wear warm clothes. We stayed the night again at Nuwaraeliya. We returned to Jaffna the next morning. This was our holiday trip. This was a very useful and joyful trip.



— ★ —

## BIRDS ARE WONDERFUL

S. Babetha
Year 9 'C'

Birds are true friends of man. They delight man with their song. They are a source of nurishing food. They kill the insects which ruin our garden and they are our pets. They are found every where in the world. Man made use of birds for his dress. In the middle ages arrows were winged with goose feathers and helmets were decorated with the plumage of birds. Today man has learnt to take the feathers of domestic birds without killing them. Domestic birds produce eggs for man.

The birds in the tropical countries of the world have very brilliant coloured feathers. They have a coarse voice and are very lazy because food is available in plenty, The birds of the temperate zones have plain plumage. but they are bright coloured songsters But many of the song birds have natural colours. Usually the colours are olivegreen and birds of the middle zone s have musical voices.

They cheer us and make us very happy. The birds need a lot of food because they are always very active. They have no hands to pick things. Every thing is done by its beak. Every bird has feathers. Bird with the help of their wings can fly at a speed of one hundred miles an hour. Ostrich and emu never use their wings for flight and so they can only walk, but they can walk very quickly. The penquins cannot use their wings for flying but use them as flippers to make their way over the water. They swim very well and can dive under the water like seal.

All birds dislike cold weather and so they migrare to warmer climates to spend their winter. In the spring and summer they return to their own haunts The beautiful tanager which lives in North America in the summer, spends its winter in South America. Birds build very wonderful nests and their building rouses our admiration. Each has its own method and engineering skill They hide their nests skilfully and guard them well Today there are over eight hundred kinds of birds in the world, Oh, how wonderful they are!

★

## MYSELF

MY Name is Bagirathy. My mother's name is Thangaratnam. I am in year six. I am ten years old. I am studying at J/Vada Hindu Girls College. I study Tamil, Science, Mathermatics. Social Studies, Religion, English and health. I like English and Science very much. I do not like Social studies. I walk to the school every day. I have a brother and a sister. My brother's name is Thavaparan. My sister's name is Manimehalai. My brother is in year '12'. My sister is in year 10. I have a penfriend Her name is Malar. She is in England She is in grade nine She is fifteen years old. My hobby is reading story books and collecting stamps. My favourite game is netball. I wish to be a doctor. I love my mother, brother, and sister very much.

- S. Bagirathy
Year 6 'A'

## MY FAVOURITE PERSON

Sumithira T.
Year 9 'c'

My favourite person is a woman. But she is dead. It was five years ago. The world lost this great woman. She was Mrs Indra Priyadarshini Gandhi.

Mrs Gandhi was the first woman Prime Minister of India. She became the Prime Minister after Mr Lal Bahadure Shastri in 1966. Her father Mr. Jawaharalal Nehru was the first Prime Minister of India.

Mrs Gandhi won the election in 1971. She was defeated at the polls in 1977 and she was returned to power in 1980.

When Indra was a little girl, her father was fighting for India's freedom. He was sent to prison. Indra then lived with her grand parents. Indra has two sons. The elder son is Rajiv Gandhi, who was the Prime Minister of India for the past five years. The younger son is Shanjay Gandhi. He is no more. Shanjay Gandhi's wife is Mrs. Menaka Gandhi, who is one of the Ministers of the present Cabinet in India.

Indra helped the Sri Lankan Tamils. Although she is no more. The world has not forgotten her. The world has lost a great woman. I love her very much. Indra Priyadarshini is my favorite person.

★

## AN UNFORGETTABLE EVENT

It was a sunny day. I walked along the main bus stand. Suddenly I heard a big noice. I was very frightened. A flash of light and smoke passed in front of me. I stood still.

I opened my eyes and found that people were running here and there. I saw a small crowd under a tree. I peeped into the scene. I was shocked. I saw a small girl of ten years old, lying on the ground unmoved. Her head was severely damaqged and bleeding. Blood stains were all over the body. Her eyes were widely opened and blank. A terrible sight was formed there. Another small beautiful girl was crying and shouting by the side of her.

My heart was full of pain. I could not believe that such an event had taken place in a couple of minutes. This was my first experience that I had regarding about explosion and shelling.

I was highly worried. How many innocent people - mainly small young children were killed by shooting, bombing, and shelling. later in my life. I was immuned to such incidents, killing and shooting of the innocents stopped. But the first event was unbelievable and unforgettable in my life.

★ Hema P. Year 9 'B'

# MY PLEASANT EXPERIENCE WITH OUR FAMILY FRIENDS FROM INDIA ON THEIR MAIDEN VISIT TO SRI LANKA

**Miss Menaka Chinniah**
Year 10 'B'

My father's friend Benedict who lives in India, came to Sri Lanka with his family on a short visit. We received them at the airport. As they got into the car itself, they asked me about the interesting places. I told them about the places to be visited First in the list comes Colombo, the capital of Sri Lanka, a garden city, with its Natoinal Museum, the Zoo, The Art Gallery and theatres. Then comes the Ruined Cities at Anuradhapura, Polanaruwa, Sigiriya, Dambadeniya and Yapahuwa. Then comes the Places of Pilgrimage like Adam's Peak, The Madu Church, Kataragama, The beautiful landscape and Natural Vegetation with Palm - fringed Shores and sandy beaches ideal for Sun - bathing are things not to be forgotten. The Royal Botanical Gardens at Haggela, Nuwareliya, The Tea Gardens, Water Falls and Game Sancturies are other places of interest. We reached home by 7-00 p. m.

The youngest daughter was of my age. She asked me for a map of Sri Lanka to see for herself all the places there. After studying the map we all went to bed.

On the following day early in the morning we took them first to the Dehiwela Zoo. In the zoo they were interested in the Chimpanzees They photographed this intersting creature. They remarked it is wonderful to see such a nice Zoological Garden. Then I felt proud and told them that this is one of the best zoological gardens in South East Asia. The other interesting animal was the Kangaroo. We took a hurried view of the other sections, and rushed to the Adam's Peak the following day

It is a steep hill very difficult to climb. They said they had experience of climbing the Himalayas. They told me all about Himalayas and even showed me some snaps. I felt like visiting India at the very moment. My friends were admiring the beautiful landscape and the ever green Tea estates from the Peak. They were shocked to see that it was a place of worship for people of all religions. We took them to Anuradhapura to show them the ruins and the sacred Bo - tree. They were taken up by the paintings of Sigiriya. They compared this with that of Ajantha Caves. They could see more of our architecture, sculpture and paintings.

As they were very much interested in the collection of sea shells and, corals. We took them to Hikkaduwa sea-shore. This is a place ideal for sea bathing and collecting multi coloured shells and corals of various size. Then we took our lunch and relaxed for some time.

Our last visit was to the Royal Botanical Gardens. My friends noted the names of places in their diaries and took snaps of these world famous orchids. All returned home. While returning home they told me about the interesting places in India. They showed us some photographs of those hills, water falls, paintings and natural vegetation They asked us to visit Kuttalam, Kashmir The Tajmahal, The Ajantha Caves, Buddha Gaya, Benares and Rishikash One should not miss to see all these places.

Our friends were quite happy and satisfied with their short visit to our country. They thanked us for all the help given to them and invited us to visit india at our earliest and to see all the places they mentioned. All of us went to the airport and gave them a send off.

★

# The Wonders of Science

E. Suganthy
Year 9 'C'

The greatest achievement of man during the last two thousand years of recorded history is his scientfic progress, We are living in the middle of the last quarter of the twentieth century. This period seems to be the apex of scientific advancement. The wonders of science are innumerable.

We have achieved several benefits through electronics. The creation of 'Robo' is one of the major achievement in science. By this process several things are being done without a slightest mistake. Computer machine can add, subtract or divide any numbers without any mistakes.

Space travel is also another major scientific invention which brought about benefits to man kind. In the year of 1969 Russia sent a man to the moon and created history in space travel. Several satellites are being sent in the air by several countries including India. These satellites are useful to exchange messages and to get information from other planets.

As a result of advancement in science several countries have detected air missiles which go from one continent to another. In this sphere India has recently tested a missile known as "Akini" which can travel thousand five hundred kilometres.

Another great achivement in science is the heart transplant. Recently this was done sucessfully in America by Dr, Christie Bernard.

Several problems have arisen due to the population explosion in this world. People are faced with problems of food and shelter. Science is now exploring the possility of find. ing out food from the sea and new place to live in.

This way due to scientific advancement the world is progressing,

# What a friend should be?

B. Manoranjitham
Year 11 A

"A friend in need
Is a friend indeed"
So the saying goes.
Just how much we
Expect from a friend
Heaven only knows.

She should be loving
She should be gay
She should ke giving
In evary way.

She will be there in my happy hours
She will be there in my sad hours
She will be there in my every care
She will even be there when I'm bad

My friend will tell me when I am wrong
She will wait for me when I am gone
She will not carry tales about me
That's what I'd want a friend to be
Ant that's the friend I'd like to be.

# My Ambition in Life

**Laavanya Suntharalingam**
Year 10 B

All of us have ambitions. Each one has different aims. But my ambition is to be a teacher.

Doctors can treat and cure patients. Engineers can draw plans and build skyscrapers. But a teacher is the noblest person who guides the chlldren to form a good learned community. Children are the future citizens who are going to govern our country. Knowledge is power. Today the world has advanced so much that a man without knowledge has no place in society. Science and technology have taught us a great deal. but we have still more to learn. Man has conquerred space and is now trying to explore the universe. Only a teacher can help together all this knowledge.

If I become a teacher I will do my best to improve the studies and other activities of the children, Books alone is not education. There are severai talents to be developed in a child, sports, elocution, guiding, journalism, music, dance and drama are some of the activities of children. A Teacher guides the children to choose whatever field they like. One day these children will become national leaders, great discoverers, research scholars, famous doctors, popular editors and so on.

A teacher's duty is not with this much. A teacher must also teach the children good manners. obedience, unity, love and other such good habits, Man cannot live alone. He is a member of the community. So it is very important that a child should learn the art of living together. Friendliness could be learnt best at school. Hence teachers have the greatest responsibility in moulding the children to become useful and helpful citizens.

Thus it is seen that humanity depends on the teachers because they are the guardians of the future generation, I pray God make me a successfull teacher so that I can do great service to our Community and country.

## MY BEST FRIEND

I have many friends. some at home, some in my school, some in Point Pedro, some in Colomba, and others abroad. They all like me and I like them too. My pen friends write to me and I too write to them But of all of them I like one best. He lives with me He is in and out of my house. I bathe him feed him and look after him with care and kindness He comes with me where, ever I go He watches me studying. He comes with me when I Ibathe. He watches me when I take my meals When I come to school he comes with me up to the school gate. When the school is over in the afternoon he accompanies me home When I was sick and in bed for a week he never left my bed side. My sister, brother and mother also like him.

A friend in need is a friend indeed. Do you know who my best friend is? My favouite pet dog BUSH is my answer.

**S. Manimegalai**
Year 9 C

# THE HAND THAT ROCKS THE CRADLE RULES THE WORLD

**Nilani Ramanathan**
Year 11 C

A Roman Catholic Cardinol once said "give us the childen until they are seven years old and you can keep them the rest of their lives." He meant that the first seven years of a man's life are the most impressionable and that the teaching and training he receives as young child will never be forgotten.

There is no doubt that the impressions made on receptive nature of a child in his early years are not easily forgotten. It has great deal to do with filling his character and opinions. It is the mother who has the greatest influence on the child. The child is with it's mother all day and night. It is the mother that feeds. She cares for it in babyhood. It learns it's first lesson at it's mother's knee. Most of its early moral training is given by the mother.

The father is away from home at his work most of the day. but he has to take his share in the training of the child. His influence cannot as a rule be as great as the mother's. What they do in the world as men and women is largely determined by what their mother did for them when they were small. It is the mother's hand that rocks the cradle and it is her hand that indirectly rules the world.

If the influence of the mother is good and wise it will help in the creation of a good future for the country itself. So the future of any nation depends on the character and training of mothers. It is therefore supreme important that the mothers should be educated and fitted for the important task. Hence many strong arguments are for the proper education of women. We can assure that no race can be really stong and progressive whose women are ignorant and untrained.

So women education is a must to the growing world. ★

## *Mother Therasa*

Mother Therasa was born in Yugosavia on August 21st in 1910. She s very old and feeble. Her face is wrinkled, but stil she goes round the world helping the poor and the helpless.

Her paraents named her Agnes, But when she grew old she changed :t to Theresa She lived very happily with her parents, but her ambition was to look after the helpless. So she went to Calcutta to help the poor and make them happy. She was very kind-hearted and was full of noble thoughts.

She won the noble prize for peace in 1979, She used that money to build houses for homeless.

Her life was good. She lived on simple meals. She used to wear white sarees with blue boarder She loved children. She gave them food, clothing and shelter Above all she tried her best to make them happy. She fonnd a home for unwanted children, and looked after them like a mother. She was loved and respected by the people all over ths world. May she live long!

**B. Chanthiriga**
Year 9 C

# Babuji

S. V. Raja Rajeswarie
Year 10 B

India was blessed with a child, on the second of October 1869. This child was destined to be a National Hero by redeeming the people of India from bondage. The child was no one else other than the great soul Mahathma Gandhi.

Mohandas Karamsand Gandhi was born into a highly respec ted Hindu family at Porbandar near the city ol Bombay His boyhood was like any other one. He gladly acted according to his mother's advices. At the tender age of thirteen in keeping with the traditions of that time Gandhiji was wedded to Kasturbai However he completed his schooling and worked his way to the United Kingdom There he read for law at the University of London. He practised law in Bombay for a while and shifted to South Africa in 1893. It was in Africa, that the flames of Indian freedom and revolt against anti Asiatic law were kindled in Gandhi's heart. It was in South Africa that he founded the National Indian Congress

Gandhiji had many a virtues. Truth was God to him. It was through truth he felt God and Ramanama was always on his lips. He respected all religons. He led a simple life.

His clothing were home spun Linen cloth and a shawl. Winston Churchill once referred to him as "a half naked Hindu Fakir". Gandhiji existed on Almonds, goat's milk and fruits.

He planned his daily tasks to the dot. For him time was precious. That's why, a pocket watch was a life long companion of his.

He uplifted the fallen and fought for removal of untouchability. He deeply felt for the poor. In order to slate the hunger and thirst of the suffering masses he worked on the Chakara which is now an emblem on the National Flag of India.

All these virtues went a long way for this frail gentlest of men to win the hearts of Indians. The mass following helped him to secure India's freedom in 1947 Gandhi's weapons in the freedom fight were implicit reliance in God truth, Ahimsa and sathiyagraha. With these weapons he paved the way for the setting on the sun in the British Empire, But alas! on January 30th 1948 Mahathma Gandhi was sent to the celastial abode by a Hindu, son o the soil.


You cannot say, You must not say
That he is dead. He is just away,




கல்விச் சுற்றுலாவின்போது திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில்
ஆசிரியர் குழாம்



பரிசளிப்பு விழாவிற்கு வருகைதந்த கல்விப்பணிப்பாளர் அவர்கள்
வரவேற்கப்படுகின்றார்.





# Reminiscenses

Dr. Mrs. Sugirtharanee Kathirgamar

Thirty odd years have rolled by– I had just entered the teenage group. Repercussions of the first communal riots in may 1958 led us to flee from Colombo to the North for safety. We were packed like sardines in the home - bound train. But we thought we were lucky because we were not dumped into the ship like several others who had to undergo much difficulty for winr of the basic amenties.

Alas! there was a shock awaiting us in Puloly too. Our house was half – burnt – a gesture of retaliation by our own counterparts because the tenants were Sinhalese. We were refugees in our own home – town. My grandma was pleasantly surprised to see her daughter (my mother) who was supposed to have been killed by thugs.

Gradually life returned to nomal and we were faced with the problem of my schooling. I was given a choice, I could be hosteller and attend a school in Jaffna town or enjoy the comforts of home and go to a school in Puloly. Life in the hostel was too much for me to stomach and so began my life at Vada Hindu. I gave up my frock and switched on to the more conservative long skirt and blouse which was supposed to be the traditional dress of the time. On the first day it was a great consolation when I realised that there were about hundred refugee children like me. For the first few days we were like exhihits in the art - gallery because all the girls congregated around us very curious to know about our experiences down South. Most of them were sympathetic and welcomed us whole heartedly. Ofcourse a few of them were cynical doubting our desire to have our education at Vada Hindu. This was a challenge to my teenage mind and I made a firm resolution that I would stay on and prove my calibre.

Days went by I was happy with my new friends and the teachers were very helpful and gave me all the encouragement I needed. But the situation in Colombo was improving and my father, brothers and sisters went back. Anyway life in school was a pleasure to me and I had no regrets. It was a practical joke in Vada Hindu to attach a coin to the head piece of the saree when the teacher wore a new kit. Our English teacher venerated by us, was a serious minded person whom we thought would object to such fun and frolic. I took a bet with one of my colleagues that I would dare to have some fun with her. So one fine day when she came in a new saree I did my part When she came to class we all held our breath anticipating punishment or scolding for our boldness. But it was a thrill to us when she turned round and smiled. We all smiled and enioyed the day. I was given a sweet as was the custom.

Any article connected with Vada Hindu can never be complete without a word about the Principal Miss K. Charavanamuththu. At the start we were terrified by her appearance. That our estimation was totally wrong

was made clear when she came to our class to teach Physics. Not only as a Principal even as a teacher she was exemplary. And it din't take me long to realise that she had a noble heart too.

Apart from studies, there were extra - curricular activities like music, dance, litarary clubs and sports The Games Captain was deceived by my height, but soon chucked me out from the Net-ball Team. Anyway when my colleagues won races or played Net-ball matches I was always there to cheer them and inspire them, And I made my mark as a musician and comedian. I had become so engrassed in my school work and activities that when my brother suggested that I get back to Colombo I refused. All was well till an SOS came from Colombo requesting my mother to come over because my sister was down with Hepalitis. Her infant child had to be looked after. I had to stay with an aunt till the end of the year. And finally when the time came for me to leave Vada Hindu it was a weeping session for me and my colleagues. The six months stay at Vada Hindu remains indelible in my mind and will ever continue to be so.

—O—

## *The Peace*

We are seeking for peace!  
But who will make peace  
Neither you nor I will Ease  
With this peace  
Because there, are so many  
Unseltled cases

The shelled and bombarded houses  
All around the places  
The pillars are standing like  
A quesrion mark  
The land—lord with his finger  
On his nose a question mark  
All are in doubt whether

The peacemakers will succeed  
If the peacemakers do not proceed  
we are certain of another fight  
So there is again another shelling  
Which we are not willing  
So shall we all march for peace.

- **M. Ketharagowry**  
Year 10 B

## *THE IMPORTANCE OF CONSERVING THE NATURAL VEGETATION*

**Vasuki Siniah**
Year 11

One of the valuable assets that nature has bestowed on us is the natural vegetation. It is seen in almust all parts at the world. It is the central pivot on which the whole world exists as they are the food producers. As such it is our foremost duty to conserve them.

Major part of the natural vegetation is destroyed to provide housing and cultivation facilities. In most of the countries forests are destroyed to put up factories and industial centres. The trees are further cut down for timber and firewood purposes. If we do not care to conserve the rree cover we will have to undergo many hardships.

Let us now examine the evil effects of deforestation to soil erosion is one of, the worst evil effects of destroying plants. Trees serve as the best surface cover crops of the soil and prevent soil erosion to a great extent. Even earth ships are prevented to a certain extent by trees.

Plants help not only in the conservation of soil but also in its formation by the weathering of rocks.

The loss of water from the soil is also prevented by the trees. If there is no moisture in the soil, the springs will go dry and all vegetation will die off. Agriculture will be affected and there will be famine as no food production will be possible.

Further more conservation of trees increases the underground water resources as well. It helps agriculture to be great extent.

Further, the humidity of the air is also protected by the plants. During transpiration the plants lose water to the environment and increase dampness of the air. The trees also help us to get rain and maintains the balance of nature.

Moreover, the forests are the seats of origin of many valuable medicinal herbs. These herbs are of immense use for curing many diseases.

It has also been established by scientists that deforestation is the main cause for great changes in weather conditions.

The natural vegetation gives beauty to the landscape and tourists are attracted by the scenary, In addition tree cover serves as the best defence for trees of a country

It goes without saying that all the facts enumerated above, very well illustrate the importance of conserving the tree cover, which keeps the world going. It there are no trees on earth, no living organisms can exist since plants are the food producers of the world.

# The tourist attactions in Sri Lanka

Sorubalatha Kulaveerasingam
Year 11 A

## KANDY

Kandy is in the central hills of Sri Lanka. It is the capital of rhe central province of Sri Lanka. It is one of the beautiful towns of the Island. Kandy is supposed to be t h e m o s t magnificiently sited town in the world. The University of Peredeniya and the Botanical Gardens are in close visinity to this town.

There is a lot of tourist attractions. Kandy and the chief of these is the temple of the tooth. The other ancient temples are the Malwatte and Asgiriya and are in-charge of a Mahanayaka Thero. The Chief Mahanayaka Thero is the head of the Budhist sect in Sri Lanka. It is a centre of pilgrimage to the Budhist. The Audience Hall constructed in seventeen eighty four is a building of interest in Kandy. Ancient Kandian Art and architecture work on brass, silver, ivory and wood can be seen in the ancient temples

The lake in the heart of the town adds the beauty to the town. The main attraction in Kandy is the traditional Kandy Perahera held annualy in every August. It is a most spectaculor pageant in the world. People of the world pour all in thousands during this seasons to witnes this traditional Perehera.

Kandyan dance is a traditional attraction to this Pereehra. Kandyan dance is one of the ancient forms most complex in its technique and symbolism. Also it stiil remains one of the purest forms of national expression in Sri Lanka despite of century and a half of foreign domination. The movements of Kandyan dancing is very graceful and it appeals to the aesthetic sense of exponents of traditional dancing the world over. The drummers part is vital in this form of dancing. No Perehera or fesfival in Sri Lanka is without a team of Kandyan dancers.


"If a man needed a tangible proof that there was a God, it was His creation of women. Nothing that man had ever made or aspired to make could begin to compare with one. A women was Heaven and Hell, fire and ice, temptation and fulfilment, Yes, she was even life itself, all moulded into one intricate pulsating, shapely package, pre-wrapped in the silken fabric of which man's dreams were women."



எமது சாரணியர் குழு, அதிபர், ஆசிரியர் ஆகியோருடன்.



பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்.





# பாடசாலையில் சமயக் கல்வி

செல்வி ஏ. பிரியதர்சினி
ஆண்டு 11

இன்று ஈழநாட்டிலுள்ள பாடசாலைகளிலே சமய பாடம் முக்கிய பாடமாக அமைந்திருப்பது போற்றத்தக்கது. சைவம் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் பாடசாலையிற் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்களிலே மாணவர்கள் விசேட சித்திகளைப் பெறுவதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

எம்மொழிக் கல்வியும் ஆரம்ப வளர்ச்சியின் போது சமய அடிப்படையிலே வளர்ந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. உலகம் புகழும் உத்தம மொழியாகிய ஆங்கிலம் இன்று உலகம் முழுவதும் பரந்திருக்கின்றது. அதுவும் வளர்ச்சியின் தொடக்கத்தில் சமயச் சார்புடையதாகவே இருந்துள்ளது. வேதாகமம் முக்கிய பாட நூலாக இருந்தது. கிறிஸ்தவ பாதிரிமார்களும் திருச்சபையினரும் சமய அடிப்படையிலேயே ஆங்கிலக் கல்வியை வளர்த்தனர். ஆனல் தமிழ் மொழியோ சமயத்தால் உருவாக்கப்பட்ட உறுதியான மொழி எனலாம். உலகிலே எம்மொழியிலும் காணக் கிடைக்காத அளவு இலக்கண நூல்கள். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், திருமுறைகள், புராணங்கள் ஆகியன சமயச் சார்புடையனவாகவே உள்ளன.

ஆலயங்களிலே சமய மரபுகள், மக்கள் வாழ்க்கையில் கல்விச்சாலைகளுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்தன. குருகுலவாசமாக இருந்து அறநெறி பயின்ற அன்றைய மரபு வழியில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வளர்ந்தன. அதனைத் தொடர்ந்து பள்ளிக்கூடங்களும் சமயக் கல்விக்கு இடம் தந்தன. கட்டாய சமயக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து நாவலர் பெருமானல் தொடக்கப்பட்ட சைவப் பாடசாலையின் வழியே சைவக் கல்வி இளைய தலைமுறையினரின் சிந்தைகளிலே பிரகாசித்தது. ஆங்கிலமும் திருச்சபையினரால் உலகம் முழுவதும் பாடசாலைகளிலே பயிற்றுவிக்கப்பட்டது. சிங்கம் மொழியையும் பிக்குகள் பௌத்த கோயில்களிலே கற்பித்தனர். இவ்வாறு பாடசாலைகள் உலகெங்கும் சமயத்தின் அரவணைப்பிலேயே வளர்ந்துள்ளன.

மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் எனக் கூறப்படுகிறது. ஒழுக்கம், அன்பு, இரக்கம் ஆகிய நெறிகள் இல்லாத போது அவன் மிருகமாகிறுன். கொம்புள்ள மிருகங்களுக்கு ஐந்து முழம் விலக வேண்டும்; குதிரைக்குப் பத்து முழம்; யானைக்கு ஆயிரம் முழம். ஆனல் தீயோருடைய கண்களிலேயே சிக்கக்கூடாது என்ற தமிழ் மூதாட்டியின் கூற்றை வேதமந்திரமாகவே கொள்ள வேண்டும். ஆகவே உயர்ந்த பண்பாலேயே மனிதன் போற்றப்படுகின்றுன் என்பது வெளிப்படை. மிருகத்தனம் நிறைந்த மனிதனைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியது எது? சமயக் கல்வியும், அறநெறிக் கல்வியுமாகும். எவ்வளவுதான் கற்றுலும் இறைபக்தி இல்லாவிடின் ஒரு பயனுமில்லை என்பது திருவள்ளுவரின் அபிப்பிராயமாகும். ஆகவே கல்வி கற்பிக்கும் இடங்களில் இறைவனை அடையக்கூடிய சமயக் கல்வியை யூட்டல் மிகப் பொருத்தமானதும், வரவேற்கக் கூடியதும் ஆகும்.

மாணவரின் பிஞ்சு உள்ளங்களிலே இறை பக்தியையும் நல்லொழுக்கத்தையும் பதிய வைப்பதே பாடசாலைச் சமயக் கல்வியின் நோக்கமெனக் கூறலாம். புதுமைக் கவிஞன் பாரதியும்,

"பொய் சொல்லக் கூடாது பாப்பா –
என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா"

என்று குழந்தைப் பருவத்தினருக்கு அறிவுரை வழங்கினர். பாடசாலையில் சமயக் கல்வியில் மாணவர் அதிக ஈடுபாடு இல்லாதிருக்கின்றனர். சமயமும் ஏனைய துறைகளைப் போல ஆராய்ச்சி செய்து கற்கக்கூடிய கலையாகும். மேல் நாட்டினரும் தமது இயந்

திர வாழ்க்கையில் சலிப்படைந்து மன அமைதி தேடி எமது சமயக் கல்வியை நாடுகின்றனர். சமயக் கல்வியைப் புறக் கணித்த மாணவர் ஒழுக்கம் உடையவர்களாக வாழ முடியாது. ஒழுக்கமற்றவர்களால் சமூகமே கெடும். நாட்டிலே நடக்கின்ற கொலை, களவு, விஷமத்தனம் ஆகிய இவைகள் எல்லாம் களைய வேண்டுமானல் பாடசாலைகளில் மாணவர்கள் சமயக் கல்வியை உற்சாகத்தோடு மனமுவந்து கற்க வேண்டும்.

மேல்நாட்டுப் பாதிரிமார்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முடிந்ததற்குக் காரணமாக அமைந்தது பாடசாலைகளே— அவர்களும் கிறிஸ்தவ மதக் கல்வி மூலம் பல பண்பாளர்களை உருவாக்கித் தந்துள்ளனர். எனவே பாடசாலைதான் உயர்ந்த கருத்துக்களைப் பிள்ளைகளிடையே பரப்புவதற்கு உயர்ந்த சாதனம் என்பது வெளிப்படை.

சமயக் கல்வியே ஒழுக்கத்தைப் போதிக்கக் கூடியது. அரசன் ஆசிரியன், தாய், தந்தை, தமையன் ஆகியவர்களை ஐங்குரவர்களாகப் போற்றுவது. ஐம்பெரும் பாவங்களை அகற்றும்படி போதிப்பது.

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன்
பராபரமே',

என்றும், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்றும் பரந்த ஒருலகக் கொள்கையை மக்களிடையே பரப்ப முற்படுவது, தீமைகளையே செய்து கொண்டிருக்கும் ஒருவனுக்குத் திருப்பி அவனுக்குத் தீமை செய்யாமல் அவன் நாணுமாறு நன்மைகளையே செய்யுங்கள் என உள நூல் சம்பந்தமான உண்மைகளை எல்லாம் மாணவர் உணர்வதற்குப் பாடசாலையும் ஆங்கு அமைந்துள்ள சமயக் கல்வியும் உதவி புரியும் என்பதில் ஐயம் இல்லை.

## அழுதால் கிடைக்கும்!

அழுகையில் தமிழ் அழுகை, இந்தி அழுகை, ஆங்கில அழுகை, தெலுங்கு அழுகை என்று மொழிப் பிரச்சினை கிடையாது. சிலர் கண்ணீர் விட்டும், சிலர் தேம்பியும் அழுகின்றனர். குழந்தை பிறந்ததும் பாலுக்கு அழுகிறது. தாயார் பால் கொடுக்கிருள். ஐந்து வயதுக் குழந்தை மிட்டாய், புத்தகம், விளையாட்டுப் பொருள் கேட்டு அழுகிறது. பெற்ருேர் குழந்தையின் ஆவலைப் பூர்த்தி செய்கின்றனர். அதேபோல பலர் அழுகையின் மூலம் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். அப்படியிருக்க, ஆண்டவனிடம் அழுது மனம் உருகி அவனிடம் வயப்பட்டால் நாம் விரும்புவதை அவன் கொடுக்காமல் போவனு!

— திருமுருக கிருபானந்த வாரியார்.

# தமிழ் மொழி

செல்வி த. கிரிஜா
க. பொ. த. (உயர்தரம்) கலைப்பிரிவு

வையகத்தில் உலவிவரும்
வளமான மொழிகளாய்
விளங்கிடும் மொழிகளதில்
வியத்தகு சிறப்பும்
விஞ்சும் இனிமையும்
கொஞ்சும் நவரசமும்
குழைந்தெடுத்த செங்
குங்குமமே தமிழெனும்
கோலமிகு மொழியாகும்.

எண்ணிட இனிக்கவும்
கண்ணிட ஜொலிக்கவும்
மொழிந்திட புதுமையும்—செவி
மடுத்திடப் பழமையும்
மிகவே கொண்டதுவே
மாண்புமிகு செந்தமிழாம்.

கேட்போர் செவிகட்கு
கொள்ளையின்பம் அளித்திடும்
கோலத் தமிழ்மொழி
கொற்றவன் முதலாம்
குடிமக்கள் வரையும்
களிப்புடன் பருகும்—ஓர்
கலைமகள் கொடையாம்.

காதல் மொழியென
கற்றோரும் மற்றோரும்
போற்றி ஏத்திடும்
புனித மொழியதாய்
புதுமணம் வீசுது
புவிதனில் தமிழிது.

இனிமைச் சுரங்கமதை
இன்னமும் தனதாகக் கொண்ட
எற்ற மிகு தமிழ்மகள்
எண்ணிலா ஆண்டுகளை
எடுத்தாலும் ஆயுளாய்
நடைதனைத் தளர்ந்தாளில்லை
கொடியிடை இகழ்ந்தாளல்ல

நாகரிக மோதலில்
நசுக்குண்ட மானிடர்கள்
தமிழ்தனைக் கொன்று—உடன்
தறிகெட்ட கலப்புமொழி
தனையே தம் மொழியென்று
தட்டி முரசு கொட்டுகின்றார்.

தமிழன்னை மடியினிலே
தவிழ்ந்திடும் மானிடரே
துடிக்கலையா உமதுள்ளம்
துதித்துப் போற்றத் தமிழ்மொழியை
நெடுங்காலம் தமிழ்வாழ
நிமிர்ந்தே நாம்வாழ
கலப்பின மொழியை
கலைத்தே ஒழித்திடுவோம்.

எட்டுத் திசை தனிலும்
எண்ணிலாப் புகழ் படைத்து
ஏற்றியுள்ள தமிழ்மொழியென்னும்
ஏற்றமிகு இனியகொடி
ஏறட்டும் வானளாவ
இலங்கட்டும் அதன் பெருமை.

*

# ரோசாப் பூக்கள்

எந்தன் வீட்டுத் தோட்டத்தில்
என்றும் மலரும் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
கருத்துக் கினிய பூக்கள்

வாச முள்ள பூக்கள்
வண்டு வந்து தேனை
ஆசை யுடன் குடிக்கும்
அழகான பூக்கள்

பட்டுப் போன்ற பூக்கள்
பல இனத்துப் பூக்கள்
கட்டழகுத் தங்கை முகம்
காட்டும் ரோசாப் பூக்கள்.

தி. தாரணி
ஆண்டு 4 B

# திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை

வி. இராஜ இராஜேஸ்வரி
ஆண்டு 10 B

ராஜன் என்றொரு பையன், பிறந்த அன்றே தன் அன்னையைப் பறிகொடுத்த அபாக்கியசாலி. தன் தாயின் அன்பையும் தந்தையிடமே பெற்று வந்தான். இப்படியாக வாழ்ந்து வரும் நாளிலே அவனது அன்பைக் கூறுபோட ஓர் சிற்றன்னை வந்தாள். தந்தையின் அன்பு படிப்படியாக குறைந்து வருவதை அவனால் நன்கு உணர முடிந்தது. ஆனாலும் அவன் கல்வியில் சூரப் புலி. விளையாட்டில் வீரப்புலி. அவனே வீட்டு வேலைகளில் பாதிக்கு மேல் செய்ய வேண்டியதாக இருந்தது. பாடசாலைக்குச் சென்று படிக்கும் நேரம் தவிர்ந்து அவனுக்குப் புத்தகத்தை புரட்டிப் பார்க்க நேரமே கிடைக்கவில்லை. கடைக்குச் சென்று சாமான்கள் வாங்குவது மட்டுமல்ல, வீட்டில் சமையல் வேலை, எல்லோருடைய உடைகளையும் துவைத்தல் ஆகியவை அவனே செய்ய வேண்டியிருந்தது.

அவன் கல்வி கற்கும் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி வந்தது. எனவே விளையாட்டிற்காகப் பயிற்சி வழங்கப்பட்டது. சில சமயங்களில் நேரம் சென்று வீட்டிற்குப் போனால் அன்று முழுவதும் அவன் பட்டினி. அது மட்டுமல்ல முற்றத்தில் முழங்காலில் விடியும் வரை நிற்க வேண்டியதுதான். சில வேளையில் நெருப்புக் கொள்ளியும் அவனது பிஞ்சு உடலைப் பதம் பார்க்கும். இப்படியாக இவனது சிற்றன்னையின் கொடுமைகள், அட்டூழியங்கள் 'வளர் பிறை' போல் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தது.

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு''

என்னும் குறளின் கருத்தை நினைத்தாளா? நினைத்திருந்தால் அவ்வாறு செய்திருக்க மாட்டாள்.

ராஜனுடைய தந்தையின் தமக்கையின் அன்பு ராஜனுக்கு இருந்தது. தன் தம்பியின் போக்கை எண்ணி அவ் அக்காள் மனம் மிக வருந்தினாள். திருநாவுக்கரசரைப் போல் என் தம்பியும் மாறிவிட்டானா? அப்பர் சமயத்திற்காக மாறினார் ஆனால் இவனோ தனது மனைவியின் அடாவடித்தனங்களுக்குச் சம்மதிக்கிறானே என எண்ணி எண்ணி மனம் சலித்துக் கொண்டாள். அது எவ்வாறு இருந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது ராஜன் படும் துன்பங்களையெல்லாம் தம்பியிடம் எடுத்துக் கூறினாள். ஆனால் அவனுக்கு அவை எல்லாம் புறக் குடத்து வார்த்த நீராயின.

ராஜனுடைய அத்தையும் படுக்கையாகி ஒரு வார காலத்தில் காலமாகி விட்டாள். அவன் படும் வேதனையோ சொல்லற்கரியது. ஆனால் பாடசாலையில் படிக்கும் கல்வியைக் கற்று அவன் முதல் மாணவனாகத் தேறி சாதாரண பரீட்சையில் திறமையாகச் சித்தியெய்தினான். அச் சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்ள ஓர் நல்ல உள்ளம் இல்லையே.

ஆசிரியர், தலைமை ஆசிரியர் கூறிய நல்லாசிகளையும் யாருக்குக் கூறுவான்? அவனை வளர்த்த அத்தையும் உயிருடன் இல்லை. என்ன செய்வான்?

பாவம் ராசன் அத்தையின் புகைப் படத்துக்கு முன்னால் நின்று மனம் விட்டுப் பேசுவான். அதில் அவனுக்குப் பெரிய திருப்தி. படுக்குமுன் அத்தையுடன் ஏதாவது பேசுவான். படுக்கைக்குப் போனபின் இவன் யாருடன் பேசுகிறான் என அவனது சித்தி வேவு பார்த்தாள். ஓகோ! இந்தப் படம் உன்னுடன் பேசுகிறதா என்று யோசித்து விட்டு மறுநாள்காலை அந்தப் படத்தை எடுத்து எங்கோ ஒரு மூலையில் போட்டு விட்டாள். ''பூசை அறையினுள் இருக்க வேண்டிய படம். புழுதியினுள் கிடக்கிறதே'' என எண்ணி அழுவான். இவ்வாறாக வருடங்கள் பல உருண்டோடின. தந்தையும் திடீரென்று மாரடைப்பால் உயிர் துறந்தார்.

''காலம் ஒருநாள் மாறும் நம் கவலை கள் யாவும் தீரும்'' என்பது போல் சித்தி யின் நச்சரிப்பும் துரிதமாக வளர்ச்சி அடைந்தது. அவனால் அவற்றைப் பொறுக்க முடியாத நிலையில் வீட்டை விட்டு வெளி யேறினான். கால் கடுக்க, பசி ஒரு பக்கம் வதைக்க கால் போன போக்கில் அவன் போய்க்கொண்டே இருந்தான், ஒரு வயோ திப மாது அவனது நிலையைக் கண்டு இரங்கி அவனுக்குத் தனக்கு இருந்த பழையதில் ஒரு பகுதியை உண்ணக் கொடுத்தாள். அப்போது அவனுக்குத் தனது அத்தையின் ஞாபகம் வந்தது. ''உங்களைப் போல் நல்ல இதயம் கொண்டவர்களும் இவ்வுலகில் உள் ளார்கள் தானா அத்தை'' என்றவாறே மர நிழலில் படுத்துறங்கினான்.

மீண்டும் எழுந்து போய்க்கொண்டிருந் தான். கண் தெரியாத ஒருவன் கால் தடு மாறிக் கீழே விழுந்து கிடந்தான். ஆனால் அந்த வீதியால் போவோர் யாருமே அவ் ஏழையின் அலறலைக் கேட்க வில்லை. இதனைக் கண்ணுற்ற ராஜன் ஓடிப்போய் அவ்வயோ திபரைத் தூக்கித் தரையில் இருத்தி என்ன நடந்தது என்று விசாரித்தான். அப்போது தான் அவனுக்குக் கண் தெரியாது என அறிந்தான், ராஜனும் கண் தெரியாதவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமது நிலையைக் கூறி ஆறுதல் அடைந்தனர்.

தம்பி! எனக்குப் புறக்கண் மட்டும்தான் தெரியாது. ஆனால் அகக்கண் குருடாக வில்லை. அகக் கண் குருடான மனிதர்களை எண்ணிப் பார்க்கிறேன் தம்பி என்று கண் கலங்கி ராஜனையும் தன்னோடு இருக்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜனும் அவருடன் இருக்கச் சம்மதித்தான். 'அகதிக்கு ஆகாசம் துணை' என்பது போல இருவரும் ஒருவருக் கொருவர் துணையாக இருந்தனர். பெரிய வர் தான் பிச்சை எடுத்து ராஜனைப் படிக்க வைத்தார். அவன் படித்து உயர் தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக் கழகம் சென்று டாக்டராக வெளியேறினான். தன்னைப் படிக்க வைத்த அந்தப் பெரியவரை அவன் மறக்கவும் இல்லை. மறக்கவும் முடி யாது.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

என்பதற்கிணங்க அவன் உதவி செய்யவிரும் பினான். தந்தையைப் போல் தன்னை 'கண்ணை இமை காப்பது போல் காத்து வந்த அப் பெரியவரின் கண்ணை சத்திரசிகிச்சை செய்து புதிய கண்ணை வைத்துப் பார்வை யைப் பெறச் செய்தான்,

பின்பு தனது வருமானத்தில் ஒரு அநாதை ஆச்சிரமம் அமைத்து அப்பெரிய வரை அதற்குப் பொறுப்பாளராக வைத் தான். கேட்பவற்றைக் கொடுக்கும் வள்ள லாகப் அப்பெரியவரான பரதன் விளங்கி னார். கர்ணனையே மிஞ்சிய வள்ளலாக இருந் தார் பரதன். இப்படியாக அவர்கள் சந் தோசமாக வாழ்ந்து வந்தனர். 'டாக்டர் ராஜன்' 'கொடை வள்ளல் பரதன்' என் றால் அவ்வூரில் தெரியாதவரே இல்லை என லாம்.

ஒரு சமயம் அறிஞர் பெர்னாட்ஷா விளையாடச் சென்றிருந்த பொழுது தனது மேலங்கியைக் கழற்றி மரக்கிளை ஒன்றில் தொங்கவிட்டுச் சென்றிருந்தார். இவருடைய அழகின்மையைக் கேலி செய்ய விரும்பிய இவருடைய நண்பர் ஒருவர் கழுதையின் முகம் ஒன்றை இவருடைய அங்கியின் பிற்பக்கத்தில் வரைந்து விட்டு தனது நண்பர் களுடன் சேர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார். விளையாடி முடித்து வந்த ஷா தனது அங்கியில் இருந்த உருவத்தைப் பார்த்து எதுவித கோபத்தையும் காட்டாது 'யாரோ எனது அங்கியில் தனது முகத்தைத் துடைத்துள்ளார்'' எனக் கூறினார். இதைக் கேட்டு அங்கு சுற்றியிருந்த மாணவர் குழாம் 'கொல்' என்று சிரித்தது. படத்தை வரைந்தவரின் முகத்தில் அசடு வழிந்தது.

# யாழ்ப்பாண மாவட்ட சனத்தொகை அமைப்பும் தொழில் வாய்ப்புக்களும்

செல்வி கோமதி வேலுப்பிள்ளை (B. A. Cey.)

புவியியல் ரீதியாக வட அகலாங்கு 9° 5' — 9° 52' இடையிலும் கிழக்கு நெட்டாங்கு 79° 42'—80° 7' இடையிலும் அமைந்திருக்கும் யாழ்ப்பாண மாவட்டமானது 1064·5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட யாழ்ப்பாண தீபகற்பம் ஒருபகுதி — 1520·3 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதான நிலப்பகுதி இன்னொரு பகுதியென இரு பௌதிக அலகுகளாகப் பிரிகின்றது. இப்பரப்பளவில் கடல்நீர்ப் பரப்பளவு, மணற்றிடர்கள், பாவனைக்குட்படாத நிலங்கள் முதலியவற்றை நீக்கினுல் பயிர்ச் செய்கைக்கும் குடியிருப்புக்கும் பொருத்தமாக இருக்கும் நிலப்பகுதி 518 சதுர கிலோமீற்றராகக் குறைவடையும். இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 20 வீதம் ஆகும். இந்த 20 வீதமான நிலப்பரப்பில் மொத்தச் சனத்தொகையின் 90 வீதமான மக்கள் செறிந்துள்ளனர். இத்தன்மையானது மாவட்டத் தொழில் வாய்ப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக விளங்குகின்றது.

## சனத்தொகை வளர்ச்சியும் வேலை வாய்ப்பும்

ஒரு நாட்டின் சனத்தொகை வளர்ச்சியானது அரச பொருளாதாரக் கொள்கைகட்கும் உற்பத்தித் திட்டமிடலுக்குமேற்ற வகையில் இணைந்து செல்லாவிடின் பொருளாதாரத்தில் சில பாரிய விளைவுகள் ஏற்படும். ஒரு பொருளாதாரத்தின் வேலையின்மைப் பிரச்சனைக்குத் தனித்துச் சனத்தொகைப் பெருக்கம் மட்டும் காரணமெனல் முடியாது. சனத்தொகை வளர்ச்சிப் பிரச்சினை என்பது மக்கள் தொகையின் எண்ணிக்கை ரீதியானதொரு பிரச்சினையல்ல. அது மனிதநலம் சம்பந்தமானதும், அபிவிருத்தி சம்பந்தமானதுமான ஒரு பிரச்சினையாகும். உற்பத்திக் காரணிகளுள் உழைப்பு என்னும் காரணியை நீக்கி, ஏனைய காரணிகளின் பெருக்கத்திஞல் மட்டும் அபிவிருத்தியை எய்திவிட முடியாது. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் சனத்தொகை வளர்ச்சியும் முக்கிய தூண்டுகோலாக விளங்குகின்றது. ஒரு நாட்டின் சனத்தொகை வளர்ச்சியானது நுகர்பொருட்கட்கான கேள்வியைக் கூட்டுவதனூடாக, உற்பத்திப் பெருக்கத்திற்கும், உற்பத்திச் செலவுச் சுருக்கத்திற்கும், குறைந்த செலவில் உயர்ந்த வெளியீட்டு மட்டத்தை அடையும் வகையிலான உழைப்பின் நிரம்பலுக்கும் வழிவகுப்பதாகும். மூன்றும் மண்டல நாடுகளிலுள்ள பல பிரதேசங்களில் பெரியளவில் பயனை அளிக்கக்கூடிய பெருந்தொகையான பயிரிடு நிலங்கள் தரிசாக விடப்பட்டமைக்குச் சனத்தொகை வளர்ச்சிக் குறைவே காரணம் எனப்படுகிறது. 18ம் நூற்றுண்டில் பிரான்சிய நாட்டில் சனத்தொகைப் பெருக்கம் பாதிப்பை ஏற்படுத்துவதை உணர்ந்து. அந்நாட்டின் சனத்தொகையைக் கட்டுப்படுத்த முயன்ற பிரான்சிய அரசரங்கம், 19ம் நூற்றுண்டில் தொடர்ந்து நடந்த நெப்போலியப் போரினுல் குறைவடைந்த சனத்தொகை அமைப்பானது உற்பத்திப் பெருக்கத்திற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தடையாக இருப்பதைக் கண்டு, அந்நாட்டின் சனத்தொகையைப் பெருக்கச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டமை மனம் கொள்ளத் தக்கது.

சனத் தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையே ஒரு நேரிணைவு காணப்படுதல் வேண்டும். நாட்டின் வளத்துக்குத் தக்கவாறு சனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கொள்கையை விடுத்துப் பெருகும் சனத்தொகையின் பொருளாதார சமூக நலனைப் பேணும் வகையில் நாட்டின் வளங்களைப் பயன்படுத்தல் ஒரு பொருளாதாரத்தின் தகை திறனுக்குச் சான்றுகும்.

சனத்தொகைப் பெருக்க வேகத்திற்கு ஏற்ப உற்பத்திப் பெருக்க வேகம் அமையா மையே வேலை வாய்ப்பிலும், அபிவிருத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது மோல்தசின் கொள்கைப்படி சனத்தொகைப் பெருக்க வேகமானது 25 வருடங்கட்கு ஒருமுறை இரட்டிப்பாகிப். பெருக்கல் விருத்தியில் 1, 2, 4, 8' 16, 32......... என அமைய, உற்பத்திப் பெருக்க வேகமானது 25 வருடங்களில் 1, 2, 3, 4, 5, 6......... எனக் கூட்டல் விருத்தியில் அதிகரிக்கிறது. இவ்வகையில் பெருகும்போது இரு நூற்றாண்டுகளில் சனத்தொகை, உற்பத்தி விகிதங்கள் 256 : 9 என அமையும். இதுவே நாடுகளின் பொருளகதாரச் சமமின்மைக்குக் காரணமாகிறது. ஒரு நாட்டில் வளர்ந்து வரும் மனித வலுவைச் சரியான முறையில் பயன்படுத்தினுல் அது நாட்டின் துரித வளர்ச்சிக்கும் வளக்கிடைப்பனவுக்கும் துணை புரியும்.

## யாழ்ப்பாண மாவட்ட மொத்த சனத்தொகை அமைப்பு

1871ல் இலங்கையின் முதலாவது குடிசன மதிப்பீடு கணிப்பிடப்பட்ட போது யாழ். மாவட்டத்தின் சனத்தொகை அளவு இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 10·3 வீதமாகக் காணப்பட்டது. 1981ல் இறுதியாகக் குடிசன மதிப்பீட்டுக் கணிப்பின்படி இத்தொகை ஏறத்தாழ மூன்றரை மடங்காகக் கூடியுள்ளது. 1871—1981 வரையிலான யாழ்ப்பாண மாவட்டச் சனத்தொகையமைப்பும், அது மொத்தச் சனத்தொகையில் அமைந்துள்ள வீதமும் பின்வருமாறு காணப்படுகின்றது.

| ஆண்டு | யாழ் மாவட்ட மொத்தச் சனத்தொகை | இலங்கை சனத்தொகையின் வீதத்தில் |
|---|---|---|
| 1871 | 246100 | 10·3 |
| 1901 | 300900 | 8·4 |
| 1946 | 424800 | 6·4 |
| 1963 | 612600 | 5·8 |
| 1981 | 831112 | 5·6 |

ஆதாரம்; குடிசன மதிப்பீட்டு அறிக்கைகள்

மாவட்டச் சனத்தொகையானது 1871ம் ஆண்டிலிருந்து படிப்படியாகக் குறைவதைக் காண முடிகிறது. இவ்வீழ்ச்சிப் போக்குக்குக் குடியகல்வும் ஒரு காரணமாகிறது. மாவட்டத்தின் காலநிலையும் நீர்வளக் குறைபாடும் விவசாயப் பயிர்ச் செய்கைக்குப் பாதக காரணிகளாக விளங்குவதாலும், கல்வி கற்றோருக்கான வேலையின்மையும் காரணமாக யாழ்ப்பாண மாவட்டமானது எப்போதும் குடியகல்வு கூடிக் காணப்படும் ஒரு பகுதியாகும்.

உள்நாட்டுக் குடிநகர்வுக்குப் பொருளாதாதார நோக்கமும் வேலைவாய்ப்பு முயற்சிகளுமே காரணமாக உள்ளன. விவசாயப் பாங்குடைய கிராமிய பொருளாதாரங்களில் காணப்படும் உழைப்பின் நிரம்பலை உழைப்பிற்கான கேள்வியினுல் சமநிலைப்படுத்த முடியாவிடின், அங்கு காணப்படும் தொழில் சுருக்கத்தால் விவசாயத் துறையை விட்டு வெளியேறும் உழைப்பின் நிரம்பலானது கிராமப் புறங்களை விட்டு நகரப் புறங்கட்கு இடம் பெயரும். விவசாயத் துறையிலிருந்து வெளியேறும் மேலதிக உழைப்பை உறிஞ்சும் வகையில் கைத்தொழில் துறையின் முதலீட்டு விகிதம், கைத்தொழில் கொள்கைகள் நடவடிக்கைகள் போன்றன அமையாவிடின் நகர்ப்புறங்களில் கீழுழைப்பு நிலை தோற்றம் பெறும். யாழ்ப்

பாண மாவட்டத்தின் குடிப்பெயர்ச்சியும் சனத்தொகை அமைப்பிலும் வேலைவாய்ப்பு நிலைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

சர்வதேச குடிநகர்விற்கும் வேலை வாய்ப்புக்குமிடையே ஒரு நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. சர்வதேச குடிநகர்விற்குப் பல அரசியல் பொருளாதார சமூகக் காரணிகள் துணை புரிகின்றன. பொருளாதாரக் காரணிகளை நோக்கும் போது, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குக் குடிபெயர்ந்து செல்வதில் அந்தந்தப் பிரதேசத்து உள்ளூர்ப் பொருளாதார நிலைமைகள் எந்தளவு காரணமாக இருந்தனவென்று ஆராய்தல் கடினமானது. இந்தியத் துணைக் கண்டத்தின் குடிப்பெயர்வுப் புள்ளியல் பற்றி ஆராய்ந்த கிங்ஸ்லி டேவிஸ் என்பவர், குடிப்பெயர்விற்கு அடிப்படைக் காரணம் வெளியிடங்களில் காணப்படும் கவர்ச்சிகரமான பொருளாதார வேலை வாய்ப்புக்களே என்றும், உள்ளூர்ப் பொருளாதார நிலைமைகள் அத்தகைய தாக்கத்தை எல்லா இடங்களிலும் ஏற்படுத்துவதில்லை என்றும் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளில் காணப்பட்ட இந்த உயர்ந்த வேதனம், வாழ்க்கைத்தர வசதிகள் போன்றவற்றால் கவரப்படுவதுடன் மாவட்ட விவசாயத்தின் வரையறுக்கப்பட்ட பாங்கினால் அத்துறையில் உள்வாங்கப்படாத உழைப்பாளர் தொகுதியானது குடிநகர்வதில் ஆர்வங் காட்டினர். 1983ன் பின் சர்வதேசக் குடிநகர்வு கூடிக் காணப்பட்டாலும், திட்டமிடப்பட்ட அரச பொருளாதாரக் கொள்கைகள் அமையாமையால் வேலையின்மையின் அழுக்கத்தைக் குறைக்கும் வகையிலான உற்பத்திப் பெருக்கு அமையவில்லை.

## கிராம நகர அடிப்படையிலான வேலை வாய்ப்பும், வேலையின்மையும்

பெரும்பாலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் நகரமயமாக்கம் என்பது கைத்தொழில், பொருளாதார அபிவிருத்தியின் விளைவாகவே ஏற்படுகின்றது. ஆனால் குறைவிருந்தி நாடுகளின் நகரப் புறங்களில் காணப்படும் அதீத சனத்தொகைச் செறிவானது பொருளாதார விருத்தியின் முன்னோடியாகவன்றி, விரைவாக ஏற்படும் சனத்தொகை வளர்ச்சியாலேற்படும் பண்புகளில் ஒன்றாகவே விளங்குகிறது. அதிகரிக்கும் நகரமயமாக்கமும் தொழில் வாய்ப்பு நிலையை அளவிடும் ஒரு சுட்டியாகக் காணப்படுகின்றது.

இலங்கையிலும் யாழ் மாவட்டத்திலும் கிராமப் புறங்களின் சனத்தொகைச் செறிவை விட, நகரப் பகுதிகளில் செறிவு குறைவாக இருப்பினும், ஒப்பீட்டளவில் இலங்கையை விட மாவட்ட நகர்ப்புறச் செறிவானது கூடியே காணப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்ட மொத்தச் சனத்தொகையில் நகர சனத்தொகையின் அளவானது, 1911ல் 12·4 வீதமாகவும், 1946ல் 14·7 வீதமாகவும், 1981ல் 32·6 வீதமாகவும் காணப்படுகிறது.

கிராமப் புறங்களில் வாழ்ந்தவர்கள் நகரங்களை நோக்கிக் குடிபெயர்தல் அநேக நாடுகள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகும். யாழ் மாவட்டத்தில் நகர மயமாக்கம் கூடிக் காணப்படுவதால், கிராமியப் பண்பும் பெருமளவு விவசாய நடவடிக்கைகட்கு உகந்த சூழலையும் கொண்டு விளங்கும் மாவட்டத்தினதும் அதனைச் சூழவுள்ள தீவுகளினதும் உழைப்பாளர் தொகையின் பெரும் பகுதியினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது தெளிவாகிறது.

## மாவட்டத்தின் வயதமைப்பிலான சனத்தொகை அளவும் வேலைவாய்ப்பும்

வேலையின்மையைத் தோற்றுவிப்பதிலும், வேலை வாய்ப்பு மட்டங்களைத் தீர்மானிப்பதிலும் வயதமைப்பானது ஒரு முக்கிய காரணியாக விளங்குகின்றது. ஏனைய உற்பத்திக் காரணிகளும் தொழில் நுட்பமும் மாறாத நிலையில், சனத்தொகையில் வயதமைப்பானது உழைப்பின் நிரம்பலினூடாக வேலை வாய்ப்பு மட்டங்களைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சுதந்திர காலந்தொட்டு யாழ் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் உழைப்பாளர் தொகுதியினர் கணிசமான பங்கினைக் கொண்டு விளங்குகின்றனர். 1946—1981 வரையுள்ள காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் காணப்பட்ட, வயதுப் பிரிவினர் மொத்த மாவட்டச் சனத்தொகையில் வகிக்கும் வீதம் பின்வருமாறு:-

| வயதுப் பிரிவு | தொகை | | |
|---|---|---|---|
| | 1946 | 1971 | 1981 |
| 0——14 | 38·0 | 35·5 | 33·6 |
| 15——64 | 56·6 | 59·3 | 61·1 |
| 65ற்கு மேல் | 5·4 | 5·2 | 5·2 |

ஆதாரம்; குடிசனத்தொகை மதிப்பீட்டு அறிக்கைகள்

ஒரு பொருளாதாரத்தில் இந்த உழைப்பாளர் தொகை பெருகுமளவிற்கு வேலைவாய்ப்புப் பெருகவில்லையெனில் அது பல சமூக நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்து பெருகி வரும் இந்த உழைப்பாளர் தொகுதியை உள்வாங்கும் வகையில் தொழிற்றுறை வாய்ப்புக்கள் நெகிழ்வுடையதாய் அமைந்தனவா என்பது கேள்விக்குறியாகும்.

## யாழ்ப்பாண மாவட்டத்தின் தொழில் வாய்ப்புக்கள்

ஒரு நாட்டின் அரசியல் சமூக நிலைகளில் காணப்படும் உயர்விற்கு அந்நாட்டின் பொருளாதார நிலையே முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார நிலையில் முக்கியத்துவம் வகிக்கும் காரணியாகத் தொழில் வாய்ப்புக்கள் விளங்குவதைக் காணலாம்.

நாட்டின் வேலைவாய்ப்பைக் கூட்டக் கைத்தொழிற்றுறையின் விருத்தி முக்கியமென உணரப்படுகிறது. கைத்தொழில் துறையில் உருவாகும் ஒரு வேலைவாய்ப்பானது பல வேலை வாய்ப்புக்களை உருவாக்கப்பட்ட ஒரு தொழிற் பெருக்கியாக உள்ளது ஒரு நாட்டின் கைத்தொழில் வளர்ச்சி வீதத்திற்கும் வேலை வாய்ப்பு வளர்ச்சிக்குமிடையே ஒரு நேரிணைபு காணப்படுகிறதென்பதற்கு வளர்ச்சியடைந்த நாடுகளின் வரலாறு சான்றுகிறது.

யாழ் மாவட்டத் துறை ரீதியான வேலைவாய்ப்பில் கைத்தொழில் துறையின் பங்கு குறைவானதாகக் காணப்படுகின்றது. இதை கீழ்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| துறை | பங்களிப்பு (வீதத்தில்) | |
|---|---|---|
| | 1971 | 1981 |
| விவசாயத்துறை | 40·0 | 40·6 |
| கைத்தொழிற்துறை | 29·8 | 26·7 |
| சேவைத்துறை | 27·2 | 30·3 |

ஆதாரம்: குடிசனத்தொகை மதிப்புகளிலிருந்து கணிக்கப்பட்டது.

மாவட்டத்தின் வேலைவாய்ப்பில் விவசாயத் துறையின் பங்களிப்பே கூடுதலாகக் காணப்படுகிறது. இது ஒரு நாடளாவிய போக்காக உள்ளது. இலங்கையில் ஏனைய துறைகளை விட விவசாயத் துறையின் விரிவாக்கம்தான் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்பதால்

அரசின் கொள்கை அமுலாக்கங்கள் விவசாயத்துறையை நோக்கி மையப்படுத்தப்பட்டிருந்தும் இலங்கையின் விவசாயத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியிலோ வேலைவாய்ப்பிலோ அதிகளவு மாற்றம் ஏற்படாமையும், பொருளாதாரத் தேசிய வளர்ச்சிக் குறிகாட்டிகளில் இம்மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகக் காணப்படுவதும் மனங்கொளத்தக்கது. 1971, 1981 காலப்பகுதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலை வாய்ப்பு பெறுவோரின் தொழில் வகைப் பங்கீடு பின்வருமாறு அமைகிறது.

| தொழிற் பிரிவுகள் | 1971 | | 1981 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | வீதம் | மொத்தம் | வீதம் |
| 1. உயர் தொழிலும் இவை சம்மந்தமான தொழிலாளர்களும் | 12,589 | 7·6 | 16,331 | 8·9 |
| 2. நிர்வாக முகாமைத் தொழில்ாளர்கள் | 561 | 0·3 | 1,181 | 0·6 |
| 3. எழுதுவினைஞரும் இதுபோன்ற தொழிலாளர்களும் | 7,744 | 4·7 | 12,456 | 6·8 |
| 4. விற்பனைத் தொழிலாளர் (மொத்த, சில்லறை வியாபாரம்) | 14,752 | 9·0 | 16,932 | 9·6 |
| 6. சேவைத் தொழிலாளர்கள் | 9,245 | 5·6 | 8,459 | 4·6 |
| 6, விவசாய, கால்நடை வளர்ப்பு, காட்டுத்தொழிலாளர்களும், மீனவர்களும், வேட்டையாடுவோரும் | 65,853 | 40·0 | 74,349 | 40·6 |
| 7. உற்பத்தியும் அது சம்பந்தமான தொழிலாளர் களும், போக்குவரத்துச் சாதனங்கள் இயக்குனர் களும், கூலித் தொழிலாளர்களும் | 49,001 | 29·8 | 48,859 | 26·7 |
| 8. தொழிற் பிரகாரம் விபரிக்கப்படாத வேலையாட்கள் | 4,954 | 3·0 | 4,358 | 2·4 |
| மொத்தம் | 164,699 | 100·0 | 182,925 | 100·0 |

ஆதாரம்: குடிசனத்தொகை மதிப்பு

சுதந்திர காலத்திலிருந்து வேலைவாய்ப்பளிப்பதில் கைத்தொழிற்றுறையானது அத்துணை முன்னேற்றமுடையதாகக் காணப்படவில்லை. இலங்கையில் கைத்தொழிற்றுறை முன்னேறுவதற்கு முன்பே சேவைத்துறை முன்னேறி விட்டது. பொருளியலாளர் கருத்துப்படி, பொருளாதார விருத்தியில் ஒரு முன்னேற்றம் ஏற்படுமென்றும், அம்மாற்றமானது முதலில் விவசாயத்துறையிலேற்பட்டுப் பின் கைத்தொழிற்றுறையை அடைந்து, அதன் பின்னரே சேவைத்துறையை அடைந்து வளர்ச்சியை ஏற்படுத்துமென்றும் கூறப்படுகிறது இம்முறையில்தான் மேலைத்தேய அனுவங்கள் இடம் பெற்றனவென்றும். குறைவிருத்தி நாடுகளும் இம்முறையில் தம் கொள்கைகளை முன்வைப்பது அபிவிருத்திக்கு உதவுமென்றும் கூறினர். ஆனல் இலங்கையில் அந்நியராட்சியின் விளைவாகக் கைத்தொழிற்றுறை முன்னேற்றமடையு முன்பே சேவைத்துறை வளர்ச்சியடைந்துவிட்டது.

## தொழில் வாய்ப்புக்களும் பொருளாதாரமும்

ஓர் அரசின் சகல பொருளாதார சமூகக் கொள்கைகளெல்லாம்—அது விலைக் கொள்கை யாயினும் வேதனக் கொள்கையாயினும் சரி, வர்த்தகக் கொள்கையாயினும் வரிக் கொள்கை யாயினும் சரி — வேலைவாய்ப்பை அதிகரித்தல் என்னும் பிரதான நோக்கைக் கொண்டிருத்தல் வேண்டும். சனத்தொகை வளர்ச்சிஞலேற்படும் தீவிர நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் பொருளாதாரத் திட்டங்கள் அமைந்தாலொழிய நாட்டில் உருவாகும் பொருளாதார சமூக நெருக்கடிகளைச் சமாளித்தல் இயலாது, ஒரு பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கான தீர்வென்பதும், வறுமைநிலையொழிப்பிற்கான தீர்வென்பதும் வேலையின்மைப் பிரச்சினையின் தீர்வேயாகும்.

## எங்கள் சின்னப் பாப்பா

வீட்டுக் கொரு விளக்கே – பாப்பா
விண்ணுக்கும் நீ விளக்கே
பஞ்சம் பசிதீரப் பாப்பா
கொஞ்சும் மொழியுரைப்பாய்

மாயக் கண்ணுலே – பாப்பா
மருட்டிப் பேசிடுவாய்
பக்கத்தில் நீயில்லை யெனில்
பாவியாய்த் துன்புறுவேன்

தத்தெய் நடைபோட்டுப் – பாப்பா
தித்திக்கச் சிரித்திடுவாய்
தங்கநகையுனக்கேன் பாப்பா
கொஞ்சும் நகையிருக்க

ஓடிஉருண்டு வந்து – பாப்பா
ஓயாமல் துடுக்குரைத்தால்
வெல்லும் மொழியின்றி
மெல்லச் சிரித்திடுவேன்

வைகறைப் பொழுதினிலே – பாப்பா
வண்ணத் துயில் எழுவாய்
தூக்கி அரவணைத்தால் என்
துயரந் தீர்ந்திடுதே,

— சி மீஞம்பிகை ஆண்டு 6

## ஒழுக்கம்

''உலகிலுள்ள மதங்கள் எல்லாம் உயிரற்ற வெறும் கேலிக் கூத்தாக இருக்கின்றன. இப்பொழுது உலகத்துக்குத் தேவைப்படுவது ஒழுக்கம் தான். தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப் படுகிருர்கள். இத்தகைய அன்புடையவர் சொல்லுகிற ஒவ்வொரு சொல்லும் இடி யோசை போல எங்கும் விளங்கும்.''

— சுவாமி விவேகானந்தர்

# மாணவரின் விருத்திக்கு வழிகாட்டும் ஆசிரியர்

செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம்,
(கல்லூரிப் பழைய மாணவி)
ஆசிரியை, யா/வேலாயுதம் ம. ம. வி. பருத்தித்துறை.

கையில் பிரம்புடன் கடுகடுத்த பார்வையும் கொண்டு கண்டவர் மனதைக் கலங்க வைத்த ஆசிரியர் ஒரு பக்கம். உற்சாகத்தோடு, குட் மார்னிங்' சொல்லும் மாணவர்களுக்கு பதில் வணக்கம் கூறி 'புன்முறுவல் காட்டி கடமையில் ஈடுபடுத்தும் ஆசிரியர்கள் இன்னேர் பக்கம். அந்த வகையில் நமது கல்லூரியும் அன்றும் இன்றும் ஆசிரிய . மாணவரின் சுமுகமான உறவுக்குப் பெயர்போனது. மாணர்களின் எதிர்கால நலன் காக்கும் ஆசிரியர்களாக இன்றைய பாடசாலே அமைப்புக் கேற்ப நாம் கடமையாற்ற அன்றைய கல்லூரி வாழ்க்கையின் அனுபவம் பெரிதும் துணை புரிகின்றது என்ருல் மிகையாகாது.

ஆசிரியத்துவத்தை வாழ்க்கைத் தொழிலென ஏற்றுக் கொள்ளும் ஆசிரியர் ஒருவர் வெறும் சடப் பொருள்களோடன்றி மனித உள்ளங்களுடனேயே தாம் தொடர்புகொள்கிருேம் என்பதை எப்பொழுதும் மனதில் வைத்திருத்தல் பொருந்தும். அங்ஙனம் செயல்படுமிடத்து மாணவர்களை இனங்கண்டு கொள்ளல் அவசியமானது. மாணவர்களை அறிவுடனும் திறமையுடனும் உருவாக்குவது மட்டுமன்றி அத்திறன்களைத் தமக்கும் பிறருக்கும் பயன்படத்தக்கதாக உபயோகிக்கும் நோக்கத்துடனும் ஆற்றலுடனும் வெளியனுப்புவதற்கு ஒரு ஆசிரியர் பொறுப்பேற்க வேண்டும். இதற்கு ஒரு மாணவர் தன்னைப் பற்றி அதாவது தனது திறன்கள், உளச் சார்புகள், ஆற்றல்கள், மனப்பாங்குகள் என்பன பற்றிச் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழி செய்தல் பொருத்தமானது. பாடசாலையில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளோடு பேச்சுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் மாணவர்கள் தம்மை உணர்ந்து, தாமாக உற்சாகத்தோடு ஈடுபடுமிடத்து தமது ஆற்றலை வெளிப்படுத்தவும், வளர்த்துக்கொள்ளவும் மிகவும் முயற்சி எடுப்பர் என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் பொறுப்பான பதவிகளை வகிக்கும் போது தமக்குச் சரியெனப்படும் கருத்துக்களையும், அவசியமான அறிவுறுத்தல்களையும் பிறர் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு எடுத்துக் கூறும் வல்லமை கொண்டு சமுதாயத்தில் முதன்மை பெற்று விளங்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

நாளடைவில் வாழ்க்கையோடு தொடர்புடைய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் துணிவும் பெறப்படுகிறது. இப்பொறுப்பில் பெற்ருேர்களும் பங்கெடுப்பார்களாயினும் அவர்கள் தமது பிள்ளைகளின் தனிப்பட்ட புகழுக்குரிய நடத்தையில் ஈடுபடுதலையே எதிர்பார்ப்பர். ஆனல் ஆசிரியர்கள் பாரபட்சமின்றி மனிதாபிமானத்தோடு பொருத்த மானவர்களுக்கு முன்னுரிமை வழங்க முன்வருவர். இதனல் இவ்வாருன தன்திறன் அறிவித்தற் தொழிற்பாடு ஆசிரியர் இயற்றும் பெரும் சமூக சேவையாகும்.

மாணவர்கள் கல்வி தொடர்பான பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு உதவும் வகையில் கல்விக்குரிய ஆலோசனை வழங்கலும் ஆசிரியரின் பணியாகும். மீத்திறன் மாணவர்கள், மிதமான மாணவர்கள், விசேட தேவைக்குரிய மாணவர்கள், என்ற வகைகளுக்கமைவாக அவர்களைக் கற்றலில் ஈடுபடுத்த ஆசிரியரின் அவதானம், உற்று நோக்கல் என்பன இங்கு அவசியமாகின்றது.

மாணவர் சலிப்பு நீங்கி கற்றலில் ஈடுபடுத்தும் முகமாக நவீன கற்பித்தல்முறைகளைத் தெரிந்து பொருத்தமான கற்பித்தல் கருவிகளைக் கையாண்டு கற்றல் – கற்பித்தல் நிகழ்ச்சியை நடத்திச் செல்வது ஆசிரியரின் பொறுப்பான பணியாகும். கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட இடைநிலை பள்ளிப் பருவத்தில் பாட நெறிகளைத் தெரிவு செய்வதிலும் உயர் கல்வித் துறைகளோடு முறைசாராக் கல்வித் துறைகள் என்பனவற்றைத் தெரிவு செய்வதற்கும் ஆசிரியரின் வழிகாட்டல் இன்று பெரிதும் மாணவர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய சமூகத்தில் காணப்படும் வணிகத்துறை விருத்தி கைத்தொழில் மயமாக்கம் போன்ற காரணங்களால் பலரின் குடும்ப வாழ்க்கை பாதிப்படைகிறது. குடும்ப அங்கத்தவரிடையிலான உறவுகள் குறைந்து வருவதால் மக்கள் மத்தியில் அதிருப்தி, கவலை, உளரீதியான தாக்கங்கள் என்பன ஏற்படுகின்றன. எனவே குடும்பத்தில் ஒரு நல்ல அங்கத்தினராக இருந்து திருப்தியான ஒரு வாழ்க்கையை நடத்திக் கற்றலில் ஈடுபட வழிகாட்டல் இன்றியமையாததாகின்றது குறிப்பாக இசை, ஓவியம் போன்ற நுண்கலைகளில் ஆர்வம் காட்டல், விளையாட்டு, சமூக சேவை. இறைபக்தி ஆகியவற்றில் தம்மோடொத்த குழுக்களுடன் ஈடுபடல் என்பன மனதிற்கு உற்சாகம் தரும் பயனுள்ள பொழுதுபோக்குகள் ஆகும்.

இவற்றில் மாணவரை வழிப்படுத்தும் ஆசிரியர் தாமும் முன்மாதிரியாக நடத்தல் ஏற்புடைத்து ஓவியம் வரைவதை எடுத்கொண்டால் அது மனதிற்கு ஆறுதலளித்து கல்வியில் ஆர்வம் கொள்ள உதவுவதுடன் மருத்துவம், பொறியியல் போன்ற பாடநெறிகளுக்கு உதவவல்லது. வாசிப்புப் பழக்கம் மாணவரை நன்னெறிப்படுத்தும். இத்தகைய வசதி வாய்ப்புக்கள் கிடைக்காது மன அமைதி அடைய வழி தெரியாதவர்கள் போதை மருந்துகள், மது என்பனவற்றை நாடும் நிலையைக்கூட அடைவதில் வியப்பில்லை. அதனுல் தமக்கும் பிறருக்கும் விரோதியாக மாறி நலிவடைவர். பாடசாலை ஒழுங்கமைப்பு சிதைவடையவும் காரணமாவர். எனவேதான் ஆசிரியர் போதிக்கவேண்டியது பாடத்தை மட்டுமல்ல ஒழுக்கத்தையும் கூட,

ஒரு மாணவன் வாழ்க்கையில் நல்லது கெட்டது என்பனவற்றைத் தமது பெற்றோரின் வாழ்க்கையில் இருந்தே கண்டு கொள்வர். அப்படித் தெரிந்து கொண்ட ஒரு விடயம்தான் அவர்களுடைய மனதில் ஆழமாகப் பதியும். அவ்வாறு பார்க்குமிடத்து ஆசிரியர்களும் ஒரு வகையில் பெற்றோர்களே. தமக்குக் கிடைக்கும் நேரத்தை பயன்படுத்தி எதிர்காலச் சந்ததியாரை நற்பிரசைகளாக்க ஆவன செய்ய முன்வருவர்.

சுருங்கக் கூறின் குழந்தைகளிடத்தே தங்களைப் பற்றிய நல்ல மதிப்பு நல்ல பாதுகாப்பு, பொறுப்புணர்ச்சி முதலியன ஏற்பட வழி செய்தால் அம்மாணவர்களது சந்ததியார் கூட எதிர்காலத்தில் ஏமாற்றத்தை பெறமாட்டார்கள்.

★

## செய்யத் தகாதவை

★ தண்ணீரில் காறி உமிழாதே.

★ தண்ணீரில் ரத்தத்தைப் பெருக்காதே.

★ மயிர், நகம், எறும்பு இவற்றைத் தண்ணீரில் எறியாதே.

★ குடிநீரில் அழுக்குத் துணியைத் தோய்க்காதே.

அப்படிச் செய்தால் நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் நன்கொடைகளைத் துர்விநியோகப்படுத்தி அவரை அவமதிப்பதாகும்.

— யஜுர் வேதம்

★

## கண்ணன் உபதேசம்

அழுக்கற்ற துணியினுல் வடிகட்டின தண்ணீரைத் தவிர மற்றத் தண்ணீரை குடிக்காதிருக்கும்படி கண்ணபிரான் உத்தவருக்கு உபதேசித்திருக்கிறுர்.

— பாகவதம்

★

## வேண்டாத எட்டுவிதத் தண்ணீர்!

1. நமக்கு அறிமுகமில்லாதவன் காய்ச்சிய தண்ணீர்.
2. நுரைத்த தண்ணீர்.
3. அழுக்கடைந்த தடிப்பான தண்ணீர்
4. கெட்ட நாற்றமுள்ள தண்ணீர்
5. குமிழி விட்டுக் கிளம்புகிற தண்ணீர்.
6. வெந்நீர் கலந்த தண்ணீர்.
7. மண் கலந்த தண்ணீர்.
8. உப்புத் தண்ணீர்.

— யாக்ஞவல்க்யர்

# சிறு நடுத்தர அளவிலான கைத்தொழில் கடன் வசதிகள்

எம். நடராஜசுந்தரம் B.A. Hons M A (Cey.)
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்

## I. அறிமுகம்

இலங்கையில் முதன் முதலாக 1979ம் ஆண்டு அரசாங்கத்தின் அனுமதியுடன், உலக வங்கியின் அனுசரணையூடாகசர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனத்தால் (International Development Association) 12 மில்லியன் யூ. எஸ் டொலர் இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டது. இலங்கையில் தேசிய அபிவிருத்தி வங்கியூடாக (National Development Bank) இந்த நிதி, இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு சில கட்டுப்பாடுகள், வரையறைகள் மத்தியில் வழங்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் ஐந்து நிதி நிறுவனங்கள்—மக்கள் வங்கி, இலங்கைவங்கி, இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம். வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி — இத்திட்டத்தில் பங்கு பற்றின. முதலில் ஆரம்பிக்கப்பட்ட (1979) இந்திட்டத்தை எஸ், எம். ஐ. I (S. M. I. I) என அழைப்பார்கள். எஸ் எம்.ஐ. II (S. M. I. II) 1982ம் ஆண்டும் அதேபோல் எஸ். எம். ஐ. III (S.M I III), 1988ம் ஆண்டு ஏப்ரல் மாதமும் ஆரம்பிக்கப் பட்டன. இந்த மூன்று திட்டங்களையும் விரிவாக ஆராய்வதற்கு முன்னர் இத்திட்டங்களின் முக்கிய அம்சங்களை நோக்குதல் மிக அவசியமாகும்.

### அ. எஸ். எம். ஐ 1 (S. M. I. I)

முக்கிய அம்சங்கள்:

| | |
|---|---|
| ❋ உடன்படிக்கை ஏற்பட்ட திகதி | 24 யூலை 1979 |
| ❋ திட்ட ஆரம்பம் | 23 ஒக்டோபர் 1979 |
| ❋ மொத்த கடன் மட்டம் | 16 மில்லியன் யு. எஸ். டொலர். இதில் 12 மில்லியன் மறு நிதியிட்டல். 4 மில்லியன் சேவைகள், பயிற்சிகள். |
| ❋ கடனுக்கான கூடிய எல்லை | ரூபா 1·0 மில்லியன் |
| ❋ கடனைப் பெறும் திட்டங்களின் பருமன் | ரூபா 2·0 மில்லியன் (புதிய திட்டங்கள்)<br>ரூபா 1·0 மில்லியன் (விரியும் திட்டங்கள்) |
| ❋ கடனைப் பெறுபவர் நிறுவன மொத்த முதலில் வைத்திருக்க வேண்டிய பங்கு | மொத்த திட்ட செலவில் 20 % |
| ❋ கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் | ஆகக் கூடியது 10 வருடம், மேலதிகமாக 2 வருட சலுகைக் காலம். |
| ❋ கடன் பெறுவதற்கு தகுதி வாய்ந்த துறைகள் | 1. உற்பத்தி<br>2. சுரங்கம்<br>3. நிர்மாணம்<br>4. சிறு கைத்தொழில்கள்<br>5. மீன் வளர்த்தல்<br>6. கைத்தறிப் பொருட்கள்<br>7. கைத்தொழில் சேவைகள் |

- ❋ வட்டி வீதம் : வருடாந்தம் 15%
- ❋ கடன் உத்தரவாதம் : 60% ஆகக் கூடியது ரூபா 400,000/-
- ❋ முழுதாக நிறைவேற்றப்பட்ட திகதி : மார்கழி 1981

ஆ. எஸ். எம். ஐ, II (S.M.I. II)

முக்கிய அம்சங்கள்

- ❋ உடன்படிக்கை ஏற்பட்ட திகதி : 5, பெப்புறுவரி 1982
- ❋ திட்ட ஆரம்பம் : 6, மே 1982
- ❋ மொத்த கடன் மட்டம் : ரூபா 30·0 மில்லியன் யு. எஸ். டொலர். இதில் ரூபா 28·0 மில்லியன் மறுநிதியீட்டல், ரூபா 2·0 மில்லியன் தொழில்நுட்பம், சந்தை சேவைகள்.
- ❋ கடனுக்கான கூடிய எல்லை : ரூபா 2·0 மில்லியன் (1-1-82—31-5-85) ரூபா 4·0 மில்லியன் (1-6-85 தொடக்கம்)
- ❋ கடனை பெறும் திட்டங்களின்பருமன்: ரூபா 4·0 மில்லியன் நிலையான சொத்துக்கள் (1-1-82 — 31-5-85) ரூபா 8·0 மில்லியன் நிலையான சொத்துக்கள் (1-6-85 தொடக்கம்)
- ❋ கடனைப் பெறுபவர் நிறுவன மொத்த முதலில் வைத்திருக்க வேண்டிய பங்கு : மொத்தத் திட்ட செலவில் 20%
- ❋ கடனை திருப்பிச் செலுத்தும் காலம் : ஆகக் கூடியது 10வருடம், மேலதிகமாக 2வருட சலுகைக் காலம்.
- ❋ எஸ். எம். ஐ: 1ல் வழங்கிய துறைகளைவிட மேலதிகமாக கடன் வழங்கப்படும் துறைகள் : பொருட்களை வர்த்தக ரீதியில் அனுப்புதல். வர்த்தக ரீதியில் மிருகங்களை வளர்த்தல். பூ வளர்த்தல் நிற படங்களைத் தயாரித்தல். தேனீர் வளர்த்தல்
- ❋ வட்டி வீதம் : 18% (1-1-82—10-8-82) 20% (11-8-82—31-5-83) 14% (1-6-83 தொடக்கம்)
- ❋ கடன் உத்தரவாதம் : 60% ஆகக் கூடிய கடன் தொகை எல்லை ரூபா 800,000/- இது ரூபா 1·2 மில்லியனாக 17-9-85ல் அதிகரிக்கப்பட்டது.
- ❋ முழுமையாக நிறைவேற்றப்பட்ட திகதி : 1987 யூன்

இ. எஸ். எம். ஐ. 3 (S. M. I. III)

இத்திட்டத்தில். முந்திய இரு திட்டங்களுக்கும் கடன் வழங்கிய சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனத்துடன் (I.D.A.) ஆசிய அபிவிருத்தி வங்கியும் (A.D.B.) கடன் கொடுப்பதற்கு இணைந்தது. இதனால் இந்தத் திட்டத்திற்கு இரு ஸ்தாபனங்களிடமிருந்து கடன் வசதி கிடைத்தது.

முக்கிய அம்சங்கள்:

| | | |
|---|---|---|
| ❋ உடன்படிக்கை ஏற்பட்ட திகதி | : | ச. அ. ஸ். – 10 மாசி 1988<br>ஆ. அ. வ. – 11 மாசி 1988 |
| ❋ திட்ட ஆரம்பம் | : | ச. அ. ஸ். 21 – ஏப்பிரல் 1988<br>ஆ. அ. வ. – 25 மே 1988 |
| ❋ மொத்த கடன் மட்டம் | : | ச. அ. ஸ்.–15·7 மில்லியன் SDR (எஸ்.டி.ஆர்.)<br>ஆ. அ. வ.– 11·6 மில்லியன் SDR(எஸ்.டி.ஆர்.)<br>(மொத்தம் 35·0 மில்லியன் யூ. எஸ். டொலர்)<br>இதில் 23·0 மில்லியன் எஸ்.டி.ஆர். மறுநிதியீட்டம், 4·3 மில்லியன் எஸ்.டி.ஆர். தொழில் நுட்ப உதவி . |
| ❋ கடனுக்கான கூடிய எல்லை | : | ரூபா 4·0 மில்லியன் |
| ❋ கடனைப் பெறும் திட்டங்களின் பருமன் | : | ரூபா 8·0 மில்லியன் (நிலையான சொத்துக்கள் |
| ❋ கடனைப் பெறுபவர் நிறுவன மொத்த முதலில் வைத்திருக்க வேண்டிய பங்கு | : | மொத்தத் திட்ட செலவில் 25% |
| ❋ கடனை திருப்பி செலுத்தும் காலம் | : | 10 வருடங்கள் |
| ❋ கடன் உத்தரவாதம் | : | ரூபா 2 மில்லியனிலும் குறைவு – 80%<br>ரூபா 2 – 3 மில்லியன் – 60%<br>ரூபா 3 – 4 மில்லியன் - 40% |
| ❋ வட்டி வீதம் | : | 16% — 16·5% |
| ❋ 31–12–89ல் வழங்கப்பட்ட கடன் அளவு | : | ரூபா 581·6 மில்லியன் |

குறிப்பு:- 1, எஸ், எம். ஐ. — சிறு நடுத்தர கைத்தொழில்கள்
2. ச. அ. ஸ். — சர்வதேச அபிவிருத்தி ஸ்தாபனம்
3. ஆ. அ. வ. — ஆசிய அபிவிருத்தி வங்கி

## II பங்கு பற்றும் நிதி நிறுவனங்கள்

1, கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தேசிய அபிவிருத்தி வங்கியாகும். உலக வங்கியால் முதலில் பணம் தேசிய அபிவிருத்தி வங்கியிடம் கொடுக்கப்படுகின்றது. இந்த வங்கியினூடாக இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. முதலில் நிதி நிறுவனங்கள் தங்கள் மூலவளங்களில் இருந்து கடனைக் கொடுக்க வேண்டும். கொடுத்ததன் பின்பு தேசிய அபிவிருத்தி வங்கிக்கு அறிவிக்க வேண்டும். கொடுத்த கடனின் 75% வங்கி அந்த நிதி நிறுவனத்திற்கு வழங்கும். மீதி 25% கொடுக்கும் நிதி நிறுவனம் தனது மூலவளத்தைப் பயன்படுத்த வேண்டும். இதனை விட இந்த வங்கி பிராந்திய பயிற்சி வகுப்புக்களை நாடு பூராவும் நடத்தி, இத்திட்டங்களுக்கு எவ்வாறு கடன் கொடுக்க வேண்டும், எந்த அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்பனவற்றை, சகல நிதி நிறுவனங்களுக்கும் தொடர்ச்சியாக அறிவுறுத்திக் கொள்ளும். முக்கிய அம்சம் இந்த வங்கி நேரடியாக இந்தக் கடன்களை மக்களுக்குக் கொடுப்பதில்லை. ஏனைய வர்த்தக வங்கிகளின் ஊடாகவே கடன் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

2. இலங்கை மத்திய வங்கி இக்கடன் திட்டத்தில் ஒரு கடன் உத்தரவாதக்காரனாக இயங்கி வருகின்றது. வர்த்தக வங்கிகள் கடன் கொடுக்கத் தயங்குவதால், இத்தகைய அச்சத்தைப் போக்கி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு கடன்

வழங்க உதவி அளிப்பதே மத்திய வங்கியின் கடன் உத்தரவாதத் திட்டமாகும். சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் கடன் கேட்டு விண்ணப்பிக்கும் பொழுது, அவர்களின் கடன் அல்லது மூலதனத் தேவைகள் பற்றி அனுகூலமான போக்கைக் கடன் நிறுவனங்கள் கடைப்பிடிக்க ஊக்கமளிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் விண்ணப்பங்களைத் துரிதமாக ஏற்று கவனிப்பதற்கும், உரிய வேளையில் கடனைக் கொடுப்பதற்கும் அருகதையுள்ள சந்தர்ப்பங்களில் சலுகைகளை வழங்குவதற்கும் அறிவுறுத்தப்படுகின்றன. ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆகக் கூடியதாக 1·6 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்ற வரையறைக்கு அமைவாக பணச் சட்டதின் 108 அ என்ற பிரிவின்படி வழங்கப்படும் கடன் உத்தரவாதம் உப கடனின் தொகையைப் பொறுத்துப் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது.

| உப கடன் தொகை ரூபா | உத்தரவாத அளவு |
|---|---|
| 1 — 2,000,000 | 80% |
| 2,000,001 — 3,000,000 | 60% |
| 3,000,001 — 4,000,000 | 40% |

மேற்படி விபரத்தை நோக்கும் பொழுது பகுதியளவுக்கே உத்தரவாதம் இருக்கின்றது என்ற எண்ணம் தோன்றும். கடன் கொடுக்கும் நிறுவனங்கள் கண்மூடித்தனமாகக் கடன் கொடுக்காமல் இருப்பதற்காகவே பகுதியளவு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. பெரும் அளவு பழுவை கடன் நிறுவனங்கள் தாங்க வேண்டி இருப்பதால் அவை கடன் கொடுப்பதில் சில விதிமுறைகளை அவதானிக்க வேண்டியுள்ளது. மேற்கொள்ளப்படும் திட்டத்தின் இலாபகரத் தன்மையையும் கடனைத் திருப்பிச் செலுத்த உள்ள வல்லமையையும் பிரதானமாகக் கருத்தில் கொண்டு கடன் வழங்கும் நிறுவனங்கள் தாம் கடன் கொடுப்பது பற்றிய முடிவை ஊக்குவிப்பதே கடன் உத்தரவாதத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் எனலாம்.

3. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கடன் வழங்கும் வங்கிகள் வர்த்தக வங்கிகளாகும், எஸ்.எம்.ஐ. I & II லும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட ஹட்டன் தேசிய வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகள், இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் கடன் வழங்குதலில் ஈடுபட்டிருந்தன. மேலதிகமாக எஸ். எம். ஐ. III நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுது மேற்கூறப்பட்ட வர்த்தக வங்கிகளுடன் மேலதிகமாக சம்பத் வங்கியும் இக்கடன் வழங்கு சேவையில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றைவிட, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, புடவைக் கைத்தொழில் அமைச்சு, இத்திட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகளை வழங்கி வருகின்றன.

## III சிறு நடுத்தர கைத்தொழில் மூலம் கிடைக்கும் வசதிகள்

தகைமை:. இப்போதுள்ள அல்லது உத்தேச நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 8·0 மில்லியனுக்கும் மேற்படாது, சிறிய அல்லது நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கடன்பெற முடியும். ஆகக் கூடிய கடன் தொகை ரூபா 4·0 மில்லியன். நோக்கம் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது தொழிற்படு மூலதனமாக.

தகுதிவாய்ந்த துறைகள்:- உற்பத்தி, சுரங்க வேலை, கட்டிட நிர்மாண ஒப்பந்தம், விவசாய கைத்தொழில்கள், மீன் பதனிடல், கைத்தொழிற் சேவைகள், பூந்தோட்டக் கலை, பண்டங்களின் வர்த்தகப் போக்குவரத்து, விலங்கு வேளாண்மை, தேசிய அபிவிருத்தி வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் துறை செயற்பாடு.

உதவியின் நியதிகள்:

— மீளச் செலுத்தும் காலம்: 10 வருடங்கள்
— தாட்சண்ய காலப் பகுதி 6 – 24 மாதங்கள்
— ஒப்பீட்டு அளவில் குறைந்த வட்டி வீதம்.
— பிணைப் பொறுப்பு தேவைப்பட்டால் ஓரளவு தளர்வு.

நோக்கம்: சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள், தமது தொழில் நுட்ப சீர்திருத்தம், வீண் விரயத் தடுப்பு, ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பனவற்றிற்கு ஏற்படும் செலவுகளுக்காக அறவிடப்படமுடியா கொடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். கொடையின் அளவு செயற்பாட்டை பொறுப்பேற்பதற்கான செலவின் 50% அல்லது 5000 அமெரிக்க டொலர். இதில் எது குறைவானதோ அது.

தகுதியுடைய சில செயற்பாடுகள்:

— மேற்பார்வையாளர் பயிற்சி
— வடிவ மற்றும் உற்பத்திச் சீர்திருத்தம்
— ஏனைய தொழில்களுக்கு சென்று பார்வையிடல்
— உற்பத்திப் பொருட் பரிசோதனை
— பரீட்சார்த்த கப்பலேற்றலும் பரிசோதனை சந்தைப்படுத்தலும்.
— சக்தி பேணல்.

## IV நிதி நிறுவனங்களின் பங்களிப்பு

எஸ். எம். ஐ. I ன் மூலம் மொத்தமாக 1741 உப திட்டங்களுக்கு ரூபா 229·5 மில்லியன் கடனுக வழங்கப்பட்டது. இதனுல் 17,526 பேருக்கு வேலைவசதிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று எஸ். எம். ஐ. IIன் மூலம் 1328 உப திட்டங்களுக்கு கடன் வழங்கப்பட்டு சுமார் ரூபா 1098·2 மில்லியன் கடனுக வழங்கப்பட்டது. இதனுல் 25,060 பேருக்கு வேலை வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டன. தற்பொழுது நடைமுறையில் இருக்கும் திட்டத்தில் எஸ்.எம். ஐ. III, (31-12-89 வரை) 1137 உப திட்டங்களுக்கு ரூபா 581·6 மில்லியன் கடனுக வழங்கப்பட்டுள்ளது. இதனுல் இதுவரை 12,573 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது. ஒவ்வொரு நிதி ஸ்தாபனங்களின் பங்களிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | எஸ்.எம்.ஐ. I | | எஸ்.எம்.ஐ. II | | எஸ்.எம்.ஐ. III | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | தொகை மில்லியன் | எண் | தொகை மில்லியன் | எண் | தொகை மில்லியன் |
| இலங்கை வங்கி | 658 | 86·1 | 1320 | 471·1 | 459 | 212·7 |
| மக்கள் வங்கி | 896 | 91·4 | 731 | 265·0 | 345 | 126·7 |
| வர்த்தக வங்கி | 115 | 29·5 | 90 | 49·5 | 33 | 23·9 |
| ஹட்டன் தேசிய வங்கி | 65 | 21·7 | 76 | 38·2 | 85 | 31·8 |
| அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் | 07 | 0 8 | 299 | 274·5 | 132 | 141·7 |
| சம்பத் வங்கி | — | — | — | — | 83 | 44·8 |
| | 1741 | 229·5 | 2516 | 1098·3 | 1137 | 581·6 |

# "இடிப்பஸ் கோட்டம்"

செல்வி ஆ. லலிதா
ஆண்டு 12 கணிதப் பிரிவு

குழந்தைப் பருவம் ஒருவனது வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. ஒருவனது ஆளுமை (Personality) சிறந்த முறையில் வளர்ச்சியடைய குழந்தைப் பருவம் அடிப்படையாக அமைகிறது. ஒரு கட்டிடத்திற்கு சிறந்ததும் வன்மையானதுமான அஸ்திவாரம் எவ்வளவு இன்றியமையாததோ அதே போல குழந்தைப் பருவமும் ஒருவனது வாழ்க்கையில் முக்கியமாகிறது, "இன்றைய குழந்தைகள் நாட்டின் எதிர்காலக் குடிமக்கள் அல்லரோ?" சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட குழந்தைகள் பிற்காலத்தில் உயர்ந்த குடிமக்கள் ஆகின்றார்கள். குழந்தைப் பருவத்தில் ஒருவனது உள்ளம் எப்படி இயங்குகிறது? என்பதைப் பற்றியும், அது எப்படி வளர்ச்சியடைகிறது என்பதைப் பற்றியும் பல உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிஞர்களில் ஒருவர் சிக்மண்ட் ஃபிராய்ட் (Sigmund Freud) என்பவர்.

குழந்தையின் மூன்று–நான்கு ஆண்டுகள் மிகவும் முக்கியம் என்று Freud கருதினார். அப்போது அதற்கு ஏற்படும் நிகழ்ச்சிகளும், அனுபவங்களும் அவனது ஆளுமையை நிர்மாணிக்கிறது என்ற உண்மையை அவர் கண்டார்.

குழந்தை உள்ளத்தில் மூன்று நான்கு வயதுகளில் ஒருவித சிக்கல் ஏற்படுகிறது, அந்தச் சிக்கலுக்கு இடிப்பஸ் (Oedipus) என்று பண்டைய கிரேக்கநாட்டு வீரனின் பெயரை அளித்தார்.

அவ் வீரனின் கதை என்னவெனில், இடிப்பஸ் என்பான் பண்டைய கிரேக்க நாட்டில் ஓர் அரச குடும்பத்தில் பிறந்தவன். அவன் பிறந்தவுடன் அந்த நாட்டுக் குறி (Oracle) அவன் பிற்காலத்தில் தன் தந்தையைக் கொன்று தாயை மணந்து அந்நாட்டிற்கு அரசனாவான் என்று கூறியது. இதனைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டுக் குழந்தையைக் காட்டுக்குத் தூக்கிச் சென்று கொன்றுவிடும்படி தனது ஆட்களுக்கு கட்டளையிட்டான். பச்சிளங் குழந்தையைக் கொல்ல மனமின்றி ஆட்கள் அதனை நெடுந்தூரம் தூக்கிச் சென்று, பக்கத்து நாட்டிலே ஒரு காட்டில் விட்டுவிட்டு வந்து அரசனிடம் அதைக் கொன்றுவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள். அவ்வழியே ஆடுகளை ஓட்டிச் சென்ற இடையன் குழந்தை அழும் ஓசையைக் கேட்டு ஓடோடி வந்து அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று தனது மகனை வளர்த்து வந்தான். நாளடைவில் இக் குழந்தை இளைஞனை வளர்ந்தான். தான் அரசன் மகன் என்று அவனுக்குத் தெரியாது. மற்றவர்களுக்கும் தெரியாது. அக் காலத்து இளைஞர்களுக்குரிய ஆற்றல்களில் திறம் பெற்றான், அச்சமயம் அந்நாட்டு மன்னன், பக்கத்து நாட்டு மன்னனோடு போர் தொடுத்தான். இடிப்பஸ் சேனையில் சேர்ந்து திறம்படப் போரிட்டு சேனைக்குத் தலைவனானான். முடிவில், அவன் அந்நாட்டு மன்னனோடு தனித்துப் போரிட நேர்ந்தது. போரிடும் அரசன் தன் தந்தை என்று அறியாது அவனைக் கொன்று வெற்றி வீரனை அரண்மனையில் நுழைந்தான். அங்கு அரசியைக் கண்டான். அவள் தன்னுடைய தாய் என்று அறியாமல் அவளது அழகில் மயங்கி அவளை மணந்து அந்நாட்டுக்கு அரசனானான். பிறகு இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையும் ஆனான். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவனுக்கு உண்மை தெரிந்தது. தான் கொன்றது தந்தை என்றும் மணந்துகொண்டவள் தன் தாய் என்றும் தெரிந்தது. மிகவும் துயரடைந்தான். குற்ற உணர்ச்சியினால் (guilt feeling) அவனுக்கு வேதனை மிகுந்தது. தன்னுடைய கண்கள் இரண்டையும் குருடாக்கிக்கொண்டு, நாட்டைத் துறந்து காட்டில் வாழ்ந்து பிறகு மடிந்தான். இது கதை. இதுபோன்ற உள்ளநிலை ஒவ்வொருவனுக்கும் குழந்தைப் பருவத்தில் அவனையும் அறியாது ஏற்படுகிறது என்பது Freud இன் கருத்து.

பிறக்கும் முன்னேயும், பிறந்த பிறகும் குழந்தை தாயின் அணைப்பிலும் ஆதரவிலும் வளர்கிறது. தாயிடத்து அன்பு பெரிதும் ஏற்படுகிறது. தாயைத் தன்னிடத்தே வைத்துக்கொள்ளவேண்டும் என்ற இச்சை அதிகம் ஏற்படுகிறது. தாயே குழந்தையின் உள்ளத்தில் முதன் முதல் இடம்பெறுகிறாள். இந்த நெருங்கிய தொடர்பின் காரணமாக தாயின் ஆளுமை குழந்தையின் உள்ளவளர்ச்சியில் மிகவும் பங்கெடுத்துக்கொள்கிறது. தாயே குழந்தைக்கு உலகமாக அமைகிறாள்.

தந்தை குழந்தையின் உள்ளத்தில் சிறிது காலத்திற்குப் பிறகே இடம்பெறுகிறான். குழந்தை வளர வளரத் தந்தையின் ஆளுமையும் அதன் உள்ள வளர்ச்சியில் மிகவும் பங்கெடுத்துக்கொள்கிறது. ஆனால் குழந்தை தாயிடம் காட்டும் உள்ளப் போக்கு, தந்தையிடம் காட்டும் உள்ளப்போக்கினைவிட வேறாக அமைகிறது. தாயிடத்தில் அன்பும், அவளோடு இருத்தல் மகிழ்ச்சியும், இன்பமும் அவளோடு எப்போதும் இருக்க ஓர் இச்சையும் ஏற்பட, தந்தையிடத்தில் ஒருவித அச்சமும் மரியாதையும், பொறாமையும், சினமும் ஏற்படுகின்றன. இவைகளோடு கூட அவன் மீது அன்பும் ஏற்படுகிறது. இந்தப் பல்வேறுபட்ட மெய்புணர்வுகள் எல்லாம் ஒன்று கலந்து ஒரே மெய்யுணர்வாக அமைகிறது. இந்த உள்ளப் போக்கை ஆங்கிலத்தில் (ambivalence) என்று குறிக்கிறார்கள்.

தந்தையிடத்தில் இவ்வித உள்ளப் போக்கு ஏற்படுவதற்கு காரணங்கள் பல. பொதுவாக, எல்லாக் குடும்பங்களிலும் தந்தையே தலைவனாக இருக்கின்றான். அவனிடம் அன்புகொள்ளும் தாய், அடிபணிந்து நடப்பதையும், அவனுடைய ஏவல்களுக்கு காத்திருப்பதையும் குழந்தை காண்கிறது. பல முறைகளில் தனக்குப் பாலூட்டி, தன்னிடம் கொஞ்சிவிளையாடும் தாய், தந்தையின் குரல்கேட்டு, குழந்தையை அப்படியே விட்டுவிட்டு அதனின் இன்பத்தைக் குலைத்து தந்தையிடம் ஓடுவதைக் காண்கிறது. தனது இன்ப வாழ்க்கைக்குத் தடையாக அமைகின்ற தந்தையின்மீது அதற்குக் கோபம் ஏற்படுகின்றது. தனக்குரிய தாய்க்குப் போட்டியாக தந்தை அமைகின்றான் என்ற காரணத்தினால் அவன்மேல் பொறாமையும், வெறுப்பும் ஏற்படுகின்றன. அவன் உடல் அமைப்பில் உயர்ந்தோன் என்ற காரணத்தினால் அவனிடம் அச்சம் ஏற்படுகின்றது. அவன் சில சமயங்களில் குழந்தைக்கு மகிழ்ச்சிதரும் பொருட்களை வாங்கி அளித்து இன்பத்தை அளிப்பதினால், அவன் மேல் அன்பும் ஏற்படுகிறது. குழந்தை வளர வளரக் குடும்பத்தில் மற்றவர்களும் தந்தையிடம் மரியாதை காண்பிப்பதைக் காண்கிறது.

தாயைத் தன்னிடத்தே வைத்துக் கொள்ளவேண்டும்என்ற இச்சையும், அதற்கு இடையூறாக அமையும் தந்தைபேரில் வெறுப்பும் குழந்தையிடம் உண்டாகின்றன. இந்த நிலை அதனிடம் அறியாது ஏற்படுகிறது. இந்த நிலை மூன்று, நான்கு ஆண்டுகளில் உச்சநிலை அடைகிறது. இந்தச் சமயத்தில் குழந்தை உள்ளத்தில் தந்தை ஒழிய மாட்டானா? என்ற எண்ணம் அடிக்கடி தோன்றுவது இயற்கை. இந்த உள்ள நிலைக்குத்தான் இடிப்பஸ் கோட்டம் என்று ஃபிரெய்ட் பெயரிட்டார். இடிப்பஸ் கோட்டத்தில் இருந்து குழந்தை உள்ளம் சமநிலை அடைய வேண்டியது அவசியம். இதற்கு பெற்றோர்கள் குழந்தையிடம் பழகும் முறையும், அதை நடத்தும் முறையும் மிகவும் முக்கியம்.

இடிப்பஸ் உள்ள நிலையில் இருந்து தகுந்த முறையில் வளர்ச்சியடையாத ஒருவன் பிற்காலத்தில் பெரியோர்களின் முன்னிலையில் தாழ்மை உணர்ச்சியடைவது, கைகால் நடுக்கம் ஏற்படுவது, அலுவலகங்களிலும் உற்பத்திச் சாலைகளிலும் அதிகாரத்தில் இருப்பவர்கள் முன்னிலையில் போகவோ அவர்களுடன் பழகவோ அஞ்சுவது, தம்மை விட உடல் அமைப்பிலோ, பொருளிலோ அல்லது பதவியிலோ உயர்ந்து இருப்பவர்கள் மேலே தங்களையும் அறியாது பொறாமையும் வெறுப்பும் கொள்வது போன்ற இயல்புகளை உடையவனாகின்றான். அதிகாரத்திற்கும், சட்டதிட்டத்திற்கும் கட்டுப்படாது வாழ்பவரும் இந்தவகையினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பெற்றோர்கள் முக்கியமாகத் தந்தை குழந்தையின் உள்ளம் இடிப்பஸ் நிலையில்

இருக்கும்போது பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும். எல்லாத் தந்தைகளுக்கும் தம் மக்கள்மீது மிகுந்த அன்பு உண்டு. ஆனால் அதை வெளிப்படுத்துவதில்லை. தங்களுக்கு அன்பே இல்லாததுபோல நடந்துகொள் வார்கள். தந்தை தனயனுக்கு அன்பைக் காட்டினால் அவன் 'கெட்டு' விடுவான் என்று கருதுவார். அதற்கு மாறாக குழந்தை தவறு செய்தால் தண்டிப்பதற்குச் சித்தமாக இருப் பார். குழந்தை தந்தையிடம் பெறுவது பெரும்பாலும் கட்டளைகளும், உத்தரவு களும், தண்டனைகளும் ஆகும். இந்தச் சூழ் நிலையில் வாழும் குழந்தை தந்தையைப் பற்றியும், தந்தை நிலையில் இருக்கும் பள்ளி ஆசிரியர்கள், அலுவலகத் தலைவர்கள் ஆகி யோரைப் பற்றியும் எவ்வாறான எண்ணம் கொள்ளுவார்கள் என்பதையும், எம்முறை யில் இவர்களுடன் பழகுவார்கள் என்பதை யும் உய்த்து உணரலாம், அத்துடன் தான் தந்தை நிலையில் இருக்கும்போது தன்னை யும் அறியாமல் தனது தந்தையின் நடத் தையை மேற்கொள்ளுகிறான்.

மேற் கூறியவை பெரும்பாலும் ஆணின் உள்ள வளர்ச்சியினைக் குறிக்கும். ஆணில் ஏற்படும் இடிப்பஸ் கோட்டம் பெண்களி லும் ஏற்படுவதுண்டு. பெண்களில் ஏற்படும் இந்தநிலைக்கு Electra Complex என்று பெயர் பெண்களின் உள்ள வளர்ச்சி ஆண்களைவிட மிகவும் சிக்கலானது. எனினும் அடிப்படை ஒன்றே தான்.

## பனை தந்த பேட்டி

வாழ்வுக்குப் பயன்பலவே
வாங்கித் தந்த எம்பனையே
வீடொன்று உருவாக
நீ செய்த உதவியென்ன?

வளையானேன் கூரைக்குக்
கைமரமானேன் வீட்டிலே அழகாகச்
'சீற்'றடிக்கச் சீரான மரமானேன்
வீடுகட்டச் சாய்மரமும் நான்தானே,

உணவாக நீ செய்த
உதவிகளை உவந்தளிப்பாய்.

உண்பதற்குப் பனம் பழமாய்ப்
பனுட்டாய்ப் பனங்கிழங்காய்ப்
பருகுதற்குப் பதநீராய்க் கள்ளாய்
பலபேரின் தாகந்தனைத்
தணித்தவனும் நான்தானே.

அலங்காரப் பொருளாய் நீ
ஆற்றிவிட்ட பணியென்ன?

பல்வேறு வண்ணங்களில்
மலர் வடிவில் உருவானேன்
தலையில் அணி தொப்பியாய்
விலை குறைந்த சேவையையும்
நான் தானே வழங்குகின்றேன்.

கஷ்டப்படும் மக்களுக்குக்
கைகொடுத்தது எப்படியோ?

பெட்டியாய்க் கடகமாய்ப்
பாயாய் பறியாகி
இன்னும் பல்வேறாகி
கைத்தொழிலால் காசுபெறக்
காரணமாய் நானிருந்தேன்
முக்காலக் குறிப்பெழுத
மூலவோலை நான் ஆனேன்
இன்னும் கேள்—

'ஷெல்' அடியால் 'பொம்பர்' குண்டால்
சிறப்பாக உயிர் காக்கச்
செப்பனிட்ட குழிகளிலே
மூடுபாவாயும் 'ஆமி'யின் சென்றிக்கும்
அரணாக அமைந்து நின்றேன்
எத்தனையோ கூறவுண்டு
அத்தனைக்கும் நேரமில்லை.

அன்பான பெண்பனையே
உன்பெருமை உலகறிய
பண்பாக நீயளித்த
பேட்டிக்குப் பலநன்றி.

க. மலர்விழி
ஆண்டு 10

# இலண்டனிலிருந்து ஒரு இதயம்

சி. செல்வச்சந்திரன் B. A. (Cey.)

எமது நாட்டு அரசியல் நிலைமைகள் கடந்த ஒரு தசாப்தத்தில் மிகவும் கவலைக் குரியதாய்க் காணப்பட்டது. பாரதூரமான பாதிப்புக்கள் பரவிப் படர்ந்த சோக காலம். சொந்த மண்ணில் நொந்தபடி வாழ வேண்டிய நெருக்கடி. தாய் நாட்டின் வசந்தங்கள் வந்தவர்களால் வாரிச் சுருட்டிக் கொண்டு செல்லப்பட்டது. புழுதி எழுந்து புகை மூடிய பூமியாக எமது மண். அழுது வடித்து ஆறேடிய நிலையில் எமது கண்கள். இந்தத் துன்பியற் பூமியில் தொடர்ந்திருக்க முடியாமல், தூரத்து ஐரோப்பிய நாடுகளுக்கு துரத்தப்பட்டவர்கள் நாங்கள்.

புவியியல் படிக்கும்போது பூமிப்படத்தில் பொட்டிட்டுக் காட்டிய புலங்களில் இப்போது நாங்கள். பள்ளியில் கற்றபோது எண்ணி மகிழ்ந்த கற்பனைகள் இன்று நிதர்சனங்களாக.

கொலம்பஸ் கூட இப்படி சிக்கலான பயணத்தை மேற்கொண்டிருக்கமாட்டார். எத்தனை விமானங்கள்; எத்தனை மார்க்கங்கள்; எத்தனை தாமதங்கள். இன்று இலண்டனில் இந்த இதயம். நாடு கண்டுபிடிக்கப் பட்டுவிட்டது,

நேற்றைய கற்பனைகள் இங்கு வந்தபின் மாயை வடிவங்களாக நிதர்சனப்படுகின்றன. சொந்த மண்ணில் இருந்து வந்தவர்கள் ஏராளம் பேர் இங்கு வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இலட்சங்களுக்காக வந்தவர்களாகக் காணப்படுகின்றனர். கல்வியென்ற இலட்சியத்துக்காக வந்தவர் மிகச் சிலர். எந்தச் சந்தர்ப்பத்திலும் மழைக்குக்கூட பாடசாலையில் ஒதுங்காதவர்கள் நிறையப்பேர் மிகவும் மகிழ்ச்சியுடன் இங்கு வாழ்கின்றனர். அழுகைக்கும், சிரிப்புக்கும் மொழிப் பிரச்சனையின்றி இதமான வாழ்க்கை அவர்களுக்கு. மொழி தெரியாதவிடத்து ஒரு வசதி உண்டு. வேலை கொள்வோர் திட்டுவது விளங்காது.

இங்குள்ள தொழில் முறைகள் எல்லாம் பெரும்பாலும் அந்நாட்டுப் பிரஜைகள் செய்ய விரும்பாத தொழில்களே, எமது இலங்கை இளைஞர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மறைமுகமாக கூறின் ஐரோப்பிய நாடுகள் அரசியல் தஞ்சம் கொடுப்பதன் இன்னெரு வடிவம் குறைந்த கூலியில் தொழிலாளர்களை இறக்குமதி செய்வது என்பதே அதன் நிதர்சனமான கருத்தாகும். ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலான வேலைகள் தொழிற்சாலைகளும், சிறப்புச் சந்தைகளும் (Supermarket) பெற்ருேல் நிலையங்களும்தான் எமது இளைஞர்கள் பெறக் கூடியதாய் உள்ளது. தகுதியுள்ள இளைஞர்களுக்குக் கூட நிறத்தை அடிப்படையாகக் கொண்டு இனஒதுக்கல் முறை நேர்முகப் பரீட்சையில் கடைப்பிடிக்கப் படுகிறது, இலங்கையில் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒதுக்கல் முறை நிலவுவதுபோல இங்கு நிறத்தை அடிப்படையாகக் கொண்ட ஒதுக்கல்முறை காணப்படுகிறது. அப்பொழுதுதான் உண்மையில் எமக்கென்று ஒரு நாடு அவசியம் என்று இங்குள்ள இளைஞர்கள் உணருகிறுர்கள். ஆனல் அதற்குரிய அடித்தளங்களும் இன்னும் ஒரு கோட்டில் இணையாதிருப்பது அல்லது இணைய மறுப்பது துரதிர்ஷ்டம்தான்.

பெரும்பாலான இளைஞர்கள் ஏதாவது படிக்கவேண்டும் என்று விரும்புகிறுர்கள். ஆனல் எவருக்கும் தொழில் ரீதியான கல்வியில் நாட்டம் இருப்பதாய்த் தெரியவில்லை. தொழில் ரீதியான கல்வி இவர்கள் தாய் நாட்டுககுத் திருப்பி அனுப்பப்பட்டாலும் ஏதாவது ஒரு தொழிலை தொடங்க உண்மையில் கைகொடுக்கும். பெரும்பாலான இளைஞர்களுக்கு இங்குள்ள காலநிலை ஒத்துவரவில்லை. பலர் விரக்தியுடன்தான் வேலை செய்கிறுர்கள். அதிகூடிய வேலைப் பழுவும் நீண்டநேர வேலைகளும் ஒருவித சலிப்பை இவர்களுக்கு ஏற்படுத்துகின்றது. இங்கு வேலை செய்வதற்கு மொழிப் பிரச்சனை அவ்வளவாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்களது மேலதிகாரிகள்

(வெள்ளை நிறத்தவர்)இவர்கள் என்னசெய்ய நினைக்கிறார்கள் என்பதை ஓரளவுக்கு புரிந்து கொள்கிறார்கள். வெளிநாட்டுக்கு வந்து ஆங்கிலம் பேசப் பழகலாம் என்று யாரும் கூறுவார்களாயின் நான் அதனை ஏற்கமாட்டேன். வேலை செய்யும் இடங்களைப் பொறுத்தும் எமது முயற்சியைப் பொறுத்தும்தான் நாம் அதில் தேர்ச்சியடைய முடியும். நான் ஒன்று மட்டும் சொல்வேன் இலங்கையில் க. பொ. த. (உ. த) வரையாவது ஒரு இளைஞன் படித்து சித்தியடைந்த பின்னர்தான் வெளிநாடு போவது பற்றி எண்ணவேண்டும் இலங்கையில்தான் உண்மையில் குறைந்த விலையில் நிறைந்த கல்வி கிடைக்கும். இங்கு எம் இனத்தவர்கள் இன்னும் பெருமளவு தமது கலாச்சாரத்திலிருந்து நழுவிச் செல்லவில்லை. சிலர் மட்டும் பிரித்தானிய பிரஜைகள்போல் நடந்துகொள்கிறார்கள். அது அடிப்படையில் அவர்களது பிரச்சனையே.

பெரும்பாலானவர்களுக்கு தாய்நாட்டுக்கு திரும்பவேண்டும் என்ற எண்ணம் தான் மேலோங்கி நிற்கிறது. அரசியல் நிலைமைகளை அவதானித்துக்கொண்டு இருக்கிறார்கள். இலங்கை திரும்பினாலும் தமது பணத்தை எங்கே மூலதனமிடுவது என்ற பிரச்சினை ஒன்று இருக்கிறது. இலங்கையில் அதற்குரிய, அடித்தளங்கள் இன்னும் இடப்படாத நிலை காணப்படுகிறது. பலர் என்ன வேலை இருந்தாலும் ஆலய தரிசனத்தை தவறவிடுவதில்லை, மதப் பற்று கூடுதலாக இங்கு இருப்பதை காணக்கூடியதாய் உள்ளது. சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கையெழுத்துப் பத்திரிகை நடாத்தி எமது கலாச்சாரத்தையும் மொழியையும் பாதுகாக்கிறார்கள். டென்மார்க் இளைஞர்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அங்கு அரசாங்கம் அதற்குரிய நிதிவசதியினை அளிக்கிறது. இலண்டனில் இன்னும் அவை சம்பந்தமான பணிகள் தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பெரும்பாலான இளைஞர்களின் பொழுதுபோக்குகள் தொலைக்காட்சியுடனும், தமிழ் சஞ்சிகைகளுடனும்தான் போகிறது. இந்தியாவிலிருந்து தமிழ் சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன இந்திய தமிழ்ப் படங்களுக்கும் இங்கு பஞ்சமில்லை.

சுகாதார வசதிகள், ஒழுங்கான நிர்வாக முறை, திட்டமிட்ட வாழ்க்கை போன்ற சில சிறப்பான அம்சங்களுக்காக இந்த ஐரோப்பிய நாடுகளைப் பாராட்டினாலும் அடிப்படையில் எமது நாட்டில் இந்த இளம் வயதினை அனுபவிக்க முடியவில்லையே என்ற எண்ணம்தான் அடிக்கடி என் மனதில் எழுகிறது. மொத்தத்தில் என்னைப் போன்ற இளைஞர்களின் இதயம் இன்னும் இலங்கை மண்ணில் மிக இறுக்கமாய் இருக்கிறது.

நாம் இலங்கை திரும்பி அங்கு வாழும் ஒரு நாளைத்தான் எதிர்பார்க்கிறோம். நிறைவேறுமா?

★

## முரண்பா(ட்)டு

அங்கே—
அன்னியத்து மண்ணில்
அண்ணன்—
கூட்டல்
தொடங்கும் போது
இங்கே—
தங்கை—
கூட்டல்
நிறுத்துகின்றாள்

★ ★

கிரேக்கத்துக் கப்பலில்
வண்ணம் தீட்டும்
அவன் கையில்—
தூரிகை.
இங்கே—
விரல் நகங்களில்
வண்ணம் தீட்டுகிறாள்
காரிகை.

(சுசி-தமிழினி)

# மறக்கமுடியாத சம்பவம்


செல்வி தி. நர்மினி
ஆண்டு 5 B

1987ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி. அந்த நாளை இன்று நினைத்தாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. அன்று அதிகாலையில் அம்மா தமது வேலைகளை முடித்து விட்டு எங்களை எழுப்பி பல் துலக்கச் செய்து குளிப்பாட்டுகிறார். தானும் அவசர அவசரமாகக் குளித்துவிட்டுச் சேலையைக் கட்டுகிறார். எங்களுக்கும் உடுப்புப் போட்டு சாப்பாடு தருகிறார். எங்களது மதிய உணவுப் பொட்டலங்களையும் எடுத்துக்கொண்டு, என்னையும் தங்கையையும் விரைவாகக் கூட்டிக்கொண்டு பாடசாலைக்கு நடந்து செல்கிறார். நாங்களும் அம்மாவைத் தொடர்கிறோம்.

சிறிது தூரம் சென்றோம். சனங்கள் ஓடிவருகிறார்கள். அம்மா, ''ஏன் ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டார். சிலர் ஒன்றும் பேசாது ஓடுகிறார்கள். வயது வந்த பாட்டி ஒருவர் ஓட முடியாததாலும், தனது உயிரைக் காப்பாற்றவேண்டும் என்ற ஆசையாலும் பொல்லை ஊன்றி சிறிது வேகமாக நடந்து வந்தார், ''ஐயோ பிள்ளை ஆமிக்காரங்கள் வாறாங்கள், உங்கை போகாதையுங்கோ'' என்றார்.

உடனே அம்மா எங்களையும் இழுத்துக்கொண்டு வீட்டுக்கு ஓடினர். ஓடும்போது ''அம்மா, அம்மா ஆமிக்காரர் வாறாங்களாம், சனங்கள் ஓடுதுகள்'' என்றார். இதற்கிடையில் எமது அயலில் ஒரே அமளி துமளி. சனங்கள் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு ஓடுகிறார்கள். வெடிச்சத்தங்கள் கேட்கின்றன. ''பிள்ளை, வீட்டிலுள்ள சாமான்களை என்னடி செய்கிறது? ஒன்றும் எடுக்கமுடியாது இருக்கிறதே'' என்று அம்மம்மா அம்மாவைக் கேட்கிறார், அப்போது தாத்தா, ''இஞ்சாரும் நான் வீட்டிலை இருக்கிறன். நீ பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஓடு'' என்கிறார். உங்களை ஆமி சுடாதே? நீங்களும் வாருங்கோ'' என்று அம்மம்மா தாத்தாவைக் கூப்பிடுகிறார்,

''நீ பயப்படாதே, 84ம் ஆண்டுப் பிரச்சனைக்கு இந்த அயலிலுள்ள எல்லோரும் ஓட நான் தனிய வீட்டுக்கை இருந்தனான் தானே, எனக்குப் பயமில்லை. நீ ஓடு, கிழவனை அவங்கள் ஒண்டும் செய்யமாட்டான்கள்'' என்றார் தாத்தா. நாங்களும் சனங்கள் ஓடிய பக்கம் ஓடினோம். இதே நேரம் ஆகாயத்திலிருந்து ஹெலிகொப்ரர் சுடத்தொடங்கிவிட்டது. எங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நாங்களும், வேறு சிலரும் அருகிலிருந்த கோவிலுக்குள் ஓடிவிட்டோம். தொடர்ந்து ஹெலிச் சூடு. முருகா முருகா என்று எல்லோரும் ஓலமிடுகிறார்கள். நண்பகலானது. ஹெலியில் குண்டுகள் முடிந்துவிட்டன போலும். ஹெலிகொப்ரர் போய்விட்டது. ''இதிலை இருக்கிறது பாதுகாப்பில்லை, நாங்கள் வேறை எங்கையாவது போவம்'' என்று இருந்தவர்களில் ஒருவர் கூறினர். அவரின் சொல்லை எல்லோரும் கேட்டு ஹெலி வருமுன் எல்லோரும் போவோம் என்று சொல்லிக்கொண்டு ஓடினோம். சிறிது நேரத்தில் ஹெலி திரும்பவும் வந்துவிட்டது. ஹெலியிலிருந்து ஓரே சூட்டுச் சத்தம். ஷெல் வெடிக்கும் சத்தம். பசி தாகம் தெரியாமல் பயந்துகொண்டு மரத்தடியில் இருக்கிறோம்– நேரம் நான்கு மணியிருக்கும். ஒரு சில குரல்கள் தெருவில் கேட்கின்றன. ''பெடியங்களிலும் ஒருத்தன் செத்துப் போனான். சனங்களையும் ஆமி சுட்டுப்போட்டான். ஹெலியிலிருந்து ஷெல் அடிச்சு கன வீடுகள் சேதம்'' என்று இருவர் பேசிக்கொண்டு போகிறார்கள், இதைக் கேட்டதும் அம்மா, ''சனங்கள் உலாவுது. வீட்டிலை அப்பாவும் என்ன மாதிரியோ தெரியாது நாங்களும் போவம்'' என்று கூறியதும் எல்லோரும் வீட்டிற்குப் போனோம். எங்கள் வீட்டில் ஷெல் விழுந்திருந்தது, வீட்டிற்குள் ஓடிப்போய் தாத்தாவைப் பார்த்தோம். அங்கே தாத்தா இரத்த வெள்ளத்தில் விறைத்துக் கிடந்தார். அங்கே கண்ட காட்சி என்றும் என்னால் மறக்கமுடியாதது. (★)



கல்விக் கோயில் அர்ச்சகர்கள் — 1989

# Our Staff - 1989

PRINCIPAL:

Mrs. S. Subramaniam B. A. (Lond.) Dip-in-Ed, (Cey.)

DEPUTY PRINCIPAL:

Mrs. L. Kumaraswamy B. A. (Lond.) Dip-in-Ed. (Cey.)

Mrs. S. Balasingam B. A. Hons. (Cey.)
Mrs. T. Selvarajah B.A. (Lond) 1st Class M. A.
Mrs. R. Chinniah B.Sc. (Mad.) Dip-in-Ed. (Cey.)
Mrs. R. Balendra B. A. (Cey.) Dip-in-Ed. (Cey.)
Miss. K. Velupillai B. A. (Cey.) Dip-in-Ed. (Cey.)
Mrs. K. Mahendran B.Sc. (Mad.) Dip-in-Ed. (Cey.)
Mrs. R. Tharmarajah B.A. (Lond.) Dip-in-Ed. (Cey.)
Mr. S. Nadarajah B. Sc. (Cey.) Dip-in-Ed. (Cey.)
Mr. K. Nallnathan B. Sc. (Cey.)
Miss M. Sivakadadcham B.Sc. Hons (Cey.) Dip-in Ed. (Cey.)
Mrs. S. Gnanapragasam B.Sc. (Home Science)
Mrs. M. Rajaratnam B. A. (Cey.) Dip-in-Ed. (Cey.)
Mr. N. Yogarajah B. Com. (Cey.)
Mrs. S. Ganeshalingam B. A. (Cey.)
Mrs. V. Sivakumaran B. A. (Cey.)
Mrs. S. Mohanakrishnan B. Com. (Cey.)
Mrs. R Thirunavukarasu B.Sc. (Cey.)
Mrs. S. Jeganathan B. A, Hons. (Cey.)
Miss S. Sivapragasam B. A. Hons. (Cey.)
Mrs. R. Vevekananthan B. A. (Cey.)
Mr. K. Arulananthan B.Sc, Hons. (Cey.)
Mrs. S. Sinnathamby Tamil Trd.
Mrs. S. Chellathamby Tamil Trd.
Mrs. B. Somasundram Primary Trd.
Mrs. R. Mandaleswaran Primary Trd.
Mrs. N. Nallarulanantham Trmil Trd.
Mrs. P. Kanapathipillai Tamil Trd.
Mrs. M. Joachimpillai Tamil Trd.
Mrs. P. Ratnasothy Tamil Trd.
Mrs. L. Selvarajah Tamil Trd.
Mrs. S. Devadas English Trd.
Mrs. R Balakrshnan Maths Trd.
Mrs. S. Indrarajah Science Trd..

Mrs. T. Kanapathipillai English Trd.
Mrs. B. Pasupathy Tamil Trd.
Mrs. M. Vinayagampillai English Trd,
Miss T. Sellathurai Science Trd,
Mrs. S. Thiagarajah Tamil Trd.
Mrs. S. Sivapragasam Science Trd.
Mr. S. Sribalachandran Maths Trd.
Mr. R. Karunakaran Science Trd.
Mrs. S. Gopalakrishnan General Trd.
Mrs. A. Santhakumar Home Science Trd.
Mrs. P. Srisakthivel Maths Trd.
Mrs. I. Rajendran Special Trd. Commerce
Miss I. Thambiah Dip-in-Music (Sankeetha Pooshanam)
Mrs. P. Chinniah Dip-in - Art
Mrs. S. Paramsothy Maths Trd.
Mrs. K. Sivarajah Home Science Trd.
Miss K. Kandasamy Social Studies Trd.
Miss G, Thirunavukarasu Maths Trd,
Mrs. J, Emanuel R. C. Trd.
Mrs. G. Ariyaratnam Certificated Teacher (English)
Miss A. Varapragasam B. A. (Cey.)
Miss P. Sithamparapillai Dip-in-Dance
Miss P. Arumugam Uncertificated Primary
Miss M. Ratnam uncertificated Primary.

TEACHERS ON FACILITIES & SERVICES FEES

Miss P. Velautham B.Sc. (Cey.)
Miss R. Nadarajapillai B.Sc. (Mad.)
Miss K. Samynathan G. C. E. (A. L.)
Miss P. Sabaratnam G. C. E. (A. L.)
Miss K. Kulasingam G. C. E. (A.L.)
Miss S. Navaratnarajah G. C. E. (A. L.)
Miss S. Selvarajah G. C. E. (A. L.)

OFFICE:

Mrs. V. Selvarajah B. A.
Mrs. R. Sathiyanathan
Mr. R. Selvaratnam

LABORATARY

Mrs S. Ariyarajah
Mr. V. Ponnampalam

OTHERS:

Mr. K. Muthuvel
Mr. A. Rajendram
Mr. S. Nesalingam
Mr. A. Thamotharam

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

# கல்வி நிதியம்

### நன்கொடைப் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| திரு. | N. சிவஞானசுந்தரம் | ரூபா | 1000 |
| டாக்டர் | P. ஸ்ரீபத்மநாதன் | ... | 1000 |
| திருமதி | Y. கணேசலிங்கம் | ... | 1000 |
| திருமதி | K. கிருஷ்ணதாசன் | ... | 1000 |
| திருமதி | V. சுபேந்திரநாதன் | ... | 1000 |
| | ஒரு நலன் விரும்பி அன்பர் | ... | 10001 |
| திரு. | N. ஜெயசிங்கம் | ... | 1000 |
| திருமதி | J. சந்திரசேகரம் | ... | 1000 |
| திரு. | S. வீரவாகு | ... | 1000 |
| திருமதி | சிவக்கொழுந்து குடும்பம் | ... | 1000 |
| திரு. | N. பரராசசிங்கம் | ... | 1000 |
| திரு. | P. நவரத்தினராசா | ... | 3000 |
| திருமதி | R. விக்னராசா | ... | 2500 |
| டாக்டர் | A. சுந்தரலிங்கம் | ... | 1000 |
| திரு. | K. கணேசமூர்த்தி | ... | 1000 |
| திருமதி | V. சூரியகுமார் | ... | 5000 |
| திரு. | A. நாகரத்தினம் | ... | 500 |
| திரு. | N, பாஸ்கரன் | ... | 250 |
| திரு. | K. வேலாயுதபிள்ளை | ... | 100 |
| திரு. | A. மண்டலேஸ்வரன் | ... | 1000 |
| திரு. | R. சபாரத்தினம் | ... | 1000 |
| திருமதி | M. சிவப்பிரகாசம் | ... | 3000 |
| திரு. | R. செல்லையா | ... | 1000 |
| டாக்டர் | V. இராசரத்தினம் | ... | 1000 |
| திரு. | N. சந்திரசேகரம் | ... | 2000 |
| டாக்டர் | S. சண்முகநாதன் | ... | 2500 |
| டாக்டர் | K. முருகானந்தன் | ... | 2500 |
| டாக்டர் | S. சின்னத்துரை | ... | 50 |
| திருமதி | S. மாணிக்கம் | ... | 1000 |
| திருமதி | K. நவரத்தினம் | ... | 100 |
| திரு. | N. திருநாவுக்கரசு | ... | 100 |
| திருமதி | A. நடராசசுந்தரம் | ... | 250 |
| திரு. | A. சோமசுந்தரம்பிள்ளை | ... | 1000 |
| திரு. | N, இளங்கோவன் | ... | 1000 |
| திருமதி | P. பரமேஸ்வரன் | ... | 500 |
| திரு. | S. ஆனந்தக் குமாரசாமி | ... | 1000 |
| டாக்டர் | S. இராசேந்திரா | ... | 1000 |

# சைவ மன்றம்

காப்பாளர்: திருமதி சி. சுப்பிரமணியம் (அதிபர்)
ஆலோசகர்: திருமதி எம். இராசரட்ணம்
தலைவி: செல்வி. பா. அனுஷியா
செயலாளர்: செல்வி இ. நிலானி

இம்மன்றம் மாணவர்களிடையே சைவசமய நெறியை வளர்ப்பதோடு, சைவசமய கலாச்சார, முறைமைகளைப் பேணுவதில் முன்னின்று உழைக்கிறது. இப்பாடசாலையின் ஆரம்ப நோக்கம் இதுவாதலால் இதனைத் தொடர்ந்து அழிந்து விடாமல் பாதுகாப்பதில் மாணவர்களும் ஆசிரியர்களும் அயராது உழைக்கின்றனர். அதற்கிணங்க நவராத்திரி விழா, சிவராத்திரி பூசை, தைப்பொங்கற் திருநாள் என்பனவற்றைச் சிறப்பாக நடத்தி வருவது வழக்கம். இவ்வருடம் நாட்டின் பெரும் பிரச்சினைகளுக்கு மத்தியில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடத்த முடியாமல் போனது. வகுப்புக்கள் ரீதியாக கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. விஜய தசமியன்று அதிபர் ஏடு தொடக்கி வைத்தார். எமது பண்ணிசைக் குழு கச்சேரியை நடத்தியது. வழக்கமாக நடைபெறும் மாலை கட்டல், சடை நாகம் பின்னல், கோலம் போடுதல் போன்ற போட்டிகள் இம்முறை நடத்த முடியாமற் போனது காலத்தின் கட்டளை போலும்.

சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை, என்பன நடாத்தும் பரீட்சைகளில் சகல மாணவர்களும் பங்கேற்றனர். இவ்வருடம் விவேகானந்த சபை நடத்திய பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் பின்வருவோர் முதற் பரிசு பெற்றனர்.

(1) பா. அனுஷா (ஆண்டு 10)
(2) அ. சுந்தரவதனி (ஆண்டு 10)
(3) சி. கதிர்காமவள்ளி (ஆண்டு 4)

சாரதா சேவாச்சிரம குழுவால் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் புத்தகக் கண்காட்சி திருமன்றக் கட்டிடத்தில் நடத்தப்பட்டது. சுவாமியினுல் விவேகானந்தர் பற்றிய சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. சுவாமி அவர்கள் எமது நூல் நிலையத்துக்கு இந்து சமய நூல்கள் பலவற்றை அன்பளிப்புச் செய்தார்.

அவனருளாலே அவன்தாள் வணங்குவோம்.

இ. நிலானி
செயலாளர்



ரூபவாஹினி கலையரங்கில் வில்லிசைத்த பிள்ளைகளுடன்,
நெறியாண்ட ஆசிரியையும், நிகழ்ச்சித் தயாரிப்பாளரும்.



பாண்ட் வாத்தியமிசைக்கும் எங்கள் மாணவியர் குழு.





# விளையாட்டுக் கழக அறிக்கை - 1989

இவ்வாண்டிற்குரிய விளையாட்டுக் கழக அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மிக வும் மகிழ்ச்சியடைகின்றேன், இவ்வாண்டுக்குரிய எமது விளையாட்டுக் கழகத்துக்கான நிகழ்ச்சிகளின் கால அட்டவணையை நாம் தயாரித்திருந்தும் நாட்டின் அரசியல் குழப்ப நிலை காரணமாக எம்மால் அவற்றை நடாத்த முடியாமற் போனதையிட்டு நாம் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். இருந்தும் அதிபரினதும், மாணவர்களினதும் ஊக்கத்தினாலும் ஆர்வத்தினாலும் கொத்தணிக்குள்ளும் கொத்தணிகளுக்கிடையேயும் நடாத்தப்பட்ட போட்டிகளில் எம்மால் பங்குபற்ற முடிந்தது.

புலோலி கொத்தணியினால் நடாத்தப்பட்ட போட்டியில், எமது மாணவர்கள் மிகவும் திறமையாகச் செயலாற்றியிருந்தனர். 17 வயதிற்குட்பட்ட உடற்பயிற்சிப் போட் டியில் எமது குழு வெற்றிபெற்றிருந்தது. மெய்வல்லுனர் போட்டிகளில் எமது மாண வர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பற்றி திறமையாக வெற்றி பெற்றிருந்தனர். புலோலி கொத்தணிக்குள் எமது கல்லூரி மிகவும் கூடுதலான புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தது.

இதன் பின்னர் நடாத்தப்பட்ட வடமராட்சிக் கொத்தணிகளுக்கிடையிலான போட்டிகளிலும் எமது மாணவர் ஆர்வத்துடன் பங்கு பற்றினர். 19 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் எமது கல்லூரியைச் சேர்ந்த செல்வி கமலாம்பாள் சோமசுந்தரம் மிகவும் பிரமிக்கத்தக்க அளவில் தனது திறமை யைக் காட்டி வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு எமது வாழ்த் துக்கள். 15 வயதிற்குட்பட்ட பெண்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் செல்வி நகநந்தினி வரதராஜ் வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். அஞ்ச லோட்ட நிகழ்ச்சிகளிலும் எமது குழுக்கள் வெற்றி பெற்றிருந்தன. இதன் பின்னர் நடாத்தப்பட வேண்டிய மாவட்டங்களுக்கிடையிலான போட்டி குழப்ப நிலை காரண மாக நடைபெறவில்லை,

இவ்வாண்டில் எமது விளையாட்டுக் கழக நிகழ்ச்சிகளுக்கு சகல விதங்களிலும் உதவியும் ஆர்வமும் காட்டி உற்சாகப்படுத்திய அதிபர். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எனது நன்றியைக் கூறுகின்றேன்.

செல்வி த. செல்லத்துரை
செயலாளர்

★★

# சாரணியர் அறிக்கை - 1989

பலவித இடையூறுகளின் மத்தியிலும் இயன்ற அளவில் முன்னேற்றம் அடைந்து வரும் இவ்வியக்கத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வழக்கம் போல் இவ்வாண்டிலும் புதிய உறுப்பினர் எம் வழிகாட்டிகள் குழுவில் சேர்ந்து கொண்டனர். நாம் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை காலை வேளைகளில் ஒன்றுகூடி எமது பயிற்சிகளைப் பெற்றும், பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தும், ஆடிப் பாடி மகிழ்வதும் உண்டு. எமது ஆசிரியத் தலைவர்களில் ஒருவராக ஜனாதிபதி விருதுகளைப் பெற்ற திருமதி எஸ். பரஞ்சோதி அவர்கள் பணிபுரியக் கிடைத்த பாக்கியம் நாம் செய்த நற்றவம் என்றே கூறவேண்டும்.

இவ்வாண்டில், பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளாக நடத்திய பேடன் பவுல் அம்மையாரின் பிறந்த நாளை, வெகு விமரிசையாக இப்பாடசாலையிலேயே கொண்டாடினோம். வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற சாரணியர் பாசறையில் மூன்று ஆசிரியர்களும் பதின்மூன்று மாணவிகளும் பங்கு பற்றி மிக உபயோகமான அனுபவங்களைப் பெற்றுள்ளோம். மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரில் நடைபெற்ற வழிகாட்டிகள் தலைவர்களுக்கான பயிற்சியில் எமக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் பங்கு கொண்டு தம்மை நன்கு உறுதிப்படுத்திக் கொண்டனர்.

எமது பாடசாலை விழாக்களில் நாம் நமது பங்கை வழங்கி நற்பணியாற்றினோம். அவ்வவ் வேளைகளில் நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த எமது அதிபருக்கும், ஆசிரியர்கட்கும் நாம் என்றும் கடமைப்பாடுடையோம். இன்னும் எதிர்வரும் நாட்களிலும் இவை போன்ற நல்ல வாய்ப்புக்களைப் பெற்று, ஆர்வம் காட்டி, சேவைகள் புரிந்து நம் குழு புகழுடன் திகழ வேண்டி நிற்கிறேன்.

த. அனுஷியா
செயலாளர்

# சிறுதோழர் குழு அறிக்கை - 1989

சென்ற ஆண்டில் பலவித இடையூறுகளின் மத்தியிலும் இச் சிறு குழுவினராகிய நாம் முன்னேறி வருகிறோம், சிறு தோழர்களாகச் சிங்காரப் பாட்டிசைத்து சிரித்து மகிழும் நாம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையிலும் ஒன்று சேர்வோம். நாங்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து நம் வேலைகளைச் செய்வோம். கைப்பணி முதலுதவி முதலியவற்றைக் கற்று அவற்றிற்குரிய சின்னங்களைப் பெறுவோம்.

நாம் மலர்களாய் மலர்ந்து பறந்தும் பாடியும் ஆடியும் மற்றவர்களுக்கு உதவுவதற்குரிய பயிற்சி பெறுவோம். சென்ற ஆண்டில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கூட்டு வைபவத்தில் கலந்து கொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்தோம்.

எமது பாடசாலையில் நடைபெறும் வைபவங்களில் நாம் எமது பங்கை வழங்கி நற்பணியாற்றுகிறோம். இவ்வேளைகளில் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்த அதிபருக்கும் ஆசிரியர்கட்கும் நாம் என்றும் கடமைப்பாடுடையோம். எங்கள் குழு மேலும் பெருகி எல்லோருக்கும் உதவி, பெருமையுடன் விளங்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்

- செயலாளர்

# உயர்தர மாணவர் ஒன்றியம்

காப்பாளர்: திருமதி சி. சுப்பிரமணியம் (அதிபர்)

ஆலோசகர்: செல்வி கோமதி வேலுப்பிள்ளை

தலைவர்: செல்வி மீரா கதிரவேலு

செயலாளர்: செல்வி பிறேமரூபி கந்தையா

இரு நூறு அங்கத்தவர்களைக் கொண்ட எமது உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றியத்தின் 1989ம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பேணும் வகையிலும், உயர்தர வகுப்பு மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் வகையிலும் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கவியரங்குகள் போன்ற அம்சங்கள் சங்கக் கூட்டங்களிலே இடம் பெற்றன. எத்தனையோ ஆக்கபூர்வமான திட்டங்கள் இடப்பட்டிருந்தும், துரதிர்ஷ்டவசமாக எமது பகுதியில் அடிக்கடி இடம் பெற்ற அமைதியின்மை காரணமாக அவற்றை நடைமுறைப்படுத்த முடியவில்லை,

எமது மாணவர் ஒன்றியம் மனமுவந்தளித்த மதிய போசன விருந்தொன்றில் (ஒன்று கூடல்) வடமராட்சிக் கோட்டக் கல்வியதிகாரி திரு. பொ. வீரபத்திரன் அவர்கள் பிரதம அதிதியாயும், மற்றும் பல கல்வியதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களாயும் கலந்து எமது ஒன்றியத்தைக் கௌரவித்தமை மனங்கொளத்தக்கது.

எமது சங்க உறுப்பினர்களால், யாழ். நகரின் வரலாற்றுப் பெருமைமிக்க பல வழிபடு தலங்களையும், துறைசார் உற்பத்திச் சாலைகளையும் உள்ளடக்கிய கல்விச் சுற்றுலா ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

எமது ஒன்றியத்தின் பாரிய வளர்ச்சியில் பக்க பலமாக விளங்கித் தமது ஆதரவையும் ஆலோசனைகளையும். காலத்தையும் கருத்துக்களையும் அள்ளி வழங்கி அரும் பணிகள் புரிந்த எமது அதிபர், ஆசிரிய ஆலோசகர், மற்றும் மன்ற அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்,

பிறேமரூபி கந்தையா,
செயலாளர்

# மனைப் பொருளியல் மன்ற அறிக்கை - 1989

காப்பாளர்: திருமதி சி. சுப்பிரமணியம் (அதிபர்)

ஆலோசகர்: திருமதி சா. ஞானப்பிரகாசம்

தலைவர்: செல்வி பத்மராணி சுப்பிரமணியம்

செயலாளர்: செல்வி உமாதினி பேரானந்தம்

பொருளாளர்: செல்வி கோமதி நடராஜா

மனைப் பொருளியல் மன்றம் மாத இறுதி வாரத்து வெள்ளிக்கிழமைகளில் 1.30 மணியளவில் ஒன்று கூடுகிறது. இம் மன்றக் கூட்டங்களில் மனைப் பொருளியல் பற்றிப் பல்வேறு விஷயங்களில் பேச்சுக்கள் நிகழ்கின்றன. செய்முறை வேலைகளும் ஒழுங்கு செய்து காட்டப்படுகின்றன. எமது மன்றம் சென்ற வருடம் மனைப் பொருளியலின் ஓர் அங்கமான அமுக்க அடுப்பின் பிரயோகம் பற்றிய விரிவான விளக்கம் தரும் பொருட்டுப் பயிற்சியாளரைப் பாடசாலைக்கு அழைத்து விரிவுரைகளையும் செயல்முறைகளையும் நடத்தியது. இதனால் ஆசிரியர்களும். மாணவர்களும் பெரிதும் பயனடையக் கூடியதாய் இருந்தது.

எமது பாடசாலையில் நடந்த பொருட்காட்சியின் போது எமது மன்ற மாணவிகள் மனையலங்காரமும், உணவும், போசணையும், புடவையும், உடையமைத்தலும், குழந்தை பராமரிப்பும் போன்ற துறைகளில் சிறப்பாகப் பங்குபற்றிக் கல்வி அதிகாரிகளின் பாராட்டுதலைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி வைபவங்களின் பொழுதும், பிரிவு உபசார வைபவங்களின் பொழுதும், ஏனைய விழாக்களின் பொழுதும் சிற்றுண்டிகளும், தேநீரும் தயாரிப்பதிலும் பரிமாறுவதிலும் எமது மன்ற மாணவிகள் பெரிதும் உதவுகின்றனர். சென்ற வருடம் நடைபெற்ற தமிழ்த் தின விழா, உயர்தர மாணவிகளின் ஒன்றுகூடல் வைபவம், ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பிரிவு உபசார வைபவம் ஆகியவற்றுக்கு எமது மன்ற மாணவிகள் ஆற்றிய சேவை மிகவும் சிறப்பானது,

சென்ற வருடம் எமது மன்ற மாணவிகள் பாடசாலையில் நடைபெற்ற சமய ரீதியான விழாக்களின்போது உணவு தயாரித்தல், கோலமிடல், மாலைகட்டுதல், அலங்கரித்தல் போன்றவற்றில் பங்குபற்றியது முக்கிய அம்சமாக இருந்தது,

எமது மன்றம் எதிர்வரும் காலங்களிலும் மாணவர்களின் திறமையை வளர்ப்பதிலும் பல வேறுபட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலும் முயற்சி எடுக்க உத்தேசித்துள்ளது.

உமாதினி பேரானந்தம்
செயலாளர்

# விஞ்ஞானக் கழக அறிக்கை - 1989

காப்பாளர்: திருமதி சி. சுப்பிரமணியம் (அதிபர்)
ஆலோசகர்: திருமதி க. மகேந்திரன்
தலைவர்: செல்வி வி. மாலதி
செயலாளர்:: செல்வி கா. யசோதா

இம் மன்றம் விஞ்ஞான ஆய்வுகள், மாதிரியுருக்களைத் தயாரித்தல், விலங்கு தாவர மாதிரிகளைச் சேகரித்தல், விஞ்ஞான வினு விடைப் போட்டிகளிலும் பங்கு கொள்ளல், பொருட்காட்சிகளுக்கு பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் ஆர்வம் காட்டி வந்தது. வருடம் தோறும் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து வந்தது. கல்வியாளர்களை அழைத்து அவர்களின் உரைகளைக் கேட்கவும் சந்தர்ப்பம் அளித்து வந்தது. கடந்த காலங்களில் வடமராட்சியில் நடைபெற்ற பொருட்காட்சிகளில் நமது பாடசாலை பங்குபற்றி முதலிடங்களையும் பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றது.

அண்மையில் நாட்டுச் சூழ்நிலை காரணமாக நமது கழகம் எதிர்பார்த்த படி செயற்படச் சந்தர்ப்பங்கள் கிடையாததையிட்டு வருந்துகிறேன். இருந்தும் கஷ்டங்களின் மத்தியில் சென்ற வருட முடிவில் எமது கழகம் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ் மாவட்டத்திலுள்ள பல தொழிற்சாலைகளைப் பார்வையிடச் சென்றது குறிப்பிடத்தக்கது.

அமைதி கிட்டியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நமது கழகம் புத்துயிர் பெற்று ஒளிருமென்பது எனது உறுதியான நம்பிக்கை.

**கா. யசோதா**
*கழகச் செயலாளர்*

# பாரதி கண்ட தமிழ்

செல்வி சுஷாந்தி குலசிங்கம்
க. பொ. த. உயர்தரம் — கலைப்பிரிவு

பாரதி 20ம் நூற்றுண்டின் சிறந்த கவிஞன் எனும் பெயரினைப் பெற்றுக்கொண்டவன். பாரதிக்கு முற்பட்ட காலங்களில் இவனை விஞ்சிய பாவன்மைச் சான்றோர்கள் இருந்திருக்கிறார்கள். எனினும் அவர்களின் பாடல்கள் மக்கள் வாழ்வில் ஒட்டி உறவாடிச் செல்லாமையால் நிலைகொள்ளாமல் போய்விட்டன. பாரதி மெட்டுக்கூட்டி, பாட்டுப் பாணியில் எளிய சந்த அமைப்பிலும் நடையிலும் புதிய கருத்தில் செந்தமிழைத் தந்தான். தனது தமிழில் கண்ணனைத் தன் காதலனுக, சேவகனுக வெல்லாம் பாடித் துதிக்கின்றுன். ''பாட்டுக் கொரு புலவன் பாரதியடா'' என்று பாரத நேசமே வியந்து பாராட்டி நிற்கக் கூடிய விழுமிய தமிழ் கண்ட பாரதியின் பெருமையை எடுத்தியம்புவதற்குத் தமிழிற் சொற்களே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே
—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற போதினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

எனத் தமிழ் மணத்தின் சுவையை செந்தமிழ் நாட்டின் பெருமையைக் கூறி வெளிப்படுத்துகின்றுன் பாரதி. செந்தமிழைப் பேசுகின்ற மக்கள் வாழுகின்ற நாட்டில் பெருமைகளை எடுத்துப் பாட்டிசைப்பதன் மூலம் புதியதொரு தமிழைத் தருகின்றுன் பாரதி.

''கல்வி சிறந்த தமிழ் நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு''

எனச் செந்தமிழில் கவிச் சக்கரவர்த்தி கம்பனைப் படைக்கின்றுன். அவனை மட்டுமன்றி,

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்த
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு''

என வானம் அளவு உயரத்திற்குத் தமிழின் மணத்தைப் பரப்புகின்றுன்.

ஒரு கவிஞன் எவ்வாறு தமிழ் செய் செய்கிறுன் என்பதனை பாரதி,

''கள்ளையும் தீயையும் சேர்த்து —நல்ல
காற்றையும் வான வெளியையும்
சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் — பல
தீஞ்சுவைக் காவியம் செய்து
கொடுத்தார்''

என அழகு தமிழில் படைத்துள்ளான்.

பாரதி படைத்த தமிழுலகில் கவிதை மலர் பரிமணம் கமழ்கிறது. கவிதையை புதிய ஒரு பாதையில் திருப்பி அதற்கு மலர்ச்சியும் எளிய வடிவமும் கொடுத்த பெருமை பாரதியையே சாரும். மக்கள் மத்தியில் பாரதியின் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி, சிட்டுக் குருவி, கண்ணன் பாட்டு, ஊழிக் கூத்து, குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன முக்கியம் பெற்றுள்ளன. பாரதியின் பாடல்கள் அதிகமானவை விடுதலை வேண்டிப் பாடப்பபட்ட சுதந்திரப் பள்ளுகளாகவே காணப்படுகின்றன.

''வீர சுதந்திரம் வேண்டி நின்றார்—பின்னர்
வேறென்று கொள்வரோ''

எனத் தமிழ் படைத்ததும் பாரதியே,

சுதந்திரப் பள்ளிசைத்த பாரதியே பாரத தேசத்தில் காணப்பட்ட சாதி, சமயம், மொழி என்பவற்றில் ஏற்பட்ட குறைகளையும் சுட்டிக்காட்டியது,

''நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைத்துவிட்டால்

என நெஞ்சம் பொருமுவதிலிருந்து தெளிவாகின்றது. சாதிக்கொடுமைகள் நீக்கப்பட்டு மக்கள் ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும் என்பதற்கபக,

''தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்–இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்''

எனத் தமிழ் வடிப்பவனும் பாரதியே.

தமிழ் மொழியில் பாரதிக்கு உள்ள ஈடுபாடு அவனது படைப்புக்கள் மூலம் தெளிவாக்கப்படுகின்றது. தமிழ்மொழியில் பாரதி,

''யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்''

என உயர்த்திப் பாடியுள்ளான். பாரதி கண்ட தேமதுரத் தமிழோசை உலகம் எங்கும் பரவிய நிலையிலுள்ளது என்பது அவனது பாடல்கள் புலப்படுத்துகின்றன. கம்பன், வள்ளுவன், இளங்கோ எனும் உலகம் கண்டிராத சிறந்த புலவர்களை பூமிக்குத் தந்ததும் தமிழ் என்று பாரதி பாட்டிசைத்துள்ளான். எமது தமிழ் மொழி தெருவெல்லாம் முழங்கவேண்டுமெனில்,

''பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ் மொழியில்
இயற்றல் வேண்டும்''

என்று பாரதி ஆசை கொள்கின்றான்.

பாரதி தனது தமிழில் பெண்கள் அடிமையற்று சுதந்திரமாக வாழும் நிலையையே தருகின்றான்.

''ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ
மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்''

என பெண் விடுதலைக்குக் கும்மியடித்தவனும் பாரதியே.

''நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையுமந்நிலை
கூட்டி வைத்தார் வழி கூட்டிவிட்டார்''

எனப் பெண்களுடன் சேர்ந்து அடிமைத் தன்மையைத் தமிழால் சாடுகின்றான் பாரதி. பட்டங்கள் பெற்று, சட்டங்கள் செய்து, பாரினை ஆளும் பெண்ணினம் உதயமாக வழிசமைத்தவன் பாரதி என்று கூறுவது மிகவும் பொருத்தமானது.

தமிழ்க் கவிதை உலகிற்கு பாரதி உருவ உள்ளடக்கத்திலும், மொழி நடையிலும் ஏற்படுத்திய மாற்றங்கள் வியந்து பாராட்டப்பட வேண்டியவை. பள்ளி எழுச்சி, நவரத்தின மாலை பள்ளு, சிந்து எனப் பல பாடுதுறைகள், முறைகள் என்பவற்றைக் கவிதை உலகிற்கு அறிமுகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் முதன் முதலில் வசன கவிதை வடிவமாகிய உரைப்பாட்டினை வடித்துத் தந்தவனும் பாரதியே. இவைமட்டுமன்றி பெருங்காப்பிய, சிறுகாப்பிய முறையைப் போக்கி தமிழில் குறுங்காவிய இலக்கிய நெறியைப் புகுத்திய பெருமையும் பாரதிக்கே உரியது. மொழிநடையில் பாரதி யமகம், மடக்கு எனக் கடுமையான முறைகளில் கவிதைகளை ஆக்காது மெல்லிய சொற்களில் எவரும் அறியும் தொடர், அமைதி, விடயத்தை விளக்கும் நயம், இசை என்பவற்றைப் பயன்படுத்தி புதிய பாதை ஒன்றை அமைத்துக் கொடுத்தான்.

பாரதி பாப்பாக்களுக்கு பாடிய பாடல்களும் இன்றும் நினைவுகூரப்படுகின்றன. ''ஓடி விளையாடு பாப்பா'' எனக் கூறும் பாரதி,

''தமிழ்த்திரு நாடுதன்னை பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா;
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா''

என தேசப் பற்றையும் வளர்க்கின்றான். பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதி கண்ணன் பாடல்கள் மூலமாக கண்ணன் மேல் தான் கொண்ட காதலை வெளிக்காட்டுகிறான்.

''கண்ணன் மனைநிலையை தங்கமே தங்கம்
—அடி தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்;
எண்ண முரைத்து விடில் தங்கமே தங்கம்
—பின்னர்
எதெனிலுஞ் செய்வமடி தங்கமே தங்கம்''

எனப் பாங்கியைக் கண்ணனிடம் தமிழ்ப் பாவினுல் தூதுவிடுகின்றுன் மகாகவி பாரதி.

பல புதிய முறைகளில் புதிய வடிவங்கள் பல தந்து தமிழை வளப்படுத்திய பாரதி,

''வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே''

என வாழ்த்துப்பா இசைக்கிறுன். பாரதி கண்ட தமிழைத் தமிழராகிய நாம் எல்லோரும் நன்கு பேணிப் பாதுகாத்து வளம் படுத்தவேண்டியது எல்லோருடைய தலையாய கடமை என்பதனை உணர்ந்து பாரதியின் வழியைப் பின்பற்றி பயன்பெற செயற் படுவோமாக.

**

உருவகக் கதை:

## யார் பெரிது?

கோடீஸ்வரர் குமரப்பா தனது வீட்டை நவீனமயப்படுத்திக்கொண்டிருந்தார். அன்று அவரின் சமையலறையில் ஒரு நவீன மின்னடுப்புக் கொண்டுவரப்பட்டது. இது வரை காலமும் சாதாரண விறகடுப்பே சமையலறையில் இருந்தது.

புத்தம்புதிய பளபளப்போடும், கவர்ச்சியான தோற்றத்தோடும் பார்வைக்கழகாக இருந்தது மின்னடுப்பு. அதன் முகத்தில் தன்னைப்பற்றிய பெருமையும், ஆணவமும் பொங்கி வழிந்தது. அழகான சலவைக்கல் மேடையில் அது வைக்கப்பட்டிருந்தது. சற்று நேரம் கழிந்த பின்னர் ''சீச்சி இந்த அழகான இடத்தில் ஏனிந்தக் கரியடுப்பு. பார்க்கவே அருவருக்கின்றது''—தன்னிற்தானே முகத்தைச் சுழித்தது கரியடுப்பு இதைக் கேட்டு அவமானத்தால் தலைகுனிந்தது ''புதியன வரும்போது பழையனவுக்கு இது தான் கதியோ''—கரியடுப்பின் பெருமூச்சிது. போதாக்குறைக்கு வீட்டில் எல்லோரும் எப்போதும் மின்னடுப்பைப் பற்றியே பேச்சு. பார்த்தவர்கள் அந்த ஜப்பான் அடுப்பைப் புகழ்ந்தனர். கரியடுப்பு ஒரு மூலையில் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தது

சிவனே என்றிருந்த அடுப்பை மின்னடுப்பு வம்புக்கு இழுத்தது. ''ஏய்! புகை கக்கி வீடுவாசலையே கரியாக்கும் அடுப்பே! என்னைப் பார்த்தாயா, புகையில்லாமல், கரியில்லாமல் விரைவில் சமைக்க உதவுவேன். இந்த விஞ்ஞான உலகுக்கு ஏற்றவன் நான்தான்'' என்று நகைத்தது. இப்படி அடிக்கடி ஆணவத்துடன் குத்தற் பேச்சுக் களைக் கேட்டுக் கரியடுப்பு பொறுமையுடன் இருந்தது. பொறுத்தார் பூமியாள்வார் தானே!

அன்று முக்கியமான விருந்தினர்கள் வரப்போகிறுர்கள். வீட்டில் சமையலுக்கு ஆயத்தமானுர்கள்...... மின்சாரம் தடைப்பட்டது. வீட்டுத் தலைவிக்கு ஒரே எரிச்சல். கோபம் கோபமாக வந்தது. ''சீ இந்த அடுப்பால் ஒரு பயனும் இல்லை'' — அலுத்துக் கொண்டாள். ''இதுதான் சொல்லுவது இந்த நவீனசாதனங்களை நம்பக்கூடாது என்று.'' மின்னடுப்பை ஒரு மூலையில் ஒதுக்கிவைத்துவிட்டு பழைய கரியடுப்பை தூக்கி சரிசெய்து சமைக்கத் தொடங்கினுர்.

மூலையில் கிடந்த மின்னடுப்பை கரியடுப்பு மெல்லப் பார்த்தது. மின்னடுப்புக்கு அவமானம். முகம் கறுத்தது. கரியடுப்புக்கு அதனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ''தம்பி; அவமானம் வேண்டாம். உலகில் எல்லோரும் காரண நிமித்தம், கால தேச வர்த்தமானங்களுக்கு அமைவாக படைக்கப்படுகிறேம். நீ. நான் என்ற பேதங்களை மறந்து தம் கடமைகளைச் செய்யவேண்டும்''—இவ்வாறு கரியடுப்பு மெதுவாகக் கூறியது. ''என்னை மன்னித்துவிடு''என்றது மின்னடுப்பு. இரண்டும் அன்றுமுதல் ஒற்றுமையாக இருந்தன.

செல்வி பா. அனுஷா ஆண்டு 11 B







**ஆ. சரோஜினி**

1988 க. பொ. த (உ/த) பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்று, மருத்துவ பீடத்துக்கு தெரிவாகி, பாமதி நினைவுப் பரிசினைப் பெற்றுள்ளார்.

**க. மீரா**

1987 க. பொ. த (சா/த) பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் விசேட(D) சித்தியைப் பெற்று பாடசாலைக் கூட்டுறவு சங்க பரிசினைப் பெற்றுள்ளார்,

**க. சுகிர்தா**

1988 க. பொ. த (சா/த) புதிய பாடத்திட்ட பரீட்சையில் 6 பாடங்களிலும் விசேட (ஆறு D) சித்திகளைப் பெற்றுக் கொண்டார்.







**சு. மணிமேகலை**

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அகில இலங்கை ரீதியான இடைநிலைப் பிரிவு நாவன்மை போட்டியில் முதற் பரிசினைப் பெற்றுள்ளார்.

**சி. வாசுகி**

கொழும்புத் தமிழ்ச்சங்க அகில இலங்கை ரீதியான மேற்பிரிவு நாவன்மைப் போட்டியிலும், இலங்கை வங்கி பொன் விழா ஆங்கில கட்டுரைப் போட்டியிலும் முதற் பரிசுகளை பெற்றார்.

**பா. அனுஷா**

யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய ஆய்வு நிலையம் நடாத்திய உலக உணவு தின கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் யாழ் மாவட்ட முதற் பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

# புத்தர் அருளிய புனித நெறி

தெ. நாகேந்திரராசா B. A. Dip - in - Ed.

இமயத்தின் அடிவாரத்திலுள்ள கபில வஸ்துவில் சுத்தோதன மன்னனுக்கும், மகாமாயா தேவிக்கும் மகனைப் பிறந்து பௌத்தம் எனும் சிறந்தவோர் வாழ்க்கை நெறியை உலகுக்கு அளித்தவர் கௌதம புத்தர், சித்தாத்தர் என்பது இவரின் இளமைப் பெயர். கோத்திரப் பெயர் கௌதமர் என்பதாகும். புத்தர் என்பதன் பொருள் 'மெய்யறிவு பெற்றவர்' அல்லது 'விழிப்புற்றவர்' என்பதாகும். இவர் வாழ்ந்த காலம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் கி. மு. 6 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்துக்கும், கி.மு. 5 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்துக்கும் இடைப்பட்ட காலத்திலே இவர் வாழ்ந்திருக்கலாம் என்பது பொதுவாக ஏற்கப்பட்டுள்ளது.

உலகத் துன்பங்கள் எதுவும் அறியாத வகையில் அரண்மனையில் வளர்க்கப்பட்ட சித்தாத்தர், சத்திரிய இளவரசன் கற்க வேண்டிய கலைகள் பலவும் கற்றுத் தேறி மணப்பருவம் எய்தியகாலை மாமன் மகள் யசோதரைக்கும் இவருக்கும் மணவினை இனிது நிறைவேறியது. உலகுக்குப் புதியவோர் சமய நெறியை அருளப் பிறந்தவராதலால், ஒரு நாள் இவர் விதிவசத்தால் அரண்மனையிலிருந்து வெளிப்போந்தவிடத்து கண்ட நான்கு காட்சிகள் இவரின் உள்ளத்தின் அமைதியைக் குலைத்தன. தடியூன்றித் தள்ளாடியபடி வந்த முதியவர் ஒருவர், உடல் முழுவதும் கொப்புளங்கள் நிறைந்த நோயாளி ஒருவன், பிணமொன்றின் ஊர்வலம், காவியுடையுடன் ஒரு துறவி என்பனவே இவர் கண்ட நான்கு காட்சிகள்.

கலங்கிய உள்ளத்துடன் அரண்மனைக்குச் சென்றவருக்கு அரண்மனை வாழ்வு கசந்தது; அது சிறை வாழ்வாகியது. தான் கண்ட துறவிக் கோலத்தினைத் தானும் அடைய எண்ணினார். 'துன்பமே வாழ்க்கை; வாழ்க்கை எனும் கடல் துயரம் எனும் நீரால் ஆனது' எனவுணர்ந்தவர், ஒருநாளிரவு அரண்மனையை விட்டு வெளியேறினார். சித்தார்த்தரின் இவ் வெளியேற்றம் 'பெரும் புறப்பாடு' என வர்ணிக்கப்படுகின்றது. நெடுந்தொலைவு சென்று காட்டிற் கடுந்தவம் செய்தார். துயரமெனும் புதிருக்கு விடை காணுமல் எழுந்திருப்பதில்லை எனவெண்ணி அரச மர நிழலில் அமர்ந்தவருக்கு நாற்பத்தியொன்பதாம் நாளின் இறுதியில் உண்மை தெளிந்தது. துன்பத்துக்குக் காரணங்கள் எவை? இவற்றை வெல்வதற்கு என்ன செய்யவேண்டும்? என்பவற்றுக்கு விடை கண்டார். இதன் பின்னர் சித்தார்த்தர் முற்றறிவுபெற்ற புத்தராகிவிட்டார்.

சீடர்கள் பலர் சேர்ந்தனர். பதிதொறும் சென்று அறமுறைத்த புத்தர் கட்டுப்பாடுடைய துறவியர் சங்கமொன்றை அமைத்துக்கொண்டார். இத் துறவிகள் பிக்குகள் என அழைக்கப்பட்டனர். பிக்கு என்றால் 'இரந்துண்பவர்' என்பது பொருள். பிக்குகள் புடைசூழப் பலவிடங்களிலும் உபதேசங்கள் செய்து வந்த புத்தர் தன் எண்பதாம் அகவையில் அரசமர நிழலில் தியானத்தில் ஆழ்ந்தார். இத் தியான முடிவில் அவர் பரி நிர்வாணநிலையயடைந்தார் நிர்வாண நிலை என்பது பேரின்ப நிலை அல்லது துன்பமில்லாத நிலை எனப் பொருள் தரும். இது நிகழ்ந்த காலம் கி. மு, 486ஆம் ஆண்டுக்கும் கி. மு. 473ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டதென்பர். இதுவே பௌத்தம் எனும் நெறி தோன்றிய சுருக்க வரலாறுகும்.

## பௌத்தம் ஒரு அவைதீக நெறி

வேதங்களை முதன்மைப் பிரமாணமாகக் கொள்ளும் இந்துமத பிரிவுகள் வைதீகநெறிகள் எனப்படும். வைதீக மதங்கள் உலகு, உயிர் என்பனவற்றின் தோற்றம், ஒடுக்கம் என்பனவற்றை ஆராய்தற்கு காண்டல் (பிரத்தியட்சம்), கருதல் (அனுமானம்), வேதம் (ஆப்தவாக்கியம்) ஆகிய மூன்றையும் பிரமாணமாகக் கொள்கின்றன. ஆனல் பௌத்தம் காண்டல், கருதல் ஆகிய இரண்டையுமே பிரமாணமாக ஏற்றுக்கொண்டுள்ளது. வேதத்தை அது பிரமாணமாக ஏற்பதில்லை. இவ்வகையில் சமணத்தைப் போலவே பௌத்தமும் அவைதீக நெறியாகக் கொள்ளப்படுகின்றது.

புத்தரின் கருத்துக்களுக்கு முன்னோர்களின் ஞானமே மூலதனம் எனச் சிலர் கருதுவர். அவர் தனது கொள்கைகளை வகுப்பதற்கு வேதங்களையோ, உபநிடதங்களையோ எவ்விடத்திலும் மூலதனமாகக் கொள்ளவில்லை எனக் கருதுவர். தாம் ஒரு புது மரபை உண்டுபண்ணுவதாகவும், எவராலும் கூறப்படாத, அறியப்படாத ஒரு புது மார்க்கத்தை உண்டுபண்ணுவதாகவும் புத்தர் கருதியதாகக் கூறப்படுகின்றது.

புத்தர் தமது போதனைகள் வாயிலாகவே தனது கருத்துக்களை வெளியிட்டாரேயன்றித் தன் மதக்கொள்கைகளை எழுதி வைக்கவில்லை. பிற்காலத்திலேயே இவை பௌத்த ஞானிகளால் எழுதி வைக்கப்பட்டன. முக்கியமாகப் பாளியிலும், வடமொழியிலும் அதிகளவு நூல்கள் எழுதப்பட்டன, இவையன்றி சீனம். திபெத்தியம். மொங்கோலியம் ஆகிய மொழிகளிலும் பௌத்த தத்துவங்கள் எழுதப்பட்டன. இவ்வாறாகப் பதினைந்து நூற்றாண்டு காலப் பகுதியில் எழுதப்பட்ட பல நூல்களைக் கொண்ட நெறியாகப் பௌத்தம் விளங்குகின்றது.

## பௌத்தத்தில் உட்பிரிவுகள் தோன்றியமை

புத்தர் பரிநிர்வாணமடைந்த நூறு ஆண்டுகளின் பின்னர் 'வைசாலி' எனுமிடத்திற் கூடிய பௌத்தப் பேரவையில் கருத்துவேற்றுமைகள் தோன்றின. இதன் பெறுபேறாக முதன் முதலாக பௌத்தம் இரு பிரிவாகியதாகக் கூறப்படுகிறது. அப் பிரிவுகள் தேரவாதம், மகாசாங்கியம் என அழைக்கப்பட்டன. பழைய கோட்பாட்டைப் பின்பற்றுவோர் தேரவாத பௌத்தர் எனவும், மற்றையவர் மகாசாங்கியர் எனவும் அழைக்கப்படலாயினர். பௌத்த நெறியைத் தழுவி அந்நெறியை உலகில் தழைக்கச் செய்தற்கு முயன்ற பேரரசன் அசோகன் 'பாடலிபுரம்' என்ற இடத்திற் கூட்டிய பேரவையில் மேலும் கருத்து வேற்றுமைகள் தோன்றிப் பிளவுகள் ஏற்பட்டன. இதனால் மாறுபட்ட கருத்துக் கொண்டோர் வெளியேற்றப்பட்டனர். தேரவாத பௌத்தமே மரபுவழுவாத மதம் என நிறுவப்பட்டது.

இவ்வாறாகக் காலப்போக்கில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பிளவுகள் கருத்து முரண்பாடுகளானவை பதினெட்டு உட்பிரிவுகளைத் தோற்றுவித்துவிட்டன. இப் பிரிவுகளுள் மிக முக்கியமானவை நான்கு பிரிவுகளாகும். ஹீனயானம் என அழைக்கப்படும் வைபாடிகம், சௌத்திராதிகம் எனும் இரண்டும் மகாயானம் எனப்படும் விஞ்ஞான வாதம், மாத்தியமிகம் ஆகிய இரண்டுமாகிய நான்கு பிரிவுகளுமே இவையாகும். இவை ...விரச் சர்வாத்திவாதம், வச்சிரயானம் எனும் பிரிவுகளும் குறிப்பிடத்தக்கனவாகும் இப் பதினெட்டு உட்பிரிவுகளும் புத்தரின் போதனைகளையே தாம் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு, உண்மையில் ஒன்றுக்கொன்று வேறான கொள்கைகளையே பின்பற்றி வருகின்றன. இலங்கையில் ஹீனயானத்தின் செல்வாக்கேயுண்டு.

## நிலையாமைத் தத்துவம்

பௌத்தத்தின் உயிர்நாடியாக விளங்குவது பொருட்களில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களைப் பற்றி ஆராயும் நிலையாமைத் தத்துவமுமேயாகும். மாற்றம் என்பது அழிதல் அல்லது நீங்குதல் எனப் பொருள் தருகின்றது. நோய் மாறிவிட்டது என்புழி அதன் கருத்து நோய் நீங்கிவிட்டது அல்லது அழிந்துவிட்டது என்பதாகும். இம் மாற்றமானது எப்பொழுது கண்ணுக்குப் புலனாகின்றது? மாற்றம் சிறிய அளவில் நிகழும் போது கண்ணுக்குப் புலனாகாது. ஆனால் அம் மாற்றம் பெரிதாகும்போதுதான் கட்புலனாகின்றது.

மாற்றம் பொருள் முழுவதிலும் நிகழ்கிறதா? அல்லது பொருளின் சில பகுதிகளில் மட்டும் நிகழ்கிறதா? என்பதையும் புத்தர் ஆராய்ந்தார். ஆய்வின் முடிவின்படி மாற்றமென்பது ஒவ்வொரு பொருளிலும் உள்ளும் புறமும், மேலும் கீழும் அணு அணுவாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. ஆயின் இம் மாற்றங்கள் நிகழும்போது எம்மால் உணரமுடிவதில்லை. அது பெரிய அளவான தன் பின்னரே நாம் அதனைக் காண்கிறோம்.

பொருளொன்று மாறியதன் பின்னர் முதல் இருந்த பொருளே நிலைத்து நிற்கிறது எனக் கொள்வது தவறாகும். முன்பிருந்த பொருளே பின்னரும் உள்ளது எனக் கொள்ளின் மாற்றம் நிகழவில்லை என்றாகிவிடும். இதனைக்கொண்டு எப்பொருளும் தொடர்

ந்து எக்கணமும் நிலைப்பதில்லை என்பதும், தோன்றிய அக்கணமே அது தன்போன்ற இன்னொன்றைத் தோற்றுவித்துவிட்டு மறைந்துவிடுகின்றது என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று அழிகின்றது, இன்னொன்று தோன்றுகின்றது. ஆகவே நிலைபேறு என்பது பொய்யானது. நிலையாமை என்பது மெய்யானது. இதுவே புத்தர் கொண்ட முடிபு. எனவே நிலைபேறோ அவற்றுக்கு நிலைக்களமான பொருளோ எதுவும் கிடையாது. இம் மாற்றம் சித்துப் பொருட்களுக்கு மாத்திரமல்ல அசித்துப் பொருட்களுக்கும் பொருந்தும். எனவே நிலையாமையை நிலைபேறு எனக்கொள்வது அறியாமை. அன்று இளைஞனாக இருந்தவன் இன்று முதியவனாக இருக்கின்றான். புத்தர் பரிநிர்வாண நிலையடைவதற்கு முன்னர் கூறிய உபதேசம் இவ்விடத்திற் பொருத்தமுடையது......

"பூதங்களின் சேர்க்கையாலான எல்லாப் பொருள்களும் அழிவது திண்ணம். எனவே உலகப் பற்றுக்களிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். இதற்கு ஊக்கத்தோடும் உறுதியோடும் முயலுங்கள்."

## கடவுள் பற்றிய தத்துவம்

கடவுள் என ஒருவர் இலர் என்பது பௌத்தக் கோட்பாடாகும், உலகின் தோற்றம் கடவுளால் ஏற்பட்டதல்ல. அதன் தோற்றத்திற்கு கடவுள் தேவையற்றவர் என்பது புத்தரின் கருத்து. இவ்வாறு கடவுளை இல்பொருள் எனப் புத்தர் கருதியமைக்கு, புத்தர் காலத்தில் மக்கள் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள பிரமம் பற்றிய கருத்துக்களை விளங்கிக்கொள்ளாத நிலையில் கண்ட பொருட்களையும் கடவுளாகக் கொண்டு வணங்கி வந்தனர் எனவும், இம் மனநிலையை மாற்றி மக்களை உலகை நோக்கித் திருப்பும் நோக்குடனேயே கடவுளை இல்பொருளெனக் கொண்டார் எனவும் காரணம் காட்டுவார் உளர்.

புத்தரின் போதனைகளில் தாமே உலகத் தோற்றத்துக்குக் காரணம் எனவும், தன் மீது நம்பிக்கையும், பக்தியும் வைத்தால் வீடுபேறு நிச்சயம் என்றும், தன்னைச் சரண்புகுவோர் தன் நண்பர்கள் என்றும் கூறியதாக உள்ள பகுதிகள் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கனவாகும். எனவே கடவுட் கொள்கை எவ்வாறாக இருப்பினும் பௌத்தர்கள் புத்தரையே கடவுளாகக் கொள்கின்றனர். ஆனால் மகாயானம் பிரிவினரோ கொள்கை, நடைமுறை இரண்டிலுமே கடவுளை ஏற்றுக்கொண்டனர். எனவே இவ்வாறு பார்க்கும்போது பௌத்தம் கடவுள் இல்லாத மதம் என்ற கருத்தை முற்றுமுழுதாக எங்ஙனம் ஏற்க முடியும்?

அடுத்து பௌத்தரின் வழிபாட்டுமுறைகளை நோக்குதல் பயனுடைத்து. புத்தரைப் பின்பற்றிய பாமர மக்கள் அவருடைய வாழ்க்கைக் காலத்தில் அவரை ஒரு தெய்வமாக மதித்து வழிபடத் தொடங்கினர். அவர் பரிநிர்வாணமடைந்த பின்னர் அவரைத் 'தூபி', 'போதி' ஆகிய அடையாளங்களில் வைத்து வழிபடத் தொடங்கினர். இவற்றுள் 'தூபி' என்பது அவர் பரிநிர்வாணமடைந்தமையையும், 'போதி' என்பது மெய்யுணர்வு பெற்றமையையும் நினைவுறுத்துவனவாக உள்ளன. பௌத்தரின் வழிபாட்டு முறைகளாக வலம்வருதல், நெடுங்கிடையாக விழுந்து வணங்குதல், மலரிடுதல் என்பன அமைந்துள்ளன.

## ஆத்மா பற்றிய கருத்துக்கள்

பௌத்தரை 'நைராத்மியவாதிகள்' என அழைப்பர். 'நைராத்மிய வாதம்' என்பது ஆத்மா இல்லையென வாதிப்பதாகும். 'அநாத்ம வாதம்' எனவும் இதனை அழைப்பர். 'புறத்தே பொருட்கள் உள்ளன; அகத்தே ஆத்மா உண்டு' என்ற ஆத்மவாதத்தை நிராகரித்து, இடையறாது மாற்றமடைந்துகொண்டிருக்கும் இப் பிரபஞ்சத்தில் ஆத்மா என்ற நிலையான பொருளொன்று எங்ஙனம் இருக்கமுடியும்? என வினவுகின்றனர்.

ஓடுகின்ற நீரில் இரு முறைகள் ஒருவர் தன் காலினை வைத்தால் ஒரே நீரில் வைப்பதில்லையென்றும், காலைத் தூக்கி மறுமுறை நீருக்குள் கொண்டுபோவதற்கிடையில் முதலில் இருந்த நீர் போய் வேறு நீர் அவ்விடத்துக்கு வந்துவிடும் என்றும் பௌத்தர் கூறுவர். இவ்வாறு சதா மாற்றத்துக்குள்ளாகும் பிரபஞ்சத்தில் செயல் நிகழ்கின்றது; ஆனால் செய்வோன் இல்லை. ஓட்டம் நிகழ்கிறது. ஆனால் ஓடுவோன் இல்லை. பல குணவியல்புகளின் தொகுப்பே உயிர்

என்று குறிப்பிடுகின்றோம். இக் குணவியல்புகள் மாறும் தன்மை கொண்டவை. எனவே நிலையான ஆத்மா என ஒன்றில்லை.

இக் கருத்துக்கள் ஆய்வுக்குரியனவாகும். கன்மம் பற்றியும், மறுபிறப்புப் பற்றியும், வீடுபேறு பற்றியும் கூறும் பௌத்தம், ஆத்மா என ஒன்றில்லாத நிலையில் மறுபிறப்பையும், வீடுபேற்றையும் அடைவது எது? எனபது பற்றி தெளிவாக்கவில்லை. பிறவி உண்டாயின் பிறப்போனும் இருக்க வேண்டுமல்லவா? பறத்தல் நிகழ்கிறதெனில் பறவையும் இருந்தாகவேண்டுமல்லவா? எனவே கன்மம், மறுபிறப்பை ஏற்பதனுல் மறைமுகமாக ஆத்மாவையும் ஏற்றுக் கொண்டதாகவே கருதல் வேண்டுமென்று கொள்ள இடமுண்டு.

## கன்மமும் - மறுபிறப்பும்

பிறப்புக்கள் பலவாகும். ஒரு பிறப்பில் செய்த கன்ம பலனுக்கேற்பவே மறுபிறப்பு அமைகிறது. ஆனுல் வினையை வினைக்குரியானேடு சேர்க்க ஒரு இறைவன் வேண்டாம். வினை தானுகவே வினைக்குரியானை அடைய வல்லது எனக் கூறுவதன் மூலம் கன்மத்துக்குச் சர்வவல்லமையையும் பௌத்தர் அளிக்கின்றனர். பெருந்தொகையான பசுக்கள் நிற்கும் ஒரு தொழுவத்தில் ஒரு கன்றை விடின் அது எங்ஙனம் தன் தாயைத் தேடி அடையவல்லதோ அங்ஙனமே பழவினையும் தனக்குரியானை அடையவல்லது என்ற சமணர்களின் கருத்தே பௌத்தரின் கருத்துமாகும். மேலும் கன்மத்தளையில் இருந்து தாமாகவே தம் முயற்சி கொண்டு விடுபடலாம் எனக் கொள்கின்றனர்.

மறுபிறப்பு என்பது ஆன்மா ஒரு உடலை விட்டு மற்றொரு உடலைப் பெறுவதன்று. அவ்வாறு ஒரு பிறப்பில் இருந்து மற்றொரு பிறப்புக்கு உயிர் செல்வதில்லை. ஒரு உயிர் இறந்தபின்னர் பழைய உயிர் வாழ்க்கையின் பகுதியாக புதிய உயிர் வாழ்க்கையொன்று தோன்றுகிறது, இதுவே மறுபிறப்பாகும். ஒரு விளக்கின் சுடர், மற்றொரு விளக்கின் சுடரைக் கொழுத்தியபின்னர் தான் அவிந்து விடுவதற்கு இது ஒப்பானதாகும் என உதாரணம் காட்டுவர். எனவே புதிய உயிர் பழைய உயிரின் வினைப்பயனை நுகர்கின்றமையே மறுபிறப்பு என்பதாகும்.

## நிர்வாணநிலை (வீடுபேறு) பற்றிய விளக்கம்

நிர்வாணம் என்பதற்கு அணைதல், நூர்தல், குளிர்தல் என்பன நேரடிக் கருத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன. அடையாளம் எதுவுமேயில்லாமல் முற்றுக அழிந்து போதலே நிர்வாணம் எனக் கொள்வோரு முண்டு. இந்துக்கள் வீடுபேற்றை பேரின்ப நிலை எனக் கொள்ள, பௌத்தர் துன்பம் இல்லாத நிலை எனக் கொள்வர். மேலும் பூதவுடல் அழியாமலேயே நிர்வாணநிலையை அடையலாம். இந் நிர்வாணநிலையில் செய்யும் செயல்களிற் பற்றே, பற்றின் காரணமாக மறுபிறப்போ ஏற்படுவதில்லை. நிர்வாணநிலை பற்றி புத்தரின் போதனைகள் பின்வருமாறு அமைகிறது.

''மாசுமறுவற்ற, தூய்மையான, மாண்புடைய, மகிழ்ச்சியான ஒன்றே நிர்வாணம். இதற்கு ஈடிணையில்லை. இதனை அடைந்தவன் பின்னர் அதனை இழப்பதில்லை. இறுதியான வினையொழிவே பரிநிர்வாணம். என்வரை நன்னெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல் அமைதிக்கும், அகக் காட்சிக்கும், முற்றறிவுக்கும் நிர்வாணத்துக்கும் வழிகாட்டும்.''

நிர்வாணத்துக்கு வழியாகக் கூறப்படும் எண்வகை நெறிகளாக நற்காட்சி, நற்கருத்து, நல் வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி என்பன கொள்ளப்படுகின்றன.

## பௌத்தம் ஒரு வாழ்க்கை நெறி

புத்தரின் உபதேசங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. புத்தர் புதியதோர் சமயத்தை நிறுவ எண்ணவில்லையென்றும், தனது கோட்பாட்டை அக்காலத்தில் மக்களிடையே நிலவிய வழிபாட்டுக் கொள்கைக்கு வேறுனதாக அவர் கொள்ளவில்லை என்றும் கூறும் சில ஆய்வாளர்கள் வீடுபேற்றுக்கு உபநிடதத்தை விட தன் தத்துவங்களே நன்கு உதவ வல்லன என்றுதான் கருதினுர் என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

புத்தரின் உபதேசங்களில் உளவியலே பெருமளவுக்கு இழையோடுகிறது. ஆன்ம தத்துவவியல் பற்றி அவர் அதிக நாட்டம் செலுத்தவில்லை. வீணை தத்துவ ஆய்வு

களில் ஈடுபட விரும்பாத அவர் மக்கள் துன்பத்தைத் துடைப்பதற்கு உரிய வழிகளிலேயே உடனடி நாட்டம் செலுத்தினர். இதன் காரணமாகவே தருமசீலங்கள், யோகசாதனைகள், தியானங்கள் போன்ற ஒழுக்க நெறிகளை வலியுறுத்தினர். உலகெங்கும் காணப்படும் துக்கத்தைப் போக்கிக் கொள்ளும் வழிவகைகளை உபதேசித்து நல்வழி காட்டினர்;

பிறவித் துன்பம், மூப்புத் துன்பம், பிணித் துன்பம், இறப்புத் துன்பம், அன்பிலாரோடு தொடர்பு கொள்ளும் துன்பம், அன்புளாரைப் பிரியும் துன்பம், விரும்பியதைப் பெறமுடியாத துன்பம் எனத் துன்பங்களை பல்வகைப்படுத்திக் காட்டியுள்ளார் புத்தர். பற்றுக்களை விட்டொழித்தால் இத் துக்கங்கள் தீரும். இத் துக்க உற்பத்தியை பன்னிரண்டு இணைப்புக்கள் கொண்ட ஒரு சக்கரமாக உருவகித்துக் காட்டியுள்ளார்.

பஞ்சசீலங்கள் பற்றிக் கூறும் பௌத்தம் அவற்றைத் துன்ப நீக்கத்துக்கு ஒரு வழியாக வலியுறுத்துகின்றது. காமம், கொலை, கள், பொய், களவு ஐந்தையும் துறத்தல் பஞ்சசீலமாகும். ஆசை என்பது சிற்றின்ப வேட்கை, உயிர்வாழ் வேட்கை, அதிகார வேட்கை முதலிய யாவற்றுக்கும் காரணமாக அமைகிறது. எனவே ஆசையை அறுத்து ஒழுக்கத்தின் வழுவா நல்வாழ்க்கை நடாத்தின் பரிநிர்வாண நிலை நெருங்கி வரும்.

நல்வாழ்வுக்கு வழியாக எல்லையொன்றைப் பௌத்தம் வகுத்துள்ளது. கட்டில்லாத புலநுகர்ச்சியும், கடுந்தவமும் ஆகிய இருவகை எல்லைகளுக்கும் செல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்டதான ஒரு வழியே அதுவாகும். இதுவே துன்பநீக்கத்துக்கு வழியாகும். இதே வேளை உலகில் இன்பமே இல்லையென்று புத்தர் கூறவில்லையென்றும், எனினும் வாழ்வின் ஒவ்வொரு கூற்றிலும் யாதேனுமொரு வகையில் துன்பம் தவிர்க்க முடியாதவாறு கலந்துள்ளது என்றும் புத்தர் கருதியதாகச் சில ஆய்வாளர் கூறுகின்றனர். ''கடலுக்கு உவர்ப்புச் சுவையாகிய ஒரே சுவை உள்ளது போல் எனது கோட்பாட்டுக்கும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதாகிய ஒரே சுவையே உள்ளது'' என்ற புத்தரின் உபதேசம் இதனை உறுதி செய்கிறது.

புத்தர் அஹிம்சையை வலியுறுத்துபவர். உயிர்களை இம்சிக்காது அவற்றின் மீது கருணை காட்டவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினர். காலொடிந்த ஆட்டுக்காகக் கண்ணீர் விட்டவர் அவர். இவ்வாருக அன்பு, கருணை, அஹிம்சை என்பனவற்றைப் போதித்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டினர் புத்தர். இவ்வாழ்க்கையானது ஓர் உயர்ந்த அறவியல் வாழ்க்கையாக அமைந்துவிடுகின்றது.

## பௌத்தமும் இந்து மதமும் — ஒரு ஒப்பீடு

பௌத்த நெறிக்கும், இந்து மதத்துக்கும் இடையில் அடிப்படைத் தத்துவங்களில் வேற்றுமை அதிகமில்லையென்பது இந்திய தத்துவ வித்தகர் கலாநிதி இராதாகிருஷ்ணனின் கருத்தாகும்; இவர் கருத்துப்படி யாவற்றுக்கும் ஏதுவான மூலப் பொருளைப் பொறுத்தவரையில், உபநிடதம் கூறும் பிரமத்தைத்தான் புத்தர் 'கர்மம்' என்ற வேறான பெயரால் குறிப்பிடுகின்றார். பௌத்த தத்துவஞானியான நாகார்ச்சுனன் என்பவர் குறிப்பிடும் 'சூன்ய நிலை' என்பதற்கும் அத்வைத வேதாந்தி சங்கரர் கூறும் 'நிர்க்குணப் பிரம்மநிலை' (குணங்குறிகளைக் கடந்த பிரம்மநிலை) என்பதற்கும் அதிக வேறுபாடில்லை யென்பதும் ராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்தாகும்.

வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களில் வேள்விகள் முதலிய கிரியைகளையே பௌத்தம் தள்ளியுள்ளது. அதேவேளை வேதங்களையும், கிரியைகளையும் ஏற்றுக்கொள்ளாத வேறுசில இந்து மதப் பிரிவுகளும் உண்டென்பதையும் சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமாகிறது. ஹரியண்ணு என்ற மற்றொரு இந்திய தத்துவஞானி ''உபநிடதங்களிற் காணப்படும் கருத்துக்களைத் தர்க்கரீதியாக கூர்ந்து நோக்கினல் அவை எவ்வாருன முடிவுகளைத் தருமோ அக் கருத்துக்களைத்தான் புத்தரும் வெளிப்படுத்தியுள்ளார்'' எனக் கூறியுள்ளமையும் இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கதாகும்.

இந்துக்களின் கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை பௌத்தமும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே இதனை ஏற்றுக்கொண்டமை அக் கன்மக் கருத்துக்கள் இடம்

பெறும் உபநிடதங்களையே மறைமுகமாக ஏற்றுக்கொண்டதற்குச் சமமாகின்றது.

கடவுள் இன்மைக் கொள்கையைக் கொண்டுள்ளனவாக சாங்கியம் மீமாம்சம் ஆகிய இந்துமதப் பிரிவுகள் உள. இவை வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டுள்ள வைதீக நெறிகளாயினும் கடவுள் இன்மைக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. இந் நிலையில் பௌத்தம் கடவுளை ஏற்கவில்லை என்று கூறுவது வியப்புக்குரியதல்ல. இவ் விடத்தில் ஹீனயான பௌத்தர்கள் கொள்கையளவில் கடவுள் இல்லையென்கின்ற போதிலும் மகாயான பௌத்தர் கொள்கையிலும், நடைமுறையிலும் கடவுளை ஏற்றுக்கொண்டனர் என்பதைக் குறிப்பிடுதல் பொருத்தமானது. எனவே இந்துமதமும், பௌத்த மதமும் அண்மிய மதங்களே எனலாம்.

புத்தர் காட்சியாலும், அனுமானத்தாலும் அறியக்கூடிய விடயங்களிலேயே நாட்டஞ்செலுத்தினர் எனவும் நிச்சயமாகத் தெரியாத துறைகளில் வீண் தத்துவ ஆய்வுகளை மேற்கொள்ள விரும்பவில்லை என்றும் கூறுவர். ஆப்த வாக்கியம் (வேதம்) கூறுவனவற்றை அவர் ஆராயவுமில்லை, அக்கறை செலுத்தவுமில்லையே தவிர அவற்றை மறுத்துக் கருத்தெதுவும் வெளியிடவில்லை என்பர். எடுத்துக்காட்டாக பிரபஞ்சம் பற்றி அவரிடம் வினவப்பட்டபோதெல்லாம் அவர் முடிந்த முடிபாக எதையும் கூறவில்லை. உலகு நித்தியமானதா? எல்லையுடையதா? என்ற வினுக்களுக்கு விடையிறுப்பதற்கு வேதங்களை ஆதாரமாகக் கொள்ளாது மௌனத்தையே சாதித்தார்.

இந்து மதத்திலிருந்து பௌத்தம் வேறுபடும் இடங்களில் 'ஈசுரவாதம்', 'நிரீசுர வாதம்' என்பன குறிப்பிடத்தக்கன. கடவுள் உண்டெனை இந்துக்கள் கூறுதல் ஈசுர வாதம். பௌத்தர் இதனை ஏற்காதது நிரீசுரவாதம். அடுத்து ஆத்மவாதம், அநாத்ம வாதம் என்பதிலும் கருத்து வேறுபாடுண்டு. ஆத்மா உண்டென இந்துக்கள் வாதிடுவது ஆத்மவாதம். எதுவும் நிலையற்றதாக இருக்க நிலையான ஆத்மா இருக்கமுடியாதெனப் பௌத்தர் நிறுவுவது அநாத்மவாதம்.

மாற்றம், நிலைபேறு இரண்டுமே உள்ளவை என்பது சைவசித்தாந்திகளின் கருத்து. ஆனுல் பௌத்தத்தின்படி மாற்றம் என்பதே உண்மையானது நிலைபேறு என்பது எப்பொருளுக்குமில்லை, அவ்வாறு கருதுவது அறியாமை என்கிறது பௌத்தம். முற்றத்தில் விளுகின்ற பசிய இலையொன்று அப்படியே இருப்பதில்லை. அது சருகாக மாறி பின்னர் மண்ணேடு மண்ணுகி விடுகின்றது!

இந்து மதம் மூலப் பிரமாணமாகக் கொள்ளுவது வேதவாக்கையே, ஆனுல் பௌத்தம் அவ்வாறல்ல, பௌத்தத்துக்கு மூலம் புத்தி அல்லது அறிவாகும். எனினும் புத்தரின் மறைவுக்குப் பின்னர் இந்து மதம் வேத வாக்குக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போல, புத்தரின் உபதேசங்களையே பௌத்தம் வேதவாக்காகக் கருதி முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.

மறுபிறப்பு என்பது பௌத்தத்தின்படி ஆன்மா வெவ்வேறு உடல்களை ஏற்பதல்ல. ஒரு உயிர் இறந்தபின்னர் அதிலிருந்து புதிய உயிர் வாழ்க்கையொன்று தோன்றுவதே மறுபிறப்பு. ஆனுல் இந்து மதம் ஆன்மா அழியாதிருந்து பல்வேறு உடல்களைப் பெறுவதே மறுபிறப்பு என்கின்றது. மறுபிறப்புக்குக் காரணமான கன்மம் வினையாற்றல் மிக்கதாக உரியவரைத் தானுகவே சென்றடையும் சக்திமிக்கதாக பௌத்தத்தில் காட்டப்பட, இந்து மதத்தில் கன்மம் சக்தியற்றது: அதைச் சேர்ப்பிப்பவன் இறைவனே என்று குறிப்பிடப்பட்டுள்ளமை ஒரு பிரதான வேறுபாடாகும்.

இவ்வாருக இந்து மதத்துடன் பல்வேறு கோட்பாடுகளில் ஒத்த இயல்புகளையும் அதே வேளை கருத்து வேறுபாடுகளையும் கொண்டுள்ள பௌத்தம் ஒரு சிறந்த மதம் எனக் கொள்ளப்படுவதிலும் பார்க்க, சிறந்த வோர் வாழ்க்கை நெறி எனக் கருதப்படுவதே சாலப் பொருத்தமானது என்பது பல தத்துவ ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது. இவ்வகையில் உயர்ந்த அறவியல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நோக்கில் அட்டாங்க மார்க்கங்களையும், அன்பு, இரக்கம், மகிழ்வு, நடுநிலை ஆகிய நாற்பேரறங்களையும், கொல்லாமை, ஐம்புலவின்ப நுகராமை ஆகிய தர்மங்களையும் விதந்துரைக்கின்றது. பௌத்தம் நிலையாமையை வலியுறுத்தினுலும், அது என்றும் நிலைபேறுடைய மதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

★

## OUR EXAMINATION RESULTS — G. C. E. (A. L.) -1988

| Subjects | Number Sat | Number Passed | Passed Rate(100%) | Details | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | A | B | C | S |
| Pure Mathematics | 14 | 04 | 28·57 | | | 3 | 1 |
| Applied Mathematics | 14 | 07 | 50.00 | 3 | 1 | 2 | 1 |
| Physics | 36 | 17 | 47·22 | 1 | | 8 | 8 |
| Chemistry | 36 | 14 | 38.88 | | 1 | 2 | 11 |
| Botany . | 23 | 15 | 65·21 | | | 8 | 7 |
| Zoology | 23 | 11 | 47·82 | | | 5 | 6 |
| Economics | 76 | 68 | 88·47 | | 1 | 33 | 34 |
| Logic | 76 | 57 | 75·00 | | 1 | 24 | 32 |
| Commerce & Finance | 53 | 47 | 88·67 | | 8 | 18 | 21 |
| Accounts | 50 | 46 | 90.00 | 2 | 8 | 21 | 15 |
| Tamil | 15 | 14 | 93·33 | | | 7 | 7 |
| Hindu Culture | 18 | 13 | 72·22 | | 4 | 8 | 1 |
| Home Economics | 03 | 03 | 100 00 | | | 1 | 2 |

| Course | Number Sat | Number Passed | Number Qualified | Passed Rate (%) | Qualified Rate (%) |
|---|---|---|---|---|---|
| Commerce | 52 | 45 | 37 | 86·53 | 71·16 |
| Arts | 21 | 19 | 11 | 90·47 | 52·38 |
| Science (Bio.) | 19 | 11 | 09 | 57·9 | 47·36 |
| Science (Maths) | 15 | 06 | 04 | 40·00 | 26·66 |

## Students gained admission to the University 1989

1. Sarojini Arumugam (Medicine)
2. Thevagi Ganeshamoorthy (Agriculture)
3. Atputharanee Nadarajah (Bio.-Science)
4. Nilamathy Vythilingam (Physical science)
5. Sarojadevi Kandiah (Commerce)
6. Bavanee Kathirkamar (Commerce)
7. Indirani Thirunavukkarasu (Commerce)
8. Malarvilli Sithamparapillai (Commerce)
9. Yasothini Nadarajah (Arts)

## G. C. E. (O. L) December 1988

Number Qualified for Science — 29
Number Qualified for Commerce 45
Number Qualified for Arts 61
Best Performance:
Sukirtha Karthikesapillai (6 D)

## Year 5th Scholarship Results - 1988

1. Meenambigai S
2. Harendra S.
3. Ganesh T.
4. Ganendran S
5. Umasankar S.

# உங்கள் நோய்களுக்குச் சில அறிவுரைகள்

டொக்டர் எம். கே. முருகானந்தன்
M.B.B.S. (Cey.) D. Ac. (S.L.)

*மாணவிகளான உங்களுக்கு பலவிதமான நோய்கள் அவ்வப்போது ஏற்படுகின்றன. இவற்றில் சில நோய்கள் மாணவிகளுக்கு மாத்திரம் உரியன. ஏனையவை எந்த வயதினருக்கும் ஏற்படக் கூடியவை. இவை பற்றி முழுமையாக எழுதவேண்டுமேயானால் ஒரு முழு நூலே எழுத வேண்டியிருக்கும். எனவே உங்களுக்கு அடிக்கடி ஏற்படுகிற சில நோய்கள்பற்றி மாத்திரம் சுருக்கமாகக் கூறலாம் என எண்ணுகிறேன்.*

*இந்தக் கட்டுரையின் நோக்கம் நோய்கள் பற்றியும், அதற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் பூரணமாகவும், விரிவாகவும் சொல்வதல்ல. உங்களுக்கு ஏற்படுகிற சில நோய்களின் அறிகுறிகள் பற்றியும், அதற்கான காரணங்கள் பற்றியும், சில பரிகாரங்கள் பற்றியும் எளிமையான அறிமுகத்தைக் கொடுப்பதே.*

*இந்தக் கட்டுரையைப் படிப்பதன் மூலம், நீங்கள் நோய்கள் பற்றிய வீண் பயத்தையும் நீக்கிக் கொள்ளலாம்.*

### தலையிடி

தலையிடி என்பது ஒரு நோயல்ல; அது வேறு ஏதாவது நோயின் அறிகுறியாகவே இருக்கும். இளவயதில் ஏற்படும் பெரும்பாலான தலையிடிகள் பாரதூரமானவையல்ல.

நீண்ட நேரம் தொடர்ந்து படிப்பது, நித்திரையை அலட்சியம் செய்து படிப்பது, மங்கலான வெளிச்சத்தில் படிப்பது, ஆர்வமின்றிக் கட்டாயத்திற்காகப் படிப்பது போன்றவையும் தலையிடியை ஏற்படுத்தலாம்.

போதிய வெளிச்சமின்றிப் படித்தால் கண்களுக்கு பழு அதிகமாகி, அதனால் தலையிடி ஏற்படலாம். எனவே பிரகாசமான வெளிச்சத்திலேயே படியுங்கள். படிப்பறையில் சாதாரண பல்ப்புகளுக்குப் பதிலாக டியூப் லைட்டின் வெண்ணிற ஒளியில் படிப்பது நல்லது. பல்ப்பின் ஒளி கண்களை நேரடியாக உறுத்தும் வகையில் அமைக்கப்படக்கூடாது. பல்ப் தலைக்கு முன்புறமாகத் தொங்கவிடக் கூடாது. தலைக்கு மேற்புறமோ பின்புறமோ தாம் இருக்க வேண்டும். மேசை விளக்காக இருந்தால் ஒளி உங்கள் கண்களை உறுத்தாது, நேரடியாகப் புத்தகத்தில் விழும்படி அமைக்கப்பட வேண்டும்.

குறைந்தது ஏழு மணி நேரமாவது இரவில் தூங்குங்கள். நீண்டநேரம் தொடர்ந்து படிக்கவேண்டி நேர்ந்தால் இடையிடையே கண்களுக்கும், மூளைக்கும் ஓய்வு கொடுங்கள். உதாரணமாகச் சிறிது நேரம் படுத்திருந்து ஓய்வெடுக்கலாம்; ஆழமான சுவாசங்களை எடுக்கலாம்; காற்றோட்டமான இடத்தில் உலாவலாம் அல்லது இலேசான உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

இவற்றை அவதானித்தும் உங்கள் தலையிடி குறையவில்லையானால் வைத்திய ஆலோசனை பெறுங்கள். கண்பார்வைக் கோளாறு, பீனிசம் (sinusitis), காய்ச்சல் போன்ற நோய்களும் காரணமாயிருக்கலாம், மிக அரிதாகவே மூளையோடு சம்பந்தப்பட்ட பாரதூரமான நோய்கள் காரணமாகின்றன.

மனப்பளு (Stress), மனப்பதற்றம் (Anxiety), ஹிஸ்டீரியா (Hysteria). பசி, மாதவிடாய், பல் நோய்கள் போன்றவையும் தலையிடிக்குக் காரணமாகலாம்.

### கண் குத்து

கண் குத்தும் தலையிடியும் பொதுவாகச் சேர்ந்தே வருபவை. தலையிடிக்குக் காரணமாகக் கூறியவையே பெரும்பாலும் கண்குத்துக்கும் பொருந்தும்; சில வேளைகளில் கண் நோய்களும் காரணமாகலாம். எனவே தலையிடிக்குக் கூறிய முறைகளையே இங்கும் அனுசரித்துப் பார்க்கவும். அல்லது கண் வைத்தியரை அணுகுங்கள்.

### நெஞ்சு நோ

மாணவிகளான உங்களுக்கு ஏற்படும் நெஞ்சுநோ, அல்லது நெஞ்சு வலி ஆகியன பெரும்பாலும் ஆபத்தான நோய்களின் அறிகுறிகளாக இருப்பதில்லை. மாரடைப்பு (Heart Attack) இளவயதில் உண்டாவதில்லை. ஏனைய இருதய நோய்களும், நுரையீரல் நோய்களும் மாணவப் பருவத்தில் ஏற்படுவது அரிது.

உங்கள் நெஞ்சு நோக்கள் பெரும்பாலும் தசை, சவ்வு, எலும்பு ஆகியவற்றில் உண்டாகும் அழற்சியினுலேயே உண்டாகின்றன. உதாரணமாக கோஸ்டோ கொன்ரைட்டிஸ்(Costo Chondritis)என்ற நோயை குறிப்பிடலாம். மார்பு எலும்பில் உள்ள கசியிழையங்களில் ஏற்படும் அழற்சியாலேயே உண்டாகிறது. இது ஆபத்தானது அல்ல. சில தினங்கள் ஓய்வுடன் பனடோல், டிஸபிரின் போன்ற வலி நிவாரணிகளை உபயோகிப்பதால் மாற்றிவிடலாம்.

சில வேளைகளில் மனப் பதற்றம், ஹிஸ்டீரியா போன்ற மனுேவியல் காரணங்களாலும் ஏற்படலாம்.

### வயிற்று நோ, எரிவு

பெரும்பாலான மாணவிகள் அதிகாலையில் எழுந்து எதுவும் சாப்பிடாமலே ரியூசனுக்கும், அதன் பின் பாடசாலைக்கும் சென்று விடுகிறுர்கள். இதனுல் இரைப்பை நீண்ட நேரம் வெறுமையாக இருக்கிறது. அங்கு அமிலம் அதிகம் சுரப்பதால் குடற்புண்கள் ஏற்படலாம். குடற்புண்களால், வயிற்றில் எரிவு, புகைவு, நெஞ்சரிப்பு, வயிற்று முட்டு, உணவு ஜீரணமடையாமை போன்ற அறிகுறிகள் உண்டாகலாம்.

இவற்றைத் தவிர்க்க நேரந் தவருமல் உணவு உட்கொள்ளுங்கள். கடுமையான காரம், அதிகமான வாசனைச் சரக்குகள். ஆகியவற்றைத் தவிருங்கள். போதியளவு நித்திரை கொள்ளுங்கள். வீண் கவலைகளை நீக்குங்கள். பால் அருந்துங்கள். எலுமிச்சம் சாறு, அன்னுசி ஆகியவற்றைத் தவிருங்கள்.

அலுடுரொக்ஸ் (Aludrox), அக்ரால் (Actal) போன்ற அமில எதிர்ப்பு மாத்திரைகளை வைத்திய ஆலோசனையுடன் உபயோகிக்கலாம்.

### வயிற்றுக் குத்து

வயிற்றுக்குத்து பல காரணங்களால் ஏற்படலாம். உணவு ஜீரணமடையாமை கூட ஒரு காரணமாகலாம்.

அப்பென்ரிசைடிஸ் (Appendicities) அதிகம் ஏற்படுவதில்லையாலுலும் மனதில் இருக்க வேண்டிய ஒரு நோய். ஏனெனில் இந் நோய்க்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். இல்லையேல் அழற்சியுற்ற குடல் வளரி வயிற்றுக்குள்ளேயே வெடித்து ஆபத்தை உண்டாக்கலாம். இந்நோயில் வயிற்றுக்குத்து, பொக்குகளைச் சுற்றி ஆரம்பித்து பின் வலப்புற அடி வயிற்றில் நிலை கொள்ளும்.

சிறுநீர்க் குழாய்களில் கல் 'அடைசலால்' ஏற்படும் குத்து, ரீனல் கொலிக் (Renal Colic) எனப்படும். சிறுநீர்க் கழிப்பறைக்குச் செல்ல வெட்கப்பட்டு, போதிய நீர் அருந்தாது வரட்சியுடன் இருப்பவர்களுக்கு இது தோன்றலாம். இக்குத்து எந்தப் பக்கத்திலும் ஏற்படலாம். நாரியில் இருந்து வயிற்றுக்கோ, வயிற்றிலிருந்து சலவாயிலுக்கோ செல்வது போல இக்குத்து தோன்றலாம். சல எரிவும் கூட ஏற்படும், எனவே நிறைய நீர் அருந்துங்கள்.

### மாதவிடாய்க் குத்து:

பெரும்பாலான மாணவிகளைத் துன்புறுத்தும் நோய் இது. மாணவிகளுக்கு ஏற்படும் இக்குத்திற்கு பெரும்பாலும் வேறு நோய்கள் காரணமாயிருப்பதில்லை. இது சுயமாகவே தோன்றி சிறிது காலம் செல்ல (பெரும்பாலும் திருமணமாகி குழந்தை பிறக்க) மறைந்து விடும். கடுமையான மருந்துகள் தேவையில்லை.

சில பெற்றேர் இக்குத்தைத் தவிர்க்க மாதவிலக்கின் போது குளிக்க வேண்டாம் என்றும், பள்ளிக்கூடம், ரியூசனுக்குப் போக வேண்டாம் என்றும், சைக்கிள் ஓட்ட வேண்டாம் என்றும் தடுக்கிறுர்கள். சிலர் உணவுக் கட்டுப்பாடுகளை விதிக்கிறுர்கள். இவை தவறுனவை. நீங்கள் விரும்பியவாறு நடவுங்கள்.

குத்து ஏற்படும் போது பனடோல், பொன்ஸ்டன் (Poestan) போன்ற மாத்திரைகளை வைத்திய ஆலோசனையுடன் உப

யோகிக்கலாம். ஆயினும் கர்ப்பப் பையில் கட்டி (Fibroid) அல்லது வேறு நோய்கள் அதற்குக் காரணமல்ல என்பதை வைத்திய சோதனை மூலம் நிச்சயப்படுத்த வேண்டும்.

## வெள்ளை படுதல்

இதுவும் பல மாணவிகளின் மனத்தை உறுத்தும் ஓர் நோய். ஆனால் இந்த வெள்ளை படுதல் (Leucorrhoea) பெரும்பாலும் நோயால் ஏற்படுவதல்ல.

வெள்ளைபடும் போது அது சளி போல இருந்து மணம், சொறிவு ஆகியவற்றை ஏற்படுத்தவில்லையெனில் பயப்பட வேண்டியதில்லை.

பொதுவாக தடிப்பான துணிகளாலும் நைலோன் ரெட்ரோன் போன்ற செயற்கைத் துணிகளினாலும் தைக்கப்பட்ட உள்ளாடைகளைத் தவிருங்கள். மென்மையான பருத்தித் துணியிலாலான உள்ளாடைகளை அணிவதே எமது சீதோஷ்ண நிலைக்குப் பொருத்தமானது.

தடித்த துணிகளும், செயற்கைத் துணிகளும் சலவாயிலில் அழற்சியை ஏற்படுத்தலாம்; எனவேதான் அவற்றைத் தவிர்ப்பது நல்லது.

வெளிர்ப்பச்சை நிறமாகவோ, தயிர் கட்டி போலவோ இருந்தாலும்; துர்மணம் வீசினாலும், சலவாசலில் கடி அல்லது சொறிவை ஏற்படுத்தினாலும் அதற்கு வேறு நோய்கள் காரணமாயிருக்கலாம். இதற்கு வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

## தலைப் பேன்

பேன் உங்களை அணுகக் கூடாது என்றால், தலைமுடியைச் சுத்தமாக வைத்திருங்கள். அடிக்கடி கழுவிச் சுத்தமாக வைத்திருங்கள். அடிக்கடி தலைமுடியை வாருங்கள். சொடுகு, புண், அவிச்சல் போன்ற நோய்கள் தலையில் இருந்தால் அவற்றைப் பெருகவிடாது வைத்தியரிடம் காட்டிக் குணமாக்குங்கள். இல்லையேல் நல்ல பசளையிட்ட நிலத்தில் தாவரங்கள் செழிப்பாக வளருவது போல் உங்கள் தலையில் பேன்கள் பெருகத் தொடங்கிவிடும்.

உங்களுக்குப் பேன் இல்லாவிட்டாலும் கூட, மற்றவர்களுடைய துவாய், சீப்பு, பிரஷ், படுக்கை விரிப்பு போன்றவற்றை உபயோகித்தால் உங்களுக்கும் தொற்றிவிடும். எனவே உங்களுக்கென்று அவற்றைப் பிரத்தியேகமாக வைத்திருங்கள்.

பேனை இல்லாது ஒழிக்க நல்ல மருந்துகள் இருக்கின்றன. எனவே பேன் இருந்தால் உங்கள் வைத்தியரை அணுகுங்கள். ஒருவருக்கு மாத்திரம் வைத்தியம் செய்வதுடன் நின்றுவிடாது பேன் உள்ள ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கும் ஒரேநேரத்தில் மருந்திடுவது அவசியம்

## முகப்பரு

வளரும் பருவத்தில் உடலில் ஏற்படும் ஓமோன்களின் மாற்றங்களால், தோலுக்கு வழுவழுப்பையும் போசாக்கையும் அளிக்கும் நெய்ச் சுரப்பிகள் மேலதிகமாகச் செயற்படுவதாலேயே முகப்பருக்கள் உண்டாகின்றன. இருபது வயதளவில் முகப் பருக்கள் பெரும்பாலும் தானாகவே மறைந்து விடுவதால் வைத்தியம் அவசியம் இல்லை.

போட்டிப் பரீட்சைக்குத் தயாராகும் நேரங்களிலும், மனோவியல் தாக்கங்களாலும், மாத விடாய்க்கு முந்திய நாட்களிலும் பருக்கள் தோன்றுவது அதிகமாகலாம். எனவே மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.

சுத்தமான காற்றோட்டம், சூரிய வெளிச்சம், பசுங்கீரை வகைகள், பசுமையான காய்கறிகள் ஆகியவை முகப்பருக்கள் தோன்றுவதைக் குறைக்கும். முகப் பருக்களை ஒரு போதும் நசுக்கவோ உடைக்கவோ வேண்டாம். ஏனெனில் இதனால் மாறாத வடுக்கள் தோன்றி உங்கள் முகங்களை அலங்கோலமாக்கி விடலாம்.

முகப்பருக்கள் மிக அதிகமாக இருந்தால் மாத்திரம் வைத்தியரிடம் செல்லுங்கள். இல்லையேல் முற்கூறிய நடைமுறைகளை அனுசரியுங்கள்; அதுபோதும். முகப்பருக்களுக்கு வைத்தியம் 1 முதல் 6 மாதம் வரை நீடிக்கக்கூடும். எனவே மிக அவசியமானல் மாத்திரம் வைத்தியரிடம் செல்லுங்கள். பூசும் மருந்துகள், மாத்திரைகள் மாத்திரமின்றி, அக்யூபங்சர் சிகிச்சையும் கூட முகப் பருக்களைக் குணமாக்க உபயோகிக்கப்படுகிறது.

**மயக்கம்:**

நீண்ட நேரம் அசையாது அணிவகுப்புக்களிலும், பிரார்த்தனை மண்டபங்களிலும் நிற்கும் போது சில மாணவிகள் மயங்கி விழுந்து விடுவதுண்டு. இதனை Syncope என்பார்கள். கால்களில் இரத்தம் தேங்கி விடுவதால் மூளைக்குப் போதிய இரத்தம் செல்லாதிருப்பதாலேயே இம்மயக்கம்ஏற்படுகிறது. இதனை சுலபமாகத் தடுக்கலாம்.

நீண்ட நேரம் ஒரே நிலையில் நிற்கும் போது கால்களை ஆட்டாது, காலின் தசை நார்களை இறுக்கி, இளக்கிப் பயிற்சி கொடுத்தால் இரத்த ஓட்டம் தடைப்படாது; மயக்கமும் வராது.

**ஹிஸ்டீரியா:**

இதுவும் மாணவிகளிடம் அடிக்கடி காணப்படும் ஒரு நோய்தான். ஆனால் பலரும் இளம் பெண்களின் சில அடக்க முடியாத செயற்பாடுகளையும், கவலையையும், அழுகையையும் கூட தவறாகக் ஹிஸ்டீரியா எனச் சொல்கிறார்கள்.

உண்மையில் ஹிஸ்டீரியா என்றால் என்ன? சுகதேகியான ஒருவருக்கு உண்மையில் நோயில்லாத போதும் சில நோய்களின் அறிகுறிகள் ஏற்படுகின்றன. இது அவருக்கு ஏதாவது பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ அல்லது வேறு ஏதோ வழியில் அவருக்கு நன்மையையோ, இலாபத்தையோ ஏற்படுத்தும் காரணத்திற்காகவோ தான் ஏற்படுகின்றன. ஆனால் அதை அவர் வேண்டுமென்றே தெரிந்து கொண்டோ செய்வதில்லை. இதுதான் ஹிஸ்டீரியா.

அண்மையில் ஒரு மாணவி தனது பேச்சுத்திறனை திடீரென இழந்துவிட்டாள். அவளால் எதுவும் கதைக்கவோ ஏன் சப்தமெடுக்கவோ முடியவில்லை உறவினர்கள் அவளது மூளையில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுவிட்டதோ எனப் பயந்தார்கள். சிலர் சூனியம், செய்வினை, கோயில் குறைபாடு என்றும் கூறினார்கள். நிறைய (வீண்) முயற்சிகள் எடுத்தும் அதிக பணம் செலவழித்தும் சுகமடையவில்லை.

தீர விசாரித்தபோது சில பரிதாபகரமான உண்மைகள் வெளிப்பட்டன. அவள் தனது தாயை அண்மையில் இழந்து விட்டாள். தந்தை எப்போதோ இறந்து விட்டார். ஒரே அண்ணன் வெளிநாட்டில். தாயின் மரணச் சடங்கிற்கு வந்தவன், மீண்டும் விரைவில் சென்று விடுவான். அவன் போனபின், ஆமி காம்பிற்கு அருகில் உள்ள தனது வீட்டில் இருந்து கொண்டு தன்னையும் தனது இரு தங்கைகளையும் இந்திய ஒநாய்களிடமிருந்து காப்பாற்றுவது எப்படி என்ற கவலை அவளைப் பிடித்தது. அதுவே அவள் அறியாமலே அவளை ஹிஸ்டீரியா நோய்க்கு இட்டுச் சென்றது.

அதனைப் புரிந்தபின் மனோதத்துவமும் மருந்துகளும் இணைந்த வைத்தியத்தாலேயே நோய் குணமானது. எனவே கவலைகளையும் பிரச்சினைகளையும் மனதில் அடக்கி வைக்காது, மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு மன அமைதியைப் பேணுங்கள்.

இறுதியாக, இன்னும் பல நோய்களைப் பற்றிக் குறிப்பிடலாம்.

ஆனால் கட்டுரை நீண்டுவிட்டது. எனவே இத்துடன் இக் கட்டுரையை முடிக்கிறேன்.

ஆனால் உங்கள் மனத்தில் ஏதாவது நோய் பற்றிய சந்தேகங்களோ, பயங்களோ இருந்தால் அவற்றை மனத்தில் அடக்கி வைக்கவேண்டாம். உங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கலாம் என எண்ணாதீர்கள். அவர்களுக்கும் நோய்கள் பற்றிய பூரண அறிவு இருக்காது. ஆசிரியர்கள் சில நல்ல ஆலோசனைகளைக் கூறக் கூடும்.

ஆனால் உங்கள் பகுதி அரசாங்க வைத்தியர் அல்லது குடும்ப வைத்தியரிடம் ஆலோசனை பெறுவதே சிறந்தது. எதையும் ஒளிக்காது வெட்கப்படாது அவரிடம் உரையாடி உங்கள் உடல் நலத்தையும் உள நலத்தையும் பேணுங்கள்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

அதுபோல உங்கள் உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் நன்றாகக் கல்வி கற்க முடியும், உங்கள் எதிர்காலம் வளமாகவும், நிறைவாகவும் அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

—★—

# கலை: விஞ்ஞானம் - சில கருத்துகள்

குப்பிழான் ஐ. சண்முகம்

எமது பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்புகளில் கலை, விஞ்ஞானம் என்ற இந்தப் பிரிவுகள் நெடுங் காலமாகவே இருந்து வருகின்றன. மொழி, வரலாறு, இந்து நாகரிகம் போன்ற கலைப் பாடங்களைக் கற்போரே கலைகளில் ஈடுபாடு உள்ளவர்கள் என்றும் கணிதம், பௌதிகம், இரசாயனம் போன்ற விஞ்ஞான பாடங் களைக் கற்போருக்கும் கலைகளுக்கும் தொடர்பே இல்லை என்பது போன்றும் ஓர் அபிப்பிராயம் நிலவி வருகின்றது. சாதாரண மானவர்கள் மட்டுமல்ல புத்திஜீவிகள் எனச் சொல்லப்படுவோரில் பலருமே இவ் வாறே அபிப்பிராயப்படுகிறார்கள்' ஆனால் நடைமுறை அனுபவங்களில் விஞ்ஞானத் துறை மாணவர்களே கலைப்போட்டிகளில் பிரகாசிக்கும்போது அதிசயிக்கிறார்கள்: மூக் கின்மேல் விரலைவைக்கிறார்கள். இத்தகைய ஒரு ''முரண் நிலை'' எவ்வாறு ஏற்படுகிறது?

இன்றைய வாழ்வுச் சூழலில் விஞ்ஞா னக் கல்வியே வரவேற்கப்படுகிறது. விஞ் ஞானக் கல்வி பெற்றோரே லௌகீக வாழ் வில் கூடிய வசதிகளைப் பெறக்கூடியதாக இருக்கிறது. அவர்களே எமது சமூகத்தின் 'ஆதர்ஸ புருஷர்'களான டாக்டர்களாக ளாகவும், பொறியியலாளர்களாகவும் வரக் கூடியதாக இருக்கின்றது. எனவே சமூகத் தின் கவர்ச்சி மையமாக விஞ்ஞானக் கல் வியே திகழ்கிறது. எமது கல்வித் திட்டமே இந்த மையப் புள்ளியிலேயே இயங்குகிறது. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளை ஆதர்ஸ புருஷர்களாக்கவே முயல்கிறார்கள். எமது இளம் பரம்பரையில்துடிதுடிப்பானவர் களும், விவேகிகளும், விழிப்புணர்வு கொண் டவர்களும். மந்த புத்தி அற்றவர்களும் இந் தப் பேரலையில் அள்ளுண்டு போகின்றார்கள். இவர்களே வருங்கால விஞ்ஞானிகள்; இவர் களே வருங்கால தொழில் விற்பன்னர்கள்; இவர்களே வருங்காலக் கலைஞர்கள்.

இதற்கு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. உயர் விஞ்ஞானக் கல்வி பெறமுடி யாத கிராமப்புறங்களிலிருந்தும் இத்தகைய 'ஒளிமிகுந்தவர்கள்' தோன்றியுள்ளார்கள். இயல்பாகவே கலைப் பாடங்களில் நாட்டங் கொண்டு கற்றவர்களும் இவ்வாறு தேறி யுள்ளார்கள்.

எனவே, கல்வி கற்பிப்பிற்கு கலைத்துறை பாடங்களோ அல்லது விஞ்ஞானத்துறைப் பாடங்களோ காரணமல்ல என்ற முடிவுக்கு வரலாம். இயல்பான ஒளிமிகுந்தவர்களால் பிரகாசிக்கமுடியும். ஒருவேளை அவர்கள் கற் கும் பாடங்கள் அவர்களது இயல்பான திற மைகளை இனங்கான உதவலாம். அவற்றின் மீதான அவர்களின் அக்கறைகளை விசாலப் படுத்த உதவலாம்.

இங்கு ஒரு விடயம் அழுத்தப்படவேண் டும் உயர் வகுப்புகளில் விஞ்ஞானக் கல்வி கற்போருக்கு எமது கல்வித் திட்டத்தினால் நாம் அநியாயம் செய்கிறோம். எமது பாரம் பரிய சிறப்புகளை, கலைப் பெருமைகளை, விழு மியங்களுடனான பரிச்சயத்தை அவர்களுக்கு ஏற்படுத்தத் தவறிவிடுகிறோம். இதனால் அவர்கள் சமூக வாழ்வில் பிரவேசிக்கும் போது சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுப் போகிறார்கள். நாம் உயர் புருஷர்களென்ற தோர் கற்பனை மாயையில் ஆழ்ந்துவிடுகிறார் கள்.

நல்லவேளையாக கல்விப் பொதுத் தரா தரப் பத்திர சாதாரண தரங்களில் கலைப் பாடங்கள், விஞ்ஞானப் பாடங்கள் என்ற பிரிவு சில காலங்களுக்கு முன்பே அகற்றப் பட்டுவிட்டது. உயர் வகுப்புகளில் இது சாத் தியப்படாவிட்டாலும் முக்கிய பாடங்க ளோடு இணைந்ததாக விழுமியங்களைப் பற் றிய பாடங்களும் விஞ்ஞான பிரிவுகளில் கற்பிக்கப்படவேண்டும். அவ்வாறே ''மாறும் உலகைப் பற்றிய அறிவு'' கலை, வர்த்தகப் பிரிவுகளில் போதிக்கப்படவேண்டும்.

யாழ் நூலைத் தந்த எங்கள் விபுலானந் தரும் கீழைத்தேசக் கலைச் சிறப்புகளை எல் லாம் உலகிற்கு அறிமுகப்படுத்திய கலா

யோகி ஆனந்த குமாரசாமியும் விஞ்ஞானக் கல்வியினூடாகவே பொது வாழ்வில் பிரவேசித்தவர்கள். இயல்பாகவே ஒளிமிகுந்தவர்களான இவர்கள் தமது வாழ்வின் தேடலில் கலைஞர்களாகப் பரிணமித்தார்கள். எங்கெல்லாமோ புதைந்திருந்த இசையின் நுணுக்கங்களை எல்லாம் தேடிக் கண்டெடுத்து விபுலானந்தர் யாழ்நூலைத் தந்தார் மண்ணினை ஆராய்ச்சி செய்யவந்த ஆனந்த குமாரசாமி மறைந்திருந்த கலை வனப்புகளில் மனதைப் பறிகொடுத்து கலாயோகி ஆனந்தகுமாரசாமியானுர்.

உண்மையில் பார்க்கப்போனுல் கலை, விஞ்ஞானம் என்ற இந்தப் பிரிவு இல்லை என்றே சொல்லலாம். ஆழ்ந்த ஈடுபாட்டுடன், இலப்புடன் ஈடுபடும் எந்தக் காரியமுமே கலையாகிவிடுகிறது; வாழ்வே கலையாகிவிடுகிறது. ''கணிதச் சமன்பாடுகளில் நான் மூழ்கிவிடும்போது அதன் அழகுகளில் திளைக்கின்றேன்'' என்ருேர் கணித மேதை சொன்ஞன். சிந்தனையாளர் ஆர்தர் கோஸ்லரும், விஞ்ஞானி அல்பேர்ட் அன்ஸ்டீனும் இவ்வாறே வாழ்வைக் கலையாகக் கண்டார்கள்.

எனவே கலை விகர்ஷிப்பென்பது கற்கும் பாடநெறிகளைப் பொறுத்தல்ல. எதைச் செய்தாலும் அதில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளும் இலயிப்பே கலையாகின்றது துடிப்பானவர்கள், விவேகிகள், விழிப்புணர்வு கொண்டவர்கள். மந்தபுத்தியற்றவர்களினுலேயே இத்தகைய இலயிப்பை அனுபவிக்கமுடிகிறது. அவர்களே கலைஞர்களாகிருர்கள். ★

---

## மன நெருக்குவாரங்கள்

★ ச. ஸ்ரீபாலச்சந்திரன்

மன நெருக்குவாரங்களின் மத்தியில் எமது வாழ்க்கை – திருப்தியில்லை. ஏக்கங்களோடு சிறைப் பட்டுப்போன மனங்கள்– அலைந்தபடி. நேற்றைய நினைவுகள் மனப் புலத்தில் சமாதியாய் – இறுக்கமாக. அக்கரையின் பச்சை மீது எல்லோர்க்கும் ஆவல் – தணியாத மோகம். மேற்குத் திசையில் எங்கள் விசாலித்த முகங்கள் – சொர்க்கத்தின் எதிர்பார்ப்பு. மேற்றிசையில் அஸ்தமனம் என்கிறீர்களா? அவர்களுக்கு அங்குதான் உதயம். மண் மட்டுமா மாசுபட்டுள்ளன? மனங்களுந்தான்! பணம் வாழ்க்கையாகிப் போன பரிதாபம்.

சாம்பல் மேட்டில் இங்கு சரித்திரம் பூக்கிறது. இந்தப் போர்மேகம் தொடர்ந்திருப்பதில் பல சனங்களுக்கு ஆசை. ஆங்காங்கே அகதிகளாக வாழ அது வசதிதானே.

இந்தியாவுக்குப் போகின்ருர்கள். கங்கையிற் பாவத்தைக் கழுவவா? மக்காவுக்குப் போகிருர்கள், மசூதியில் மனதைத் துடைக்கவா? ரோம் வீதியில் விரைகிருர்களே, திருச்சபையில் பாவப்பலி கொடுக்கவா? உள்ளங்களுக்கு எத்தனை வெட்டு முகங்கள்! பரிமாணங்கள்.

அதிக புள்ளி பெற்ற மாணவனை அவுஸ்திரேலியா அழைக்கிறது. பட்டப் பகலில் பகிரங்கக் கொள்ளையிது. இலங்கைக்கு இதில் கவலையில்லை. எதற்குத்தான் கவலைப்பட்டது? கவலைப்பட்டு அழுதால் இப்பூமித் திட்டு நீருக்குள் மூழ்கி விடும் என்ற அச்சம், இலங்கை என்றதும் ஒரு சம்பாஷணை நினைவுத் தடத்தில் நீந்துகின்றது. ''இலங்கை தீவென்பது எதனுல்'' என்ற ஆசிரியரின் வினுவுக்கு ''நான்கு புறமும் கடலுல் சூழ்ந்ததனுல்'' என்பது மாணவனின் பதில். கடலோ கடனே இலங்கை சூழப்பட்டது உண்மைதானே?

பக்கத்து வீட்டுப் பையன் குடிகாரன். குற்றம் சுமத்திக் கொண்டிருந்தாள் ஒருத்தி. தன் பிள்ளையும் குடிக்கிருன் என்று அறிகிருள். இப்போது சுருதி மாறுகிறது. ''இப்போது யார் தான் குடிக்கவில்லை'' என்கிருள். பார்த்தீர்களா மன இசைத் தட்டு பக்கம் மாறுகிறது.

அன்னிய மண்ணில் உள்ள ஒருவனின் பேனு இரண்டு கடிதங்களை எழுதுகிறது. அன்புள்ள நண்பா! இங்கு நாம் படும் கஷ்டம் கோடி. உழைப்பது கஷ்டம். அடிமைப்பட்ட வாழ்க்கை. வந்தது ஏனென்றே தெரியவில்லை. தாய்க்கு எழுதும் கடிதத்தில், அம்மா! தம்பியை ஏன் இங்கு அனுப்பவில்லை. உடனடியாக அனுப்பி வை. மனம் என்னும் சொல்லை அடியாகக் கொண்டுதான் மனிதன் என்ற சொல் உருவானது போலும். அதனுற்தான் குழம்பிவிட்டான்.

★

## எம்மை நெருங்கும் கல்வி

இ. கருணாகரன்

முடக்குகள் சந்திகள் முக்கிய இடங்கள்
முழுவதும் விளம்பரப் பொருளாய்க் கல்வி
தடக்கி விழுந்தவன் நிமிர்ந்தே எழுந்தால்
தலையிலும் காலிலும் தடக்குப்படுவது ரியூட்டரிகள்.

பொழுதுகளெல்லாம் புலர்வதும் மறைவதும் - அந்த
புண்ணிய தலத்தில் ஒழுங்காய் நடக்கின்றது
பழுதுபட்டேபோகும் பிள்ளை, பள்ளிக்கூடம் சென்றுலே
பலமாய்ப் பேச்சு ஊரில் நடக்கின்றது.

வெள்ளிக் கிழமை கர்த்தாலென்றே கதையும்வந்தால்
வெள்ளி முகமாய் பிள்ளை துள்ளிக் குதிக்கும்
தப்பித்தவறி சனிதான் என்ருல் அந்தப்பிள்ளை
கண்ணீர் வடியும் கவலை முகத்தாய் வாடிப்போகும்

வந்தனம்செய்து எழுந்து குருவை வணங்கும்
வழிமுறைகொண்டு பள்ளியிற் பாங்கினில் வளரும் - அங்கே
தந்தனதாளம் தடுகிடதித்தோம் என்பன செய்து
தலையைக்கவிழ்த்து இறுகியே வாங்கினில் அமரும்.

ஒழுக்கம், பண்பு வாழ்க்கை முறைமை
ஒவ்வொரு நிலையும் கற்றற் படிகள்
முழுக்க இணையாப் பாதிப் படிப்பால்
மழுங்கிப் போகும் எங்கள் குடிகள்.

---

## விளையாட்டு

செல்வி இ. நிஸாந்தி

ஓடி ஓடி விளையாடுவோம்
ஒவ்வொருநாளும் விளையாடுவோம்
பாடி ஆடி விளையாடுவோம்
பாலர் நாமும் விளையாடுவோம்

தத்தித் தத்தி ஓடுவோம்
தவளைப் பாய்ச்சல் தெரியுமே
முயலைப்போல் தூங்கிடோம்
முயன்றிடாமை தெரியுமே.

ஒன்றுகூடி விளையாடுவோம்
ஒருவரையும் தவிர்த்திடோம்
இன்றுபோல் என்றுமே
இணைந்து நாமும் விளையாடுவோம்.

## மலர் ஆலோசனைக் குழுவினர்

திருமதி T. செல்வராசா
திருமதி R. பாலேந்திரா
திருமதி P. இரத்தினசோதி
திருமதி M. இராசரத்தினம்
திருமதி V. சிவகுமாரன்
செல்வி K. வேலுப்பிள்ளை
செல்வி M. சிவகடாட்சம்
செல்வி S. சிவப்பிரகாசம்

வணக்கம்

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே
புராணம் இதிகாசங்கள் எங்கே ஆகமங்கள் எங்கே
ஆத்தனை அறிவெங்கே அறை"

(i) Mother therasa } English
(ii) BAbuji
(iii) KANDY


"இந்துமகள்" நிலைபெற வாழ்த்துக்கள்

★ தரம்மிகு பாண்
★ உயர்தர பணிஸ்
★ உன்னத கேக்வகை
★ தன்னிகர் உணவுப் பண்டங்கள்

ஆகியவற்றிற்கு

ஏகோபித்த நிறுவனம்

# ஊமலன் பேக்கரி

வியாபாரிமூலை.


---


இந்துமகளுக்கு இனிய வாழ்த்துக்கள்

நினைவுச் சின்னங்களை
நிதர்சனமாக்கும்

★ கறுப்பு - வெள்ளை
★ வண்ண

புகைப்படக் கலையின் முன்னோடிகள்

நவீன தொழில் நுட்பங்களுடனும், நவீன கருவிகளுடனும்
தமது கூடத்திலே வண்ணப்பட பிரதி எடுக்கும்
ஒரே நிறுவனம்

# குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை.


---


வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் கல்வி நிதியத்தின் சார்பில் ஆசிரியர்
திரு. ந. யோகராசா அவர்களால் நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.